# ஆரூர் ஆழித்தேர்

31220



திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில்

வெளியீடு

# ஆரூர் ஆழித்தேர்

குடவாயில்
பாலசுப்ரமணியன். எம்.ஏ.,

&

"இன்றைய ஆழித்தேர்" - கட்டுரை

சு.ஸ்ரீதரன் B.A.,
செயல் அலுவலர்
அ/மி.தியாகராஜசுவாமி திருக்கோயில்

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில்
வெளியீடு

1989

# திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் ஆழித்தேரோட்ட விழா வெளியீடு
## 7-5-89

ஆசிரியர்: குடவாயில் பாலசுப்ரமணியன் எம்.ஏ.,
சரஸ்வதி மஹால் நூலகம்
தஞ்சாவூர் - 1

விலை - ரு 3/-

கிடைக்குமிடம் : அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்
திருவாரூர்
தஞ்சை மாவட்டம்

இந்நூலை உபயமாக அச்சிட்டுக் கொடுத்தோர்
சர்மாஸ் ஸானடோரியம் (கம்ப்யூட்டர்) ப்ரஸ்
கணேஷ்நகர், புதுக்கோட்டை - 622 001
போன்: 2659



அருள்மிகு தியாகராஜ சுவாமி



அருள்மிகு கமலாம்பாள்

கி.பி 1684 - 1712 வரை தஞ்சை மன்னராகத் திகழ்ந்த சாஹஜி மகாராஜா திருவாரூர்த் தியாகராஜரின் தேர் உலாவைப் பாடிய தெலுங்குக் கீர்த்தனை.]

**ராகம் - வசந்தபைரவி** **தாளம்:-ஆதி**

வீதிலோ வச்செனு
வசந்த தியாகுடு (பல்லவி)

வீதிலோ வச்செனு
வேடுக ஜீதா முராரே
மோதமு மீரனு
முத்து தேருமை நெக்கி (சரணம்)

ஸகல தேவதுலு
ஸந்நுதி ஸாயக
அகலங்க ஜன முலகு
அபயமு லிச்சுசு (சரணம்)

அகலங்க நிஜ ரூபுடம்பா
ஸகந்த ஸஹிதுடு
மகராங்க பிருத ஸாஹ
மஹீராஜகுல தெய்வமு (சரணம்)

திருவாரூர் தியாகராஜப் பெருமான் திருத்தேர் பவனிவருவதை போற்றி தஞ்சை சஹஜி மகாராசன் இயற்றிய தெலுங்கு கீர்த்தனையின் தமிழாக்கம் இயற்றியவர் டாக்டர் இரா. நாகசாமி.

**ராகம் - வஸந்த பைரவி தாளம் - ஆதி**

பல்லவி

வீதியுலா வந்தார்
வசந்த தியாகேசர் (வீதி)

அனுபல்லவி

வீதியுலா வந்தார்
வேடிக்கை காணவாரீர்
மிக்க ஆனந்தமாக
முத்துத் தேரினிலேறி (வீதி)

சரணம்

அமரகனங் களெங்கும்
அன்புடனே பாட
அனைத்து ஜனங்களுக்கும்
அபயகரமளித்து (வீதி)

கந்தனுடனமர்ந்த
அம்மையுடனே கூடி
மகரக் கொடியுடைய
மன்னன் சஹசி தெய்வம் (வீதி)

# திருவாரூர் தேர் காண திரளாக வருவீரே!

டாக்டர் இரா.நாகசாமி இயற்றிய பாடல்

ராகம் - ஆனந்த பைரவி

திருவாரூர் தேர் காண
திரளாக வ்ருவீரே
தியாகேசா அருள்பூண
மறவாது சகத்தீரே

-திருவாரூர்

மனுநீதி தனைக் காக்க
மகன் வீழ்ந்த திருவீதி
மாமன்னர் நாள் தோறும்
வலம் வந்த திருவீதி

-திருவாரூர்

ராகம் - பூபாளம்

வாகீசப் பெருமானும்
சீர்காழி பிள்ளையும்
பார்புகழ பெரும்பாடல்
பாடிவந்த திருவீதி

திருவாரூர்

ஆலால சுந்தரர்க்கு
அருட்பாவை பரவைதனை
அன்புடனே கொடுத்தருளி
ஆட்கொண்ட திருவீதி.

ராகம் சுருட்டி

நீரிட்டு விளக்கெரித்த
நின்மலனாம் நந்திதன்னை
பாருள்ள சைவரெல்லாம்
பணிந்தேத்தும் பெருவீதி

-திருவாரூர்

பெருமிழலைக் குறும்பருடன்
குண்டையூர்க் கிழவரென
திருத்தொண்டர் தொகையாக
திரண்டுவந்த திருவீதி

-திருவாரூர்

ராகம் சாரங்கா

பெரும் கங்கைதனைக் கொண்ட
பேரரசன் இராஜேந்திரன்
பரவையுடன் தேரேறி
வலம் வந்த திருவீதி

-திருவாரூர்

பார்புகழும் பரப்பிரும்மம்
பல்கலைத் தீக்ஷிதரும்
சாத்திரஞர் சாமாவும்
சேர்ந்து வந்த திருவீதி

-திருவாரூர்

ராகம் காபி

அரம்பையர் ஆடிவர
அருட்சைவர் கூடி உடன்
அடியார்கள் பாடிவரும்
ஆனந்த திருவீதி

அவ்வீதி தனில் ஐயன்
தியாகேசன் வருகின்றார்
எந்நாளும் இக்கோலம்
எங்கெங்கும் நிலைநிற்க

-திருவாரூர்.



தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர்

திருமிகு. மு. கருணாநிதி அவர்கள்



மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர்

திருமிகு. K.P. கந்தசாமி M.A அவர்கள்

தேர்க்கொத்தனார்கள்



திரு R. சண்முகம்



திரு G. வடிவேலு

கே.பி.கந்தசாமி எம்.ஏ.,
அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

# அணிந்துரை

திருவாரூர் எல்லைக்குட்பட்ட திருக்குவளை ஈன்றளித்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் முன்பு முதல் அமைச்சராக இருந்த காலத்தில், 20 ஆண்டுகளுக்கு மேலாக ஓடாதிருந்த திருவாரூர் கோவில் தேர் 1970 முதல் 1975 வரை ஓட்டப் பெற்றது. மீண்டும் 7 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின், நமது புதிய ஆட்சியில் இந்த ஆண்டு மே மாதம் 7-ந் தேதி தேரோட்டம் நடைபெற உள்ளது.

தமிழக ஆலயங்களில், தோன்றிய காலம் கூறமுடியாத அளவு பெருமையுற்றது ஆரூர் திருக்கோயில் என்று அப்பர் பெருமானே வியந்து பாடியிருக்கிறார். சமயகுரவர்கள் நால்வரின் பாடல்பெற்ற ஊரும் ஆரூரேதான். பண்டு தொட்டு தமிழகத்தில் நிகழ்ந்து வரும் தேர் திருவிழாக்களைக் குறிப்பாக, ஆரூரில் நடைபெறும் ஆழித்தேர் விழாவை சுவைபட எடுத்துக் கூறுகிறது. திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயில் வெளியிடான "ஆரூர் ஆழித்தேர்" என்னும் இந்த மலர்.

தேர் திருவிழாக்களின் உட்பொருள் அவற்றின் பின்னணி ஆகியவற்றை இந்த மலரில், குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களும், சு.ஸ்ரீதரன் அவர்களும் சுருங்கக் கூறி விளங்க வைத்திருக்கிறார்கள். மாமன்னன் இராஜேந்திர சோழனின் வெற்றிகளைப் பட்டியல் போட்டுக் காட்டும் ஆரூர் தியாகராஜர் திருக்கோயில் கல்வெட்டு ஒன்றை இந்த மலரில் நாம் காணும்போது,

"சிங்கள புட்பகம் சாவகமாதிய தீவுபலவினுஞ் சென்றேறி –
அங்குத் தங்கள் புலிக்கொடி மீன் கொடியும் –
நின்று சால்புறக் கண்டவர் தாய்நாடு"

என்ற பாரதியாரின் பாடல் நமது நினைவுக்கு வருகிறது.

எரிந்த தேரும்; எழுந்த தேரும் என்ற கட்டுரையில், 1926ம் ஆண்( தீவிபத்துக்குள்ளான பழைய தேரிலிருந்து தியாகப் பெருமானி திருமேனியை முத்துக் கொத்தனார் என்பவர் காப்பாற்றியதாகக் கூறப்படு செய்தி, உண்மையிலேயே எல்லோரையும் மெய்சிலிர்க்க வைக்கும் ஒ( நிகழ்ச்சியாகும். ஓவியத்தில் ஆரூர் திருவிழா என்ற கட்டுரை, 30( ஆண்டுகளுக்கு முன் இப்பெருவிழா எப்படி நடந்தது என்பதை நமக்கு காட்ச விளக்கங்களுடன் அழைத்துச் சென்று காட்டுகிறது.

தஞ்சை நூலகத்திலுள்ள ஆயிரம் மூட்டை ஆவணங்களும் மாவட் ஆட்சியர் அலுவலக மோடி (மராத்தி எழுத்து) ஆவணங்கள் சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ள மோடி ஆவணங்கள் ஆகிய அனைத்துட் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்றால், ஆரூர் கோயில், தேர் போன்றவை பற்றி 200 ஆண்டுக்கான முழு வரலாறும் வெளிவருவதோடு, சோழ மண்டல வரலாறும் வெளிவரும் என்று கூறப்பட்டிருப்பது வரலாற்று வல்லுநர்கள் கருத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும்.

ஆரூர் ஆழித்தேர் பற்றியும், தியாகப் பெருமான் ஆழித்தேரில் உலாவரும் அணி நெடுவீதி பற்றியும், அவர் தேரேறி திரிபுரம் எரித்த திறம்பற்றியும், ஆரூர் தேர் விழா பற்றியும் நாம் அறிவதற்கு இந்த மலர் பெருந்தூண்டுகோலாய் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. மலர் ஆசிரியர்களின் முயற்சி பாராட்டுதற்கு உரியதாகும்.

சென்னை,
28.4.1989.

(கே.பி.கந்தசாமி)

கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் செயலாளர்
வணிகவரி மற்றும் அறநிலையத்துறை

சென்னை-600 009
நாள்: 26-4-1989

ஆரூர் ஆழித் தேர் என்னும் சிறு நூல், தமிழகத்தின் தலைசிறந்த திருத்தேர் கொண்ட பழம்பெரும்பதியான திருவாரூர் தியாகேசப் பெருமான் உலா வரும் பெருந்தேர் பற்றிய நுட்பமான பல குறிப்புக்களைக் கொண்டுள்ளது. 'திருவாரூர்த் தேரழகு' என்பது நாடறிந்த முதுமொழி. இறைவனைத் தேரில் எழுந்தருளச் செய்து வீதிகளில் வலம் கொண்டு வருவது, அடியார்கள் கண்டு பங்குற்று மகிழும் நிகழ்ச்சியாக தொன்று தொட்டு தமிழகத்தில் இருந்து வருகிறது.

திருவாரூரில் தேரோட்டம் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருவதை சமய இலக்கியங்களும் வரலாற்று ஏடுகளும் சிறப்பாகப் பேசுகின்றன. 1926-ஆம் ஆண்டு தீயினால் விழுங்கப்பட்ட திருவாரூர் திருத்தேருக்குப் பதிலாக இன்று நாம் கண்டு மகிழும் தேர் 1930-ல் உருவானது. அறிவியல் முன்னேற்றத்தைப் பயன்படுத்தி இத்தேருக்கு இரும்பு அச்சுகளும் இரும்பு சக்கரங்களும் பொருத்தப்பட்டுள்ளன. தொண்ணூற்றாறு அடி மொத்த உயரத்துடன் உள்ள இத்தேரின் எடை 22 டன்கள் தான் என்றாலும், இதில் கட்டப்படும் பனஞ்சப்பை, மூங்கில், சவுக்கு, கயிறு, பொம்மைகள் போன்றவற்றின் எடையுடன் கூட மொத்தம் 300டன் எடையுடன் இது வீதிகளில் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதில் வியப்பேது! 1989-ஆம் ஆண்டு மே திங்கள் ஏழாம் நாள் திருவாரூர் தேர்த் திருவிழா நடைபெற வுள்ளது. இது சீரும் சிறப்புடன் நடைபெற இரவு பகலாக உழைக்கும் அனைத்து அன்பர்களும் பாராட்டுக்குரியவர்கள். தேரோட்டம் இனிது நடைபெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

கு. ஆளுடையபிள்ளை

# வாழ்த்துரை

வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., சென்னை-600 034
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

பஉஞ்ச பூதக் தலங்களுள் திருவாரூர்த் திருத்தலம் நிலத்திற்குரிய தலமாகும். மிகத் தொன்மையான காலத்தில் திருவாரூர்த் திருக்கோயில் தோன்றியது என்பதைத் திருநாவுக்கரசு பெருமான் தம் தேவாரத்தில் பாடியுள்ளார்.

"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவம் ஆன நாளோ
கருவனாய்க் காலனைமுன் சாய்ந்த நாளோ
சண்ணழலால் காமனையும் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரித்த நாளோ
மான்மறிக்கை ஏந்திஓர் மாதோர் பாதம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ?
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே"

எனத் தொடங்கி ஒருபதிகம் முழுதும் திருவாரூர்த் திருத்தலத்தின் தொன்மையையே வியந்து வினவியுள்ளார் திருநாவுக்கரசர்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமயக்குரவர் நால்வரும் பிறச்சமயச் சான்றோர்கள் மிகப்பலரும் திருவாரூர் பெருமானைப் பாடியுள்ள பாடல்கள் மிக உன்னதமானவை.

திருவாரூரும் அதனைச் சார்ந்த திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆலயத்திருத்தலங்கள் சப்த விடங்கத் தலங்கள் என வழங்கப்பட்டு வருகின்றன. திருமாலிடம் இருந்து பெற்று தேவேந்திரன் வணங்கி வழிபட்டு வந்த சோமாஸ்கந்தமூர்த்தியை வலாசுரனை வென்றதற்குப் பரிசாய் முசுகுந்த மன்னன் தமக்கு வழங்க வேண்டினான். தமது உபாசனா மூர்த்தியைப் பிரிய மனமில்லாத தேவேந்திரன் தன்னிடமிருந்த மூர்த்தியைப் போல் மேலும் ஆறு மூர்த்தங்களைச் செய்து

முசுகுந்தனனிடம் காட்டினான். "இவ்வுருவங்களில் நான்வேண்டிய திருவுருவமில்லை" என்று முசுகுந்தன் மறுத்துவிட, வேறுவழியின்றி தேவேந்திரன் தன் உபாசன மூர்த்தியை முசுகுந்தனுக்கு வழங்கி மற்ற ஆறு மூர்த்திகளையும் கூட முசுகுந்தனுக்கே வழங்கி விட்டான். திருமாலும், தேவேந்திரனும் வணங்கி வழிபட்டதான சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருவாரூரிலும் மற்ற மூர்த்திகளை மற்ற ஆறு திருத்தலங்களிலும் முசுகுந்தன் பிரதிட்டை செய்தான். அம்மூர்த்தங்களே சப்தவிடங்க மூர்த்தங்களாகத் திகழ்கின்றன. விடங்கர் எனில் உளியினால் செதுக்கப்பட்டுச் செய்யப்படாதவர், தானே தோன்றிய சுயம்பு என்பது பொருளாகும். திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் தியாச விடங்கர் ஆவார்.

இத்தகைய தியாகவிடங்கப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் பூங்கோயில் ஐந்து வேலி அளவிற்கு விரிந்து பரந்து இருக்கிறது. கோயில் ஐவேலி, திருக்குளம் ஐவேலி, செங்கழுநீர் ஓடை ஐவேலி என்று எல்லாமே பிரம்மாண்ட மானதாகத் திகழும் திருவாரூரில் தியாகப் பெருமான் வீதிவலம் வரும் ஆழித்திருத்தேரும் மிகப் பிரம்மாண்டமானதே. 90 அடி உயரமும் சுமார் 300 டன்கள் எடையும் கொண்டதுமான திருவாரூர்த் தேர் போன்ற பிறிதொரு தேரை நாம் புவியில்வேறு எங்கும் காண இயலாது. அதனால்தான் "திருவாரூர்தேர் அழகு" என்ற பழமொழியும் மக்களிடம் வழங்கக் காண்கிறோம்.

"ஊழித் தீ யன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்டதுஆரூரே"

என்கிறார் திருநாவுக்கரசர்.

திருவாரூரில் தியாகேசரின் திருத்தேர் வைபவத்தை திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தாமே முன்னின்று நிகழ்த்தியிருப்பதும், சுந்தரரும் திருத்தேர் வைபவத்தைப் பலகாலும் கண்டு பரவசப்பட்டிருப்பதையும் அவர்களுடைய வரலாறுகள் வாயிலாக நாம் அறிகிறோம். திருத்தேரின் வடம்பிடித்தால் கயிலாயத்திலும் வைகுந்தத்திலும் இடம் பிடிக்கலாம் என்பது நமது சமய நம்பிக்கைகளில் தலையாய ஒன்று ஊர் கூடித் தேர் இழுப்பதால் மக்களிடம் பேதங்கள் மறைந்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒற்றுமை உணர்வும் உண்டாகிறது.

இத்தகைய மிகப் பெருமைக்குரிய திருவாரூர் திருத்தேர் வைபவம் 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு போயிருந்தது. அதனை மீண்டும் 1970 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடத்திய பெருமை நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கே உண்டு

திருவாரூர் தியாகேசப் பெருமானின் அழகிய ஆழித்திருத்தேர் திருவீதி வலம் வரும் வைபவம் அண்மையிலும் ஆண்டுக்காலங்களாய் நடைபெறாமல் மீண்டும் 1982ஆம் ஆண்டிலிருந்து நின்றுபோய் இருந்தது. அதனை நிகழும் 1989ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி மீண்டும் நிகழ்த்த வேண்டும் என்று விரும்பி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அறிவுறுத்தியதற்கிணங்க இத்தேர் திருவிழா மே திங்கள் 7ஆம் நாள் தொடங்கி மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது. இச்சிறப்புமிகு வைபவத்தை ஒட்டி குடவாயில் பாலசுப்பிரமணியன் எம்.ஏ. அவர்கள் எழுதியுள்ள "ஆரூர் ஆழித்தேர்" நூலை ஆலய வெளியீடாக ஆலயத்தார் வெளியிடுவது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மிகப் பழங்காலத்திலிருந்தே திருக்கோயில்களில் திருத்தேர்களை அமைக்கும் திருப்பணியில் தைதேர்ந்த வல்லுநர்களாக நம் தமிழ்ப் பெரும் கலைஞர்கள் திகழ்வதை இந்நூலில் நூலாசிரியர் மிகச் சிறப்பாக வடித்துள்ளார். "இன்றைய ஆழித்தேர்" தேரோட்டத்திற்கு உகந்ததாக எப்படிப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரங்கள் எல்லாம் இணைப்பாக திரு சு. ஸ்ரீதரன் தொகுத்துக் கொடுத்திருப்பதையும் இந்நூலில் படித்து நான் மகிழ்ந்தேன்.

"திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் பாடியிருப்பதற்கு ஒப்ப நானும் திருவாரூர் ஆழித்தேர் திருவீதி வலம்வர இருக்கும் இப்பொன்னாளில், திருவாரூர்ப் பெருமானின் திருவடிகளை வணங்கி இறையடியார்கள் எல்லோரும் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று வாழப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

தி.வீ. இராஜாராம் பி.ஏ.பி.எல்,.
துணை ஆணையர்
அறநிலையத்துறை

தஞ்சாவூர்

பாயிரம், மலைச்சிறப்பு, நாட்டுச்சிறப்பு, நகர்ச்சிறப்பு என்பது காப்பிய வழிமுறையாகும். காப்பிய நகர்களில் தலைவனின் தலச்சிறப்பு கூறுவதே இயல்பாகும். இதன்வழி நோக்கினால் "திருத்தொண்டர் மாக்கதை" என்ற காப்பியத்தில் நகர்ச்சிறப்பில், திருவாரூர் திருநகர்ச் சிறப்பு கூறப்படுவதால், இதன் காப்பியத்தலைவனாம் "செஞ்சடைச் சென்னியானின்" சொந்தத்தலம் திருவாரூரே என்ற பழமை கலந்த புதுமை புலப்படுவதை அறியப்படும்போது வியப்பு மேலோங்குகின்றது.

இவ்வகையில், விடங்கர் உலாவரும் திருவீதிகளில், வேத ஓசையும், வீணையின் ஓசையும், சோதி வானவர் தோத்திர ஓசையுடன், கீத ஓசையும், செல்வவீதிச் செழுமணித்தேவர் ஓசையும் எல்லையின்றி எழவிருக்கும் இந்நாளில், திருவாரூர் தேர்ச்சிறப்பு பற்றிய நூல் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரின் திருக்கரத்தால் வெளியிடப்படுதல் மேன்மைமிகு தகுதியும், மிகுந்த சிறப்பும் வாய்க்கப்பெற்றதாகும்.

நூல் எழுதிய நுழைபுலத்தவர்க்கும், அதற்கு உதவிய மழைமனத்தவர்க்கும் எனது நன்றி.

(ஒ.ம்) தி.வீ.இராஜாராம் பி.ஏ.பி.எல்,.

தி. ஜெயராமன், B.A.B.L.
உதவி ஆணையர்,
அறநிலையத்துறை

நாகப்பட்டினம்

தொன்மையானது, வரலாற்றுச் சிறப்பு மிக்கது, திருமுறைகளில் பாடிச் சிறப்பிக்கப் பெற்றது, சைவ சமணத்தின் தலைமைப் பீடமென வழிபடபடுவது...... இத்தகைய சிறப்புக்களைப் பெற்றது திருவாரூர் அருள்மிகு தியாகேசன் திருக்கோவிலாகும். இதன் பெருமைக்கு பெருமை சேர்க்கும் அம்சங்களில் முதலிடம் வகிப்பது தேராகும். நாவுக்கரசர் பெருமானால் ஆழித்தேர் என பாடி பரவசப்பட்டதாகும் இத்தகைய தேரின் சிறப்பு அம்சங்களையும், சோழ மன்னர்கள் காலந்தொட்டு மராட்டிய மன்னர்கள் வரை தேரோட்டம் எவ்வாறு பெருஞ்சிறப்போடு நடைபெற்றது என்பதையும் அருமையான நூலாக திரு குடவாயில் பாலசுப்பிரமணியன் எழுதியுள்ளார். இந்நூலுக்காக அவர் தேடிக் கண்டுபிடித்துள்ள செய்திகள் நம்மை பெரும் வியப்பில் ஆழ்த்துகின்றன. திருவாரூர் திருக்கோவில் போன்று இந்த புத்தகமும் ஆன்மீகப் பெருமக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். இதே போன்று அருள்மிகு தியாகேசப்பெருமான் திருக்கோவிலின் நிர்வாக அதிகாரி திரு. சு. ஸ்ரீதரன் இன்றைய ஆழித்தேர் என்றும் தலைப்பில் ஓர் அருமையானக் கட்டுரையினையும் தந்துள்ளார். இந்தக் கட்டுரை அவர் திருவாரூர் தேரில் எவ்வளவு ஒன்றிப்போய் அதன் நுணுக்கங்களை கண்டறிந்துள்ளார் என்பதை நமக்குப் புரியவைக்கும். எதிர் காலத்தில் இத்திருக்கோவிலின் நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்பவர்களுக்கு தேர், தேரின் கட்டுமானப் பணிகள், தேரின் அலங்காரம், தேரோட்டைத்தை நடத்து விதம் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் ஓர் வழிகாட்டியாக அவர் கட்டுரை அமைந்துள்ளது. திருவாளர்கள் குடவாயில் பாலசுப்ரமணியன், ஸ்ரீதரன் ஆகிய இருவரையும் பாராட்டுவதில் பெருமை கொள்கிறேன்.

(ஒம்) தி. ஜெயராமன்

அ. ஜெகன்னாதராவ் திருவாரூர்

உதவி ஆணையர்/தக்கார்

அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

திருவாரூர் மக்கள் மட்டுமல்ல தமிழகத்தின் பெருமக்கள் அனைவரின் கனவும் நினவாகிறது. திருவாரூர் தேர் பவனி வரும் நாள் என்று வருமோ என ஏங்கிய நெஞ்சங்கள் களிப்பிலும் •வகையில் சுமார் ஏழு ஆண்டுகளின் இடைவெளிக்குப் பின்னர் முன்னிலும் சிறப்பாக சைவ சமயத் தலைவனின் ஆழித்தேர் நடைபெறும்போது, இதன் பெருமைகளை அணு அணுவாக சுவைக்கும் வண்ணம் நூலாக வடித்துள்ள திரு. குடவாயில் பால சுப்ரமணியன் தியாகேசன் திருவருளுக்கும், நம் பாராட்டுகளுக்கும் உரியவராகின்றார். இதே நூலில் பெருமைப்படத்தக்க அங்கமாக அமைந்துள்ள இத்திருக்கோவில் நிர்வாக அதிகாரி திரு. சு. ஸ்ரீதரன் கட்டுரை அனைவரையும் பெரிதும் ஈர்க்கும் வண்ணமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையில்லை. இந்தக் கட்டுரை திருவாரூர் தேரினை நிர்மாணிப்பது, இழுப்பது போன்ற செயல்கள்யாவும் சாதாராணமானது அல்ல என்பதுடன் இறையருளே அனைத்திற்கும் ஆதாரம் என்பது நன்கு விளங்கும். திருவாரூர் திருக்கோவில் போல திருவாரூர் ஆழித்தேர் போல் இந்த புத்தகமும் ஆன்மீக உள்ளங்களின் நிலைத்து நிற்கும். கட்டுரையாளர்கள் இருவருக்கும் என் வாழ்த்துக்கள்

(ஒம்) அ. ஜெகன்னாதராவ்

# இன்றைய ஆழித்தேர்

சு.ஸ்ரீதரன் பி.ஏ.,நிர்வாக அதிகாரி,
அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில், திருவாரூர்.

அன்றைய தினம் பங்குனி உத்திரத் திருவிழாவில் கொடியேற்றம். ஊரின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் கூடியிருந்தார்கள். அருள்மிகு சந்திரசேகரர், விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர் புறப்பாடாகி, கொடியேற்றம் நடைபெற்றது. அருள்மிகு தியாகராஜர் சந்நிதிக்கு அனைவருமாகப் போனோம். அங்கு தியாகராஜ சுவாமியே கூறுவது போல், கோயில் அர்ச்சகர், நாயனார், .... திருவாரூரின் அடிய நெடிய முடிய திருவீதிகளிலே, எம்முடைய தேரில் ஏறி, திருவுலாச் செய்ய நாம் திருவுள்ளங்கொண்டிருக்கிறபடியினாலே, பக்தர்கள் வந்து சிறப்புப் பெறவேணும்'' ... என திருவிழாப்பத்திரிகையை வாசிக்க, கோயில் கண்காணிப்பாளர் மாலையணிவிக்கப்பட்டு பரிவட்டம் கட்டி மரியாதை செய்யப்பட்டு இதனை எழுதிக்கொண்டார். அவர் சண்டிகேஸ்வரர் சந்நிதியில் வந்து இதனை வாசித்தார். பின்னர் திருக்கோயிலின் ராஜநாராயண மண்டபத்தில் அனைவருமாக அமர்ந்து கொண்டோம். எல்லோருக்கும் ஒரு கோவணமும் திருவோடும் வழங்கப்பட்டன. இதைப்பற்றி அங்கு இருந்த ஓதுவார் சிவாச்சாரியார் ஆகியோர்களிடம் கேட்ட போது அவர்கள் கூறியது, வியப்பினையும், மகிழ்ச்சியினையும் தருவதாக இருந்தது. இந்த உற்சவத்தைத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் வந்து இருந்து நடத்தினார்களாம். திருஞானசம்பந்தர் வந்து பந்தக்கால் முகூர்த்தம் செய்ததாகவும், திருநாவுக்கரசர் கொடியேற்றம் செய்து அன்றைய தினம் ஊர்ப்பிரமுகர்களுக்கு ஆளுக்கு ஒரு கோவணமும், திருவோடும் கொடுத்துக் கோயிலிலேயே தங்கச் செய்ததாகவும், கோயிலில் கொடுக்கும் சோற்றைத் திருவோட்டில் வாங்கி உண்டு விட்டுக் கோயிலிலேயே தங்கிப்பணியாற்றினால்தான், இந்த உற்சவத்தின் உச்சக்கட்ட நிகழ்ச்சியான 'ஆழித் தேரோட்டம்' நடத்தி முடிக்க இயலும் என்று கருதியே, அவர் இவ்வாறு செய்ததாகவும் கூறினார். இது மிகச் சரியான கருத்தென்பது தேரோட்டம் நடத்த வேண்டிய பொறுப்பிலிருந்த எங்களுக்கு போகப் போகப் புரியலாயிற்று..

தேருக்கென எல்லாப் பொருட்களுமே புதிதாகத் தயார் செய்ய வேண்டிய சூழ்நிலை. வடங்கள் புதிதாகச் செய்ய வேண்டுமென மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பணித்து விட்டார்கள். தேரில் கட்ட வேண்டிய நான்கு பெரிய குதிரைகள் இதர 148 பொம்மைகள் செய்தாக வேண்டும். தேருக்கென பனஞ்சப்பைகள் செய்ய பனைமரங்கள் வெட்டி வந்து

அறுத்துத்தயார் செய்ய வேண்டும். முட்டுக்கட்டைகள் ஏராளமாக வேண்டும். சாரடிக்கட்டைகள், பரப்புக்கட்டைகள் தயார் செய்ய வேண்டும். மூங்கில் மரங்கள் பத்து லாரி லோடுகளாவது வேண்டும்; சவுக்கை மரங்கள் வேண்டும். தேருக்கான தேர்ச்சீலைகள் தொம்பைகள், வாசல் மாலைகள் வேண்டும் **BHEL** நிறுவனப் பொறியாளர்கள் வந்து சோதித்து **Hydraulic Brakes** முதலியன பழுது பார்க்க வேண்டும். பெரிய பெரிய இரும்பு பிளேட்டுக்கள் தயார் செய்ய வேண்டும். 250 டன் தூக்கக்கூடிய ஜாக்கிகள் இரண்டு வேண்டும். புல்டோசர்கள், டிராக்டர்கள், லாரிகள், குடிதண்ணீர் லாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். தேரிழுக்க ஆயிரக் கணக்கில் ஆட்களைத்திரட்ட வேண்டும். கோயிலிலிருந்து தேரடி வரை பந்தல் கொட்டகை முதலியன போட வேண்டும். மின் அலங்காரங்கள் செய்ய வேண்டும். தேரிழுக்க வரும் பக்தர்கள், ஆயிரக்கணக்கில் வருகை தரும் பிரமுகர்கள், காவல்துறையினர் அனைவருக்கும் உணவளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இன்னும் எவ்வளவோ செய்யப்பட வேண்டும். அனைத்தையும் செய்து முடிக்க திருநாவுக்கரசர் கூறியபடிதான் செயல்பட வேண்டுமென உறுதி செய்து கொண்டேன். (படம் 1. தேர் முன்புறம் )*

இனி திருவாரூர் ஆழித்தேரின் அமைப்பு பற்றிப்பார்ப்போம். ஒவ்வொன்றும் 24 1/2 அடி நீளம் 2 அடி அகலம் 1 1/2 அடி உயரம் கொண்ட இரண்டு இரும்பு அச்சுகளில் 9 அடி விட்டமுள்ள 1 1/2 அடி அகலமுள்ள நான்கு இரும்பு சக்கரங்களின் மேல் தேர் அமைந்துள்ளது. தேரின் மரப்பகுதி நான்கு அடுக்குகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. கீழ்ப்பகுதி 20 அடி உயரம் உள்ளது. இாண்டாவது பகுதி 4 அடி உயரம் உள்ளது. மூன்றாவது பகுதி 3 அடி உயரம் உள்ளது. இதன்மேல் அமைந்துள்ள மேடைதான் நான்காம் பகுதி. இதன் மீதுதான் அருள்மிகு தியாகேசன் தேர் ஏறி அமர்ந்து வலம்வருவார். இது 7 3/4 அடி பக்கங்களைக் கொண்ட சதுர வடிவமானது. உயரம் 2 1/2 அடி, இதற்கு கீழே உள்ள மூன்று நிலைகளில் தான் தேர் கட்டுமானத்திற்கான கால்கள் (பனஞ்சப்பைகள்) நடப்படும். முதல்நிலை மேலிருந்து பார்த்தால் எண்கோண வடிவமாக இருக்கும். இரண்டாவது நிலைதான் தேரின் மேல்புற அலங்காரத்தின் குறுக்கு வெட்டுத்தோற்றம் போன்று 20 பட்டைகளாக காணப்படும். அதன் மேல் உள்ள மூன்றாவது நிலை கமல வடிவமாக அமைந்துள்ளது. (படம் 2. தேர் அமைப்பு)

இதில் கீழ்நிலையில் படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் ஒவ்வொரு மூலைக்கும் 9 கால்கள் வீதம் 36 கால்கள் பொருத்தப்படுகின்றன. இதற்கென துவாரங்கள் தேரில் உள்ளன. இந்த துவாரங்களின் உள், தேரின் உள்பக்கமாக மூன்று கனமான இரும்பு வளையங்கள் உள்ளன. இவற்றில்தான் பனங்கால்களின் முனைகள் செருகப்படும். இந்த நிலையில் உள்ள

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில்

திருவாரூர்

ஆழித்தேர் அடிபாகத் தோற்றம்



அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில்
திருவாரூர்.
ஆழித்தேர் மேல்பக்கத் தோற்றம்.



பனங்கால்கள் 18 1/4 அடி உயரம் உடையவை. இதற்கு அடுத்த நிலையில் இதேபோன்று ஒவ்வொரு மூலைக்கும் ஐந்து விதம் 20 கால்கள் செருகப்படுகின்றன. இந்த கால்களின் உயரம் 14 1/4 அடி ஆகும். இதன் மேல் உள்ள கமல வடிவமான நிலையில் நான்கு கால்கள் செருகப்படுகின்றன. இந்த நான்கு கால்களின் உயரம் கமலவடிவநிலை 3 அடியை இரண்டாம் நிலையிலிருந்து கழித்து 11 1/4 அடி ஆகும். ஆக மேல் மட்டத்தில் இவ்வாறு உள்ள மூன்று நிலைகளிலும் செருகப்படும் 60 கால்களும் ஒரே மட்டமாக அமையும். மேல்பக்கமும் இந்தக் கால்களில் கூர் வாங்கப்படும். மேல்புறம் உள்ள கூர்கள் சட்டக்கோர்வை எனப்படும் துளை போடப்பட்ட பனைமரம் அல்லது தென்னை மரங்களால் இணைக்கப்படும். இந்த சட்டக்கோர்வைகள் 10 துளை கோர்வை, 8 துளைகோர்வை, 6 துளே கோர்வை, 4 துளை கோர்வை, 2 துளை கோர்வை என அந்தந்த அளவுக்கு தக்கவாறு 10 அடி நீளத்திலிருந்து 32 அடி நீளம் வரை உள்ளவையாக செய்து பொருத்தப்படும்.

இவ்வாறு நிறுத்தப்படும் 60 பனங்கால்களின் மீதுதான் தேரின் மேல்புறம் கட்டப்படும், அமைப்புகள் அலங்காரங்கள் அனைத்தும் நிற்கும். இந்த தேருக்குள் இரும்பு வளையங்களில் செருகப்பட்டிருக்கும் 60 கால்கள்தான் மேற்கண்ட பாரம் அனைத்தையும் சுமக்க வேண்டும். எனவே தான் இவற்றிற்கு கூடுதல் சக்தி அளிக்கும் வகையில் 24 சவுக்கை மரங்கள், 60 அடி உயரமும் 2 அடி சுற்றளவும் கொண்டவை நான்கு மூலைகளிலும் மூலைக்கு 6 விதம் தேரின் உச்சியிலுருந்து கீழ்மரநிலை வரை கட்டப்படுகின்றன.

இவ்வாறு முதல் நிலை பனங்கால்கள் அமைக்கப்பட்ட பிறகு அதன் மீது மூன்று நிலைகள் பனங்கால்களும் சட்டக்கோர்வைகளும் சேர்த்து கட்டப்பட்டு தேரின் உள்கூடு நான்கு நிலைகளாக மரத்தேரின் மேல் 48 அடி உயரம் கட்டப்படுகிறது. அதன்மீது விமானம் போன்ற அமைப்பு (Dome) மரச்சட்டங்கள் மூலம் அமைக்கப்பட்டு அதன்மீது கலசம் பொருத்தப்படுகிறது. இந்த விமானம் போன்ற அமைப்பின் உயரம் 12 அடி ஆகும். விட்டமும் 12 அடி ஆகும். தேர் கலசத்தின் உயரம் 6 அடி. இவ்வாறு அமைக்கப்படும் தேரின் மொத்த உயரத்தை பின்வருமாறு கணக்கிடலாம்.

| | |
|---|---|
| மரத்தேர் | 30 அடி |
| விமானம் வரை உள்ள தேர்சீலைகளால் அலங்கரிக்கப்படும் பகுதி | 48 அடி |
| விமானம் | 12 அடி |
| தேர் கலசம் | 6 அடி |
| ஆகக்கூடுதல் | 96 அடி |

இவ்வாறாக அலங்கரிக்கப்பட்ட தேரின் உயரம் 96 அடி ஆக அமைகிறது.

மரத்தேரின் எடை இரும்பு அச்சுகள் சக்கரங்கள் உள்பட 220 டன்களாகும். இதன் மீது 5 டன் எடையுள்ள பனஞ்சப்பைகளும், 50 டன் எடையுள்ள மூங்கில்களும் சுமார் 10 டன் எடையுள்ள சவுக்கு மரங்களும், ஒரு டன் எடையுள்ள கயிறு அரை டன் எடையுள்ள துணிகள் முதலியன உபயோகப்படுத்தப்படுகின்றன. முன்புறம் கட்டப்படும் குதிரைகள், யாளி, பிர்மா போன்ற பொம்மைகள் மற்றும் நான்கு புறமும் கட்டப்படும் அலங்கார தட்டிகள் ஆகியவற்றின் எடை சுமார் 5 டன்களாகும். இவை தவிர தேரைச்சுற்றி இரும்பு கயிறு ஹைட்ராலிக்பிரேக் போன்ற இரும்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனவே தேரின் எடை சுமாராக 300 டன்கள் எனக் கொள்ளலாம். ஆழித்தேரில் குதிரைகள், பொம்மைகள், அலங்கார தட்டிகள் ஆகியவை கீழ்க்கண்ட விபரப்படி கூடுதல் 68 கட்டப்படுகின்றன.

| | |
|---|---|
| பெரிய குதிரை | 4 |
| ரிஷபம் 8 | |
| யாளம் 2 | |
| பாம்புயாளம் | 1 |
| பிர்மா 1 | |
| துவாரபாலகர் | 2 |
| கமாய் ° கால் | 2 |
| மேல் கிராதி | 4 |
| கீழ் கிராதி | 2 |
| பெரிய கத்தி ° கேடயம் | 2 |
| பூக்குடம் | 16 |
| ராஜா ராணி | 2 |
| கிழவன் கிழவி | 2 |
| சுருட்டி 4 | |
| இலை 8 | |
| பின்பக்கம் கமாய் ° கால் | 6 |
| அம்பராத்தோணி | 2 |
| 68 | |

இந்த பொம்மைகளில் குதிரைகளும் பாம்பு யாளமும் தேரின் முன்புறம் கட்டப்பட்டிருக்கும். இவற்றின் நீளம் 32 அடி உயரம் 11 அடி. இந்த நான்கு குதிரைகளையும் தேரில் பூட்டி லகானை இடது கையில் இழுத்துப் பிடித்து கொண்டு வலது கையில் ஓங்கிய சாட்டையுடன் பெரிய அளவிலான

நான்முகனின் உருவம் கம்பீரமாக அமைக்கப்பட்டிருப்பது கண்கொள் ளாக்காட்சியாகும். இந்த ஆண்டு இந்த பொம்மைகள் அனைத்தும், தேர் ஓடி நீண்டகால இடைவெளி ஏற்பட்டு விட்டதால் பழயன கழிந்து விடவும் பெரும்பொருட் செலவில் புதியன செய்யப்பட்டன. தேரின் முன்புறம் 20 அடி தூரத்திற்கு நீண்டிருக்கும். இரும்பு கயிறுகளின் முளையிலுள்ள வளையங்களில் தேரின் வடங்கள் பொறுத்தப்படும். இவ்வாறு பொறுத் தப்படும் நான்கு வடங்களும் ஒவ்வொன்றும் 425 அடி நீளம் கொண்டவை. வடத்தின் சுற்றளவு 21 அங்குலம். இந்த நான்கு வடங்களின் மொத்த எடை 4 டன்களாகும்.

இந்த ஆண்டு இந்த 4 வடங்களும் புதிதாக செய்யப்பட்டன. இவை கடலூர் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கத்தில் செய்யப்பட்டன. இந்த சங்கத்தின் செயலாளர் இந்த வடங்களைச் செய்ய சுமார் ஒரு லட்சம் தேங்காய்களில் இருந்து உரிக்கப்பட்ட மட்டைகள் பயன்படுத்தப்பட்டதாகவும் இந்த மட்டைகளிலிருந்து நார் எடுத்து கயிறாக திரித்து வடமாக ஆக்க 20 ஹெச்.பி. சக்தியுள்ள மோட்டார் தொடர்ந்து 15 நாட்கள் வேலை செய்ததாகவும், 60 ஆட்களுக்குள் மேல் தொடர்ந்து 20 நாட்கள் வேலை செய்ததாகவும் தெரிவித்தார். இந்த வடம் தயாரிக்க முதலில் 650 அடி நீளமுள்ள இழை கயிறுகள் 2880 முறுக்கி தயார் செய்யப்பட்டன. பின்னர் இவை 180 இழை கயிறுகளை சேர்த்து ஒவ்வொரு கயிறுகளாக 16 பெரிய கயிறுகளாக முறுக்கப்பட்டு, முருக்கேறியதில் இந்த கயிறுகளின் நீளம் 550 அடியாக குறைந்து விட்டன. இவற்றை ஒவ்வொரு பெரிய நான்கு கயிறுகளை முறுக்கி வடமாகத் தயாரித்ததில் நீளம் 425 அடியாக குறைந்து விட்டது. இப்படியாக ஒருவடத்தில் 720 இழை கயிறுகள் உள்ளன.

இந்த தேரினை ஓட்டுவதற்கு பயன்படுத்த ஒவ்வொன்றும் 1 1/4 அடி உயரம் 2 1/2 அடி நீளம், 1 அடி அகலமுள்ள முட்டுக்கட்டைகள், ஒவ்வொன்றும் சுமார் 30 கிலோ முதல் 45 கிலோ வரை எடையுள்ள 450 முட்டுக்கட்டைகள் பயன்படுத்தபடுகின்றன. ஒரு முட்டுக்கட்டை ஒருமுறை அல்லது இருமுறைக்கு மேல் பயன் படுத்த முடிவதில்லை. காரணம் சக்கரத்தின் கீழ் கொடுத்தவுடன் தேரின் எடையால் நொறுங்கிப்போய் விடுகின்றன. இந்த முட்டுக்கட்டைகள் தவிர பரப்பு கட்டைகள் எனப்படும் ரயில்வே ஸ்லீப்பர் போன்ற கட்டைகள் சுமார் 750 வரை பயன்படுத்தப்படுகின்றன. இவை தேர் சக்கரம் தரையில் பதிந்து விடாமல் இருக்க தேர் ஓடும் பாதையில் சக்கரத்தின் கீழ் பரப்பப்படுகின்றன.

தேர் நான்கு வீதிகளில் திரும்பும் இடங்களில் 3/4 இஞ்ச் பருமன், 10 அடி நீளம் 6 அடி அகலம் உள்ள மிகப்பெரிய இரும்பு தகடுகள் பரப்பப்பட்டு அவற்றின் மீது கிரீஸ் கொட்டப்பட்டு தயார் நிலையில் வைக்கப்படும். பின்னர்

தேரின் இடது புறம் ஜாக்கியால் உயர்த்தப் பட்டு சாரடிக்கட்டைகளால் தாங்கி வைக்கப்படும். இதன் பின்னர் வலது பக்க சக்கரத்தின் ஹைட்ராலிக் பிரேக்குகளால் நன்கு பிடிக்கப்பட்டு முட்டுக்கட்டைகள் மூலம் ஓட்டம் தடை செய்யப்பட்டு இடது பக்க சக்கரங்கள் கிரீசின் மீது சுலபமாக வழுக்கி செல்லும் வகையில் பின்புறமாக புல்டோசர்களால் இடிக்கப்பட்டு, இடது பக்க வடங்கள் மட்டும் முன்புறம் இழுக்கப்படும். இதனால் சட்டென்று தேர் குலுக்கியவாறு 90 டிகிரி கோணத்தில் திரும்புவது வேறு எங்கும் காண முடியாத சிறப்புக் காட்சியாகும். பெரிய தேரின் தேர் சீலைகள் புதிதாகச் செய்யப்பட்டுள்ளன. ஒரு தேர் சீலை 450 ச.அடி கொண்டது. இவ்வாறு 17 சீலைகள் தயாரிக்கப்பட்டன. 18 அடி உயரம் 20 அடி அகலமுள்ள நான்கு வாசல் மாலைகளும், 18 அடி உயரமுள்ள 28 தொம்பைகளும் இந்த தேருக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தேர் சீலைகள் மூன்று நிலைகளாகக் கட்டப்படுகின்றன. கீழ்நிலையில் உள்ளவை 32 அடி நீளம் 14 அடி உயரம் உள்ள 6 சீலைகளாகும். இதற்கு அடுத்த நிலையில் இதே அளவில் 5 சீலைகளும், இதற்கு அடுத்த நிலையில் இதே அளவில் 4 சீலைகளும் கட்டப்படுகின்றன. இதன் மேல் விமானத்தைப் போர்த்தி 2 சீலைகள் கட்டப்படுகின்றன.

இவ்வாறாக இந்த தேர் அமைக்கப்பட பொம்மைகள் செய்யவும் தேர் சீலைகள் செய்யவும், அதில் படங்கள் வரையவும் மூங்கில்கள், பனை மரங்கள் சவுக்கு மரங்கள் இதர மரங்கள் வெட்டி வரவும், இதனை அறுத்த முட்டுக்கட்டைகள், பரப்பு கட்டைகள், சாரடிக் கட்டைகளாகச் செய்யவும், தேர்களை கட்டவும் பிரிக்கவுமாக சுமார் 10000 ஆள்வினை நாட்கள் பயன்படுத்தப்பட்டு உழைக்கும் தொழிலாளர்களின் உழைக்கும் உரிமைக்கு நல்வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

1926ல் இந்த திருக்கோவிலின் தேர் விபத்தில் எரிந்து போனது. மீண்டும் 1930ல் புதிதாக தேர் செய்யப்பட்டு தொடர்ந்து 1948 வரை ஓடியது. அப்போதைய தேரோட்டத்தில் தேருக்கு 10 சக்கரங்கள் இருந்தன. ஆறு வடங்கள் இருக்கும் தேரை இழுக்க 12000 ஆட்கள் தேவைப்பட்டனர். தஞ்சை மாவட்ட பண்ணையார்கள் ஆட்களை படி போட்டு அனுப்பி தேர்களை இழுக்க செய்வர். தேர் பழுதுற்றதாலும், இந்த தேரோட்டத்தினை மிகப் பிரம்மாண்டமான அளவில் நடத்த திருக்கோவில் நிர்வாகத்தினர் சிரமப் பட்டதாலும் 1948க்குப்பின் தேரோட்டம் நின்று போயிற்று. மீண்டும் 1970ம் ஆண்டு அப்போதைய தமிழ்நாடு முதல் அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் விருப்பத்தினாலும் சீரிய முயற்சியாலும், திருச்சி பெல் நிறுவனத்தாரின் ஒத்துழைப்போடு தேர்கள் முற்றிலுமாக பழுதுபார்க்கப்பட்டு, இரும்பு அச்சுகள் இரும்பு சக்கரங்களை பொறுத்தப்பட்டு, 1970ம் ஆண்டு

முதல் 1975ம் ஆண்டு வரை தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது. பின் இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பின் 1978லும், அதன் பின் 1982ம் ஆண்டு ஒரு முறையும் தேரோட்டம் நடைபெற்றுள்ளது. அதன் பிறகு தற்போது மீண்டும் 7 ஆண்டுகால இடைவெளிக்கு பின்னர் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் விருப்பப்படி மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு.கே.பி.கந்தசாமி.எம்.எ., அவர்களின் உத்திரவோடு மிகச் செம்மையாக நடைபெற உள்ளது. அவர்களைப் போற்றி வணங்குகின்றேன்.

அறநிலையத்துறை செயலர் திருமிகு கு. ஆரூடையபிள்ளை இ.ஆ.ப. அவர்கள், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு. வ.ராமதாஸ், இ.ஆ.ப. அவர்கள், தஞ்சாவூர் அறநிலையத்துறை ஆணையர் திருமிகு சி.வி. இராஜாராம்,B.A.B.L. அவர்கள் ஆகிய உயர் அலுவலர்களின் ஒத்துழைப் போடும், அறிவுரைகளோடும், மிகச் செம்மையான முறையில் தேரோட்டப் பணிகள் நடைபெறுகின்றன. இந்தப் பெருமக்கள் அனைவரையும் போற்றி வணங்குகின்றேன். தேரோட்ட விழாவில் தனி அலுவலராக உள்ள நாகப்பட்டினம், அறநிலையத்துறை உதவி ஆணையர் திருமிகு தி.ஜெயராமன், B.A.B.L. அவர்களின் முயற்சிகளையும் ஒத்துழைப்பையும் இங்கு குறிப்பிட்டு அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன். இந்த தேரோட்ட விழாவிற்கு பெருமுயற்சி எடுத்து அவ்வப்போது நல் ஆலோசனைகள் நல்கி உறுதுணையாய் நிற்கும் திருவாரூர் திருமிகு. கு. தென்னன் அவர்களையும் வாழ்த்தி வணங்குகின்றேன். இத்திருக்கோவில் தக்கார்/உதவி ஆணையர் திருமிகு அ. ஜெகன்னாதராவ் அவர்களின் ஒத்துழைப்பினையும் இங்கு நன்றியோடு நினைவு கூறுகின்றேன். என்னுடைய பணிகள் அனைத்திலும் உற்றுழி உதவியும் உறுபொருள் தேடி அளித்தும் தோளோடு தோள் நின்று பாடுபட்ட இத்திருக்கோவில் பணியாளர்கள் அனைவரின் பணிகளுமே நன்றியோடு நினைவுகூர்ந்து பாராட்டத்தக்கது. இவ்விடத்தில் நிதி வசூல் செய்யவும், உணவு பொட்டலங்கள் நன்கொடையாக வழங்கிட உதவிய திரு N.தியாகராஜ ஐயர் அவர்களையும் நன்றியோடு நினைவு கூர்ந்து வணங்குகின்றேன். உணவு பொட்டங்களுக்கும், முட்டுக்கட்டைகளுக்கும் உத்திரவிட்டு உதவிய தருமையானம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமியின் பொன்னார் திருவடிகளையும் வணங்கி மகிழ்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இம்மா பெருபணியில் என்னையும் ஒரு சிறு கருவியாக்கி பயன்படுத்திக் கொண்ட எல்லையற்ற பரம்பொருள் இணையற்ற கருணையினையும் வீழ்ந்து வணங்குகிறேன்.

# உள்ளுரை

| | |
|---|---|
| நூலாசிரியர் உரை | 23 |
| திருவாரூர் திருக்கோயில் | 24 |
| தேரேறி திரிபுரம் எரித்தது | 25 |
| தேர்க்கலை | 29 |
| ஆரூர்தேரும் அணிநெடு வீதியும் | 35 |
| ஆரூரில் ஆழித்தேர்விழா | 39 |
| ஓவியத்தில் ஆரூர்த்திருவிழா | 45 |
| மகனைக்கடிந்த மணிநெடுந்தேர் | 51 |
| கடாரம் கொண்டவனின் கவினுறு தேர் | 54 |
| எரிந்த தேரும் எழுந்த தேரும் | 58 |
| ஆவணங்களில் ஆரூர்தேர் | 61 |
| பாராட்டுக் குரிய தேர்க்கலைஞர்கள் | 65 |
| பின்னிணைப்புகள் | |

## நூலாசிரியன் உரை.

எல்லாம் வல்ல தியாகப் பெருமான் திருவருளால் சென்ற ஆண்டு (1988) "திருவாரூர் திருக்கோயில்" எனும் நூலினை எழுதும் பெரும்பேறு பெற்றேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் சிறந்த தமிழ் நூல் என அறிவித்து ஐயாயிரம் வெண் பொற்காசுகளை பரிசாக அந்நூலுக்கு அளித்து கௌரவித்தது.

மீண்டும் தியாகராஜா தன் ஆழித்தேரைப் பற்றி எழுதும் பெரும் பாக்கியத்தை எனக்கே அளித்தார். அப்பரமணின் பொன்னார் திருவடிகளில் இந்நூலாம் திருமலரை பணிசார்த்தி வணங்கி, மழை வளம் பெருகி மக்களெல்லாம் மகிழ்வுடன் திகழ பிரார்த்திக்கிறேன்.

குடவாயில் பாலசுப்ரமணியன்
சரஸ்வதி மகால்-தஞ்சாவூர்
5-5-1989.

# திருஆரூர் திருக்கோயில்

தமிழகத்தில் சோழமண்டலத்தில் (கிழக்கு தஞ்சை மாவட்டத்தில்) அமைந்துள்ள தொன்மைமிகு நகர்களுள் ஆரூர் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. தமிழக கோயில்களுள் மிகத் தொன்மையானதும் தோன்றியகாலம் கூறமுடியாத அளவு பெருமை பெற்றது என அப்பர் பெருமானே வியந்து பாடும் சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு. ஒரே வளாகத்தில் இருபெரும் பாடல்பெற்ற தலங்களும் ஒரே ஊரில் மூன்று பாடல் பெற்ற தலங்களும். ஒரே ஆலயத்தில் ஐந்து சிவாலயங்களும், கோயில் ஐவேலி, திருக்குளம் ஐவேலி, செங்கழுநீர் ஓடை ஐவேலி என்ற சிறப்புகளும் பெற்ற திருவூர் இதுவே.

மூவர் முதலியரின் 34 பதிகங்களும், மணிவாசகரின் அருந்தமிழ்ப் பாடல்களும், சேரமான் பெருமானின் மும்மணிக் கோவையும் குமர குருபரரின் நான்மணிமாலையும் அன்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியங்களையும் நாற்பது வடமொழி இலக்கியங்களையும் பல தெலுங்கு மராத்தி இலக்கியங்களையும் கொண்டு திகழும் திருக்கோயில் ஆரூர்த் திருக்கோயிலே.

கழற்சிங்கர், செருத்துணையார், சோமாசிமாறர், தண்டியடிகள் நமிநந்தியடிகள், விறன்மிண்டார் போன்ற திருத் தொண்டர்கள் வரலாற்றுடன் தொடர்புடைய திருத்தலம். சேக்கிழார் சிறப்பித்துப் பாடும் திருநகரச் சிறப்பு ஆரூருக்கு அன்றி வேறு நகருக்கு கிடைக்கவில்லை. சுந்தரர் திருத் தொண்டத் தொகையருளிய திருவூர் இதுவே. சுந்தரரின் தாயார் பிறந்த பதி ஆரூர் பதியே.

பல்லவர், சோழர் பாண்டியர், விஜய நகர அரசு, நாயக்கர், மராத்தியர், சேதுபதிகள் போன்ற மன்னர் குலத்தவர் போற்றி மதித்த திருக்கோயில் திருவாரூர் திருக்கோயில்.

கல்தேர், தேரூர்ந்த கல்வெட்டு போன்ற சிறப்புகள் பெற்றதோடு பஞ்சமுக வாத்தியம், பாரிநாதஸ்வரம் போன்ற சிறப்பு இசைக்கருவிகளும் பெற்ற திருக்கோயில். அற்புத ஓவியக் கூடம், சீர்மிகு செப்புத்திருமேனிகள் பலவும் ஆரூரின் பெருமைக்கு உரியவையாகும்.

அருள் வழங்கும் நாயகனாம் ஆரூரன் தியாகேசனின் ஆழித்தேர் வலம் வரும் திருவூர் ஆரூர் என்பதே இவ்வூரின் தலையாய பெருமையாகும். அவ்வாழித் தேர் பற்றியும், தியாகன் ஆழித் தேரில் உலா வரும் அணி நெடு வீதி பற்றியும், தேரேறி திரிபுரம் எரித்த திறம்பற்றியும் ஆரூர் தேர்விழா பற்றியும் அறிதல் நம் கடனாகும். ஆரூர் நகர் சென்று அணிநெடும் வீதியில் ஆழித் தேர் காண்போம் வாரீர் ....... !!!

தேரேறி திரிபுரம் எரித்த திரிபுராந்தகர்



தாராசுரம் ஐராவதீஸ்வரர்கோயில்.

நன்றி:- தஞ்சாவூர் கலைக்கூடம்.

பிரியும் ஆறு எங்ஙனே? பிழைத் தேயும் போகல் ஒட்டேன்-
பெரிய செஞ்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் என்று இவை
அகத்து
அரியும் தன் கழனி அணி ஆரூர் அம்மானே''

''ஏவனத்த சிலையால் முப்புரமெய்தான்காண்.........''
''செற்றர்கள் புரமூன்றுஞ் செற்றான் தான் காண்
திருவாரூரான் காண் என் சிந்தையானே''

''புர மூனறுமெரி செய்தானை அமரர்கள் தம்
பெருமானை அரனை ஆரூர் உடையானை
கடுகச் சென்று அடைவேன் நும்மால்
ஆட்டுணேன் ஒட்டந்து ஈங்கு அலையேன்மினே''
''எம் பந்த வல்வினை நோய் தீர்த்திட்டான் காண்;
ஏழ்கடலும் ஏழ் உலகும் ஆயினான் காண்;
வம்பு உந்து கொன்றை அம்தார்-மாலையான் காண்
வளர்மதி சேர் கண்ணியன் காண்; வானோர் வேண்ட
அம்பு ஒன்றால் மூ எயிலும் எரி செய்தான் காண்
அனல் ஆடி ஆன் அஞ்சும் ஆடினான் காண்
செம்பொன் செய் மணி மாடத் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன் தானே''.

விண்டவர் தம் புரமூன்றும் எரி செய்தான் காண்
தெண்திரை நீர் வயல் புடை சூழ் திரு ஆரூரில்
திரு முலட்டரினத்து எம் செல்வன் தானே''.
தீயில் வீழ மருவலர் தம் புரமூன்றும் எரி செய்தான் காண்.
திரு ஆரூரில் திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே''
''சிலையால் முப்புரமெரித்த முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே''
''விழித்தனர் காமனை வீழ்தர விண்ணின் (று)
இழித்தனர் கங்கையை யேத்தினர் பாவம்
கழித்தனர் கல்சூழ் கடியரண் மூன்றும்
அழித்தனர் ஆரூர் அரநெறியாரே''

என்று தம் திருவாரூர்ப் பதிகங்களில் திரிபுரம் எரித்ததைக் கூறுகின்றார்



மரத்தடியில் அமர்ந்த நிலையில் புத்தராக திருமால்.



திரிபுர அசுரர்களுக்கு

பிடகம் போதிக்கும்

புத்தராக திருமால்

சுந்தர மூர்த்தி சுவாமிகளோ,

"வன்னாகம் நாண் வரைவில் அங்கிகணை அரிபகழி
தன் ஆகம் உறவாங்கிப் புரம் எரித்த தன்மையனை"
முன்னாக நினையாத மூர்க்கனேன் ஆக்கை
சுமந்து என்னாகப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே"

என்று முப்புரமெரித்த அந்த ஆரூர் அம்மானை போற்றிப் பரவுகிறார்.

ஆணவ மலம் ஒழிந்த அந்த மூன்று அசுரர்களும், தலைமேல் சிவலிங்கம் சுமந்து கையிலையம் பெருமான் திருவடிப் பணிந்து போற்றினர். அடியார்களை ஆட்கொள்ளும் எம்மான் உடன் அவர்களை தனது கணங்களாக ஏற்றுக்கொண்டார். தாரகாட்சனையும், வித்யுன் மாலியையும் தமது கோயிலின் வாயிற் காவலர்களாகவும், வாணாசுரனை தாம் ஆடுகின்ற ஆடலுக்கு மணி முழவம் முழக்கும் கலைஞனாகவும் ஏற்றுக் கொண்டார். இதனை தம்பிரான் தோழரான சுந்தரர்,

"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின் திருக் கோயிலின் வாய்தல்
காவலாளர் என் றேவிய பின்னை
ஒருவ நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணி முழா முழக்க அருள் செய்த
தேவ தேவ நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உனாளே"

என்று தம் திருவாக்கால் உரைக்கின்றார்.

தவ வலிமையின் செருக்கால் உதித்த ஆணவமும், தேவர்களின் மனதிலுதித்த ஆணவமும், ஆரூரனின் அரும்பும் புன்னகையால் அழிந் தொழிந்தது. இப் புராண அடிப்படையே தேர்த் திருவிழாவாகும்.

ஈசனை ஆழித் தேரில் அமரச் செய்து திருவீதிகளில் பவனிவரச் செய்வது, திரிபுராந்தகரான அப்பரமனுக்கு எடுக்கும் திருவிழாவாகும். ஆணவம், கண்மம், மாயை என்ற மும்மலமும் அவன் முன் எரிந்து சாம்பலாகும் என்ற சித்தாந்தமே இதன் உட்பொருள். இதனை திருமூலர் தம் திரு மந்திரத்தில்

"முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே"-என்று கூறுவர்.

இவ்வாறு திரிபுரமெரித்த சிவபெருமானின் கோல நிலையாக திரிபுராந்தகர் எனும் திருமேனி எல்லா திருக் கோயில்களிலும் காணப்பெறுகின்றது. ஒரு காலை சற்று உயர்த்தி நின்ற நிலையில் வலது கரங்களில் அம்பும் மழுவும் இருக்க, இடது கரங்களில் வில்லும் மானும் திகழ

இவ்வடிவம் செப்புத் திருமேனியாக உள்ளது. தஞ்சை பெருங்கோயிலில் கருவறையில் தென்புற வாயிற் படிகளில் ஓர் புறம் திரிபுரம் எரிந்த காட்சி முழுமையாக வடிக்கப் பெற்றுள்ளது. திருமால் புத்தராக போதி மரத்தடியில் அமர்ந்திருத்தல், பிறகு நின்ற நிலையில் திரிபுராசுரர்களுக்கு பிடகம் உபதேசித்தல், அவ்வசுரர்களின் கோட்டைகள் பறந்து வந்து தாக்குதலும், பயந்து ஓடும் தேவர்களும், மனிதர் களும் உள்ள காட்சியும் பின்னர், நான்முகன் தேரை ஓட்ட வில்லேந்திய சிவ பெருமான் தேரின் மீது நின்ற வண்ணம் போர் புரியச் செல்லும் காட்சியும் உள்ளது. இதனை அடுத்து சிவலிங்கங்களை தலை மேல் சுமந்த திரிபுராசுரர்கள், திரிபுராந்தகர் முன்பு வணங்கி நிற்கும் காட்சியும் உள்ளது. இதனை ஒத்த பிறிதோர் காட்சி, அதே திருக்கோயிலின் இரண்டாம் கோபுரத்து (இராஜராஜன் திருவாயில்) உட்புறம் தெற்குப் பகுதியில் வடிக்கப்பெற்றுள்ளது.

தாராசுரம் ஐராவதிஸ்வரர் திருக்கோயிலின் முக மண்டபத்து உபபீட பகுதியில் தேரேறிச் செல்லும் திரிபுராந்தகரும், திரிபுர தகனமும் அற்புதக் காட்சிகளாய் வடிக்கப் பெற்றுள்ளது. இதே கோவிலின் கோஷ்டம் ஒன்றில் திரிபுராந்தகரின் கோலக் காட்சி இடம் பெற்றிருந்தது. இச்சிற்பம் தற்போது தஞ்சை கலைக் கூடத்தில் உள்ளது.

திரிபுராந்தக வடிவத்தை மிகவும் போற்றிய மாமன்னன் ராஜராஜன் தஞ்சைப் பெருங் கோயிலின் விமானம் மற்றும் முன் மண்டபத்து மேல்நிலை மாடங்களில் திரிபுராந்தக மூர்த்தியின் வடிவங்களை இடம் பெற செய்துள்ளான். மேலும் இம்மன்னனது காலத்து இத்திருக்கோயில் ஓவியங்களில் முப்புரம் எரிந்த காட்சி சிறப்பிடம் பெற்று திகழ்கிறது. தமிழகத்தின் தலையாய ஓவியப் படைப்புகளில் இது குறிப்பிடத்தக்கதாகும். அண்ணலின் அற்புத வடிவை நாளெல்லாம் கண்டு மகிழலாம்.

தேரேறி திரிபுரம் எரிந்த இந்த நிகழ்ச்சியை நம் மாமன்னர்கள் சிற்பங்களாக செப்புத் திருமேனிகளாக, ஓவியங்களாக வடித்துப் போற்றியதோடு, அற்புதத் தேர்களை கோவில்களில் உருவாக்கி அப்பரமனை அதில் பவனி வரச் செய்து திரிபுரம் எரித்த நிகழ்ச்சியை விழாக்களாக கொண்டாடினர். இவ்விழாக்கள் திருக் கோயில்களில் பண்டு தொட்டு நிகழ்ந்து வந்தது.

ஈசனை தேரில் அலங்கரித்து பவனி வரச் செய்வதால் அவனது பார்வையால் மும் மலம் அழியும். மழை வளம் பெருகி நாடு வளம் பெறும். ஊர் செழிக்கும். அத் தேரை நாம் ஒன்று கூடி இழுப்பதால் ஒற்றுமை உணர்வு ஓங்கும். உயர்வு தாழ்வு என்ற பேதம் ஒழியும், மனம் மகிழ்வுறும்.

# தேர்க் கலை

மரத்தினால் சிற்பங்கள் செய்வதும் அவற்றை மிக எழிலுடன் படைத்த தேர்களிலே பொருத்தி அழகுறச் செய்வதும் தமிழகத்தில் தொன்று தொட்டு வந்த ஒரு அற்புதக் கலையாகும். பல காலம் செய்த பழக்கத்தால் இப்பணிகளுக்கு எவ்வகை மரங்கள் சிறந்தது என்ற சிறந்த குறிப்புகளையும் வைத்துள்ளனர். மரத்தாலான தேர்களையும், அவைகள் விரைந்து செல்லும் வண்ணம் அமைத்த திறனையும் சங்கப் பாடல்கள் கூறும். ஒரே பகலில் எட்டுத் தேர்களை செய்யும் ஆற்றல் மிகுந்த தச்சன் இருந்ததை 'வைகல் எண் தேர் செய்யுந் தச்சன்' என்று சங்கப் பாடலொன்று கூறும். பெருங்கதை என்னும் தமிழிலக்கியத்தில் தேர்கள் பற்றியும், மரத்தால் செய்யப் பெற்ற சிற்பங்கள் பற்றியும் பல குறிப்புகள் உள்ளன.

தமிழகத்தில் மரத்தால் மிகப் பெரிய அளவில் தேர்களை அழகுற அமைத்து அதன் மீது தெய்வத் திருவுருவங்களை வைத்து வீதிகளில் பவனி வரச் செய்து பெரு விழாவாக எடுக்கும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. சோழ மன்னர்களும் பின்னர் வந்த விஜய நகர அரசர்களும் பல பெருந்தேர்களை செய்து அளித்ததை இவர்களது கல்வெட்டுகள் கூறும். வீதிகளில் நிறுத்தப் பெற்றுள்ள தேருக்கு இறையுருவங்களை எடுத்து செல்வதற்கென படிகளுடன் கூடிய மண்டபங்களை மிக எழிலுடன் அமைத்தனர். அம்மண்டபங்களைத் 'திருத் தேரேற்றுச் கூடம்' என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. பிற்காலத்தில் இவற்றை தேர்நிலை என்று அழைத்தனர்.

கி.பி. 1118-1136 வரை ஆட்சி புரிந்த விக்கிரம சோழன் தனது 10ஆம் ஆட்சியாண்டில் கி.பி. 1128இல் தில்லையம் பதியில் எண்ணிலா திருப்பணிகள் செய்தான். அப்போது தான் பிறந்த உத்திரட்டாதி நாளில் நிகழும் பெருவிழாவில் இறைவன் எழுந்தருள திருத்தேரைப் பொற்தகடுகள் கொண்டு அலங்கரிக்கச் செய்து, அதற்கு முத்தால் செய்யப் பெற்ற வடங்களால் அழகூட்டி, தன் பெயரால் எடுக்கப் பெற்ற விக்கிரம சோழன் திருவீதியில் உலா வரச் செய்தான். அப்போது இறைவனுக்கு பொன்னால் செய்யப் பெற்ற பரிகலங்களை அளித்ததோடு, பரிசின்னங்களும் எடுத்து வரச் செய்தான். இதனை இம்மன்னனின் கல்வெட்டுக்கள் அழகிய பாடலாக விவரிக்கின்றது.

"இரு நிலம் தழைப்ப இமையவர் களிப்பப்
பெரிய திருநாள் பெரும் பெயர் விழாவெனும்
உயர் பூரட்டாதி உத்திரட்டாதியில்
அம்பல நிறைந்த அற்புத கூத்தன்
இம்பர் வாழ எழுந்தருள் வதர்குத்

திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
நிறைமணி மாளிகை நெடுந்திரு தன்
திருவளர் பெயராற் செய்து சமைத் தருளி
வைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம் பொற்கற்பகத் தொடு பரிச்சின்னமும்
அளவில்லாதன வொளி பெற அமைத்து......"

இக்கல் வெட்டுப்பாடல் வாயிலாக பெரிய திருவிழாவில் இறைவனின் தேர் பவனி வருவதும், அது எவ்வாறு பொற் தகடுகளாலும், முத்து வடங்களாலும் அலங்கரிக்கப் பெற்று திகழ்ந்தது என்பதையும் அறிகிறோம். இதேபோன்று சோழர் காலத் தேர்களின் அமைப்புப் பற்றி சிற்பங்கள் பலவற்றில் நாம் காண முடிகின்றது. தஞ்சை மாவட்டம் திருக் கோடிக் காவல் திருக் கோயிலில் பல அற்புத சோழர் கால தேர்ச்சிற்பங்கள் உள்ளன. தேர்களின் எல்லாப் புறங்களிலும் நூற்றுக் கணக்கான மரச் சிற்பங்களை செய்து பொருத்துகின்ற பாங்கு ஒரு கை தேர்ந்த நுண்கலை என்பதில் ஐயமில்லை. தேர்களை பல நிலைகளாகக் கொண்டு இன்ன நிலையிலே இன்ன இன்ன சிற்பங்கள் இருத்தல் வேண்டுமென்று வகுத்து அதன்படி சிற்பங்களைப் பொருத்தியிருக்கிறார்கள். பெருங்கதை குறிப்பிடும் தேர் பற்றிய செய்திகள் மிகச் சுவையானவை. இதில் குறிக்கப் பெறும் வாசவதத்தையின் தேர் மிகவும் நுண்ணிய கலையழகுடன் மிளிர்ந்தது. அதைப் பலநாட்டு கைவினைஞர்களும், அமைத்தனர். அவர்களில் யவன நாட்டு தச்சர்களும், அவந்தி நாட்டு கொல்லரும், மகத நாட்டு கலைஞரும், பாடலிபுத்திரத்து பொற்கொல்லரும் கோசல நாட்டு ஓவியத் தொழிலரும், வத்ச நாட்டு வண்ணக் கம்மரும், பல வகை எழிலுடன் வண்ணப் பொலிவோடு படைத்தனர்.

'யவனத்தச்சரும் அவந்திக் கொல்லரும்
மகதத்துப் பிறந்த மணி வினைக்காரரும்
பாடலிப்பிறந்த பசும் பொன் வினைஞரும்
கோசலித்தியன்ற ஓவியத் தொழிலரும்
வத்த நாட்டு வண்ணக் கம்மரும்
தத்தம் கோன் மேற்றங்கை தொழில் தோன்ற'

(1-58 40-5)

என்று கூறுகின்றது. பல்வேறு நாட்டு கை வினைஞர்களும் ஒன்று கூடி அற்புதமான தேர்களை கூட்டு முயற்சியாக உருவாக்கியும் உள்ளனர். என்பதற்கு இவ்விலக்கியம் சான்றாகக் திகழ்கிறது.

தமிழகத்தில் பல திருக் கோயில்களில் உள்ள தேர்கள் குறிப்பிடத்தக்க வையாகும். திருவாரூர்த் திருக்கோயில், காஞ்சிபுரம் வரதராஜர் கோயில் வில்லிப் புத்தூர் கோயில், நெல்லையப்பர் கோயில்,

மதுரைக் கோயில், அண்ணா மலையார் கோயில், திருவரங்கம் ஆகியவற்றின் திருத்தேர்கள் மிகப் பெரிய அளவிலும், நுணுக்கங்கள் மிகுந்து உள்ளன.

மன்னர்கள் வலம் வருவதற்கும் போர் மேற் செல்வதற்கும் பல வகையான தேர்கள் வகுத்திருந்த போதும், ஆலயங்களில் தெய்வத் திருமேனிகள் பவனி வர செய்யப் பெற்ற தேர்கள் அளவிலும், வடிவமைப்பிலும் மாறுபட்டவை. இத்தகைய தேர்களை வடிவமைப்பதற்கென இலக்கணங்களைக் கொண்ட நூல்களை நம் முன்னோர் வகுத்தனர். இவற்றுள் மானசாரம், விஜய தந்திரம் அல்லது ரதலக்ஷணம் என்னும் கிரந்தச் சுவடி நூல்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

இந்நூல்களில் தேரின் ஒவ்வொரு அங்கங்களின் அமைப்பும், அளவுகளும் விவரிக்கப் பெற்றுள்ளன. ரதத்தின் வடிவமைப்பைக் கொண்டு ஏழு வகையாகப் பிரித்தனர்.

1. நவஸ்வான் பத்ரக
2. ப்ரபஞ்சன பத்ரக
3. நிவாத பத்ரக
4. பாவத பத்ரக
5. ப்ரஷாத பத்ரக
6. இந்த்ரக பத்ரக
7. அநில பத்ரக

என்பதாகும். முதல் வகை சதுர அமைப்புடைய தேர்களாகும் இரண்டாம் வகை ஆறு பட்டை வடிவாகும். மூன்றாம் வகை இரண்டு தளமுடையவை. நான்காம் வகை மூன்று தளமுடையவை. ஐந்து மற்றும் ஆறாம் வகை பத்து தள அமைப்புடையவை. ஏழாம் வகை பன்னிரண்டு தளமுடையவை.

இதே பகுப்பைக் கொண்டு முதல் வகைத் தேர்களை அரை வட்டம் உடையவையாகவும், இரண்டாம் வகை வட்ட வடிவ அமைப்புடையனவாகவும், மூன்றாம் வகை நீள்வடிவுடையாகவும், நான்காம் வகை நீண்ட சதுர, வடிவமாகவும், ஐந்தாம் வகை எண்பட்டை வடிவமுடையவையாகவும், ஆறாம் வகை அறுகோண வடிவுடையவையாகவும், ஏழாம் வகை முட்டை வடிவுடையதாகவும் குறிக்கப் பெற்றுள்ளது.

மேலும் தேர்களை நான்கு பெரும் பிரிவுகளாக வகுத்தனர். நாகரம், திராவிடம், ஆந்திரம், வேசரம் என்னும் வகைகளாகும். சதுர வடிவுடையவை நாகர அமைப்பாகவும், எண்பட்டை வடிவுடைய திராவிட அமைப்பாகவும், அறுகோண அமைப்புடையவை ஆந்திர அமைப்பாகவும் வட்டம், மற்றும் இருபது பட்டையுடைய அமைப்பை வேசரம் என்றும் கொண்டனர்.

மனிதர்களின் தேராயினும், தெய்வங்களின் தேராயினும் அவற்றின் செயல் பாட்டிற்கேற்ப அதன் சக்கரங்கள் அமைக்கப் பெற்றன. போருக்குரிய தேர்களுக்கு மூன்று சக்கரங்களும் போர் விளையாட்டுப் பயிற்சிக்குரிய தேர்களுக்கு நான்கு சக்கரங்களும், தேவாலயங்களில் சாதாரண விழாவுக்குரிய தேர்களுக்கு ஐந்து சக்கரங்களும், ரத உற்சவங்களுக்கு உரிய தேர்களுக்கு ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது மற்றும் பத்து சக்கரங்களுள்ள தேர்களை வகுத்தனர்.

திருக்கோயில்களின் கருவறை மற்றும் முக மண்டபங்களை தேர் வடிவில் அமைப்பதும், ஒருவகை மரபாகும். இதனை 'விஷ்ணு தத்வ சம்ஹிதை' எனும் நூல் விரிவாக கூறுகின்றது. தமிழகச் சிற்பக் கலையின் கேந்திரங்களாகத் திகழும் பல திருக் கோயில்களின் கருவறையும் முக மண்டபங்களும், தேர் வடிவில் திகழ்கின்றன. சிதம்பரத்துக்கு அண்மையிலுள்ள மேலக் கடம்பூர் திருக்கோயில் ஒரு அற்புதக் கல் தேராகவே காட்சியளிக்கின்றது. கும்பகோணம் சாரங்கபாணியின் கருவறையும் மிக எழில் வாய்ந்த ஒரு தேராகவே திகழ்கின்றது. குடந்தைக் கீழ்க் கோட்டம் எனும் நாகேஸ்வர சுவாமி கோயில் மண்டபம் தாராசுரம் ஐராவதேசுவரர் திருக்கோயில் இராஜ கம்பீரன் மண்டபம் போன்றவை தேர்க்கால்களோடு குதிரைகள் இழுக்கும் தேர்களாகவே திகழ்கின்றன.

## ஆலயத் தேர்கள்

ஆலயத் தேர்களின் அடிப்பாகம் முழுவதும் மரத்தால் செய்யப் பெற்று, இரும்புக் கம்பிகளாலும், பட்டைகளாலும், ஆணிகளாலும் இணைக்கப் பெற்றிருக்கும். அடிப் பகுதி திருக் கோயில்களின் கருவறை போன்று அனைத்து அங்கங்களும் பெற்றிருக்கும். இதன் வெளிப்புறம் முழுவதும் மரச் சிற்பங்களால் அலங்கரிக்கப் பெற்றிருக்கும். இவை புராண காட்சிகளாகவும் பல்வேறு தெய்வ மூர்த்தங்களின் திரு உருவங்களாகவும் இருக்கும். பல தள அமைப்புடைய தேரின் மேல் தளத்தின் மையத்தில் தெய்வத் திருமேனிகளுக்குரிய பீடமேடை இருக்கும். பனை மரச்சப்பைகளாலும் நீண்ட தூண்களாலும் கால்கள் நிறுத்தப்பெற்று இவற்றுடன் மூங்கில் மற்றும் சவுக்குமரங்களை இணைப்பர்.இதற்கு சட்டக் கோர்வை என்று பெயர். இதன் மேல் மூன்று அல்லது நான்கு அடுக்குகளாக விரிந்த தள அமைப்பை எண் பட்டை வடிவிலோ அறுகோண வடிவிலோ அல்லது திருவாரூர் தேர் போன்று இருபது பட்டை வடிவிலோ அமைப்பர். இவ்வாறு அடி பீடத்தை விட அகலமாக விரிந்து இருக்கும் பகுதியை கானட் என்று தேர்க் கொத்தர்கள் கூறுவர். இத் தேர்க் கூரையின் உச்சிப் பகுதியில் எண் பட்டை, அறுகோணம், அல்லது வட்ட சிகரப் பகுதியை மரச்சட்டங்களாலும், மூங்கில் அல்லது பிரம்புத் துண்டுகளாலும் உருவாக்குவர். சிகரத்தின் உச்சியில் கலசம் இடம் பெற்றிருக்கும்.

இவ்வாறு உருவாக்கப் பெற்ற தேர்க் கூரையை தென்னங் கீற்று கொண்டு வேய்வர். பின்னர் அதன் மேல் பல வண்ண தேர்ச் சேலையால் அலங்கரிப்பர். சட்டக் கோர்வை பகுதியை நான்கு புறமும் மூங்கில், காகிதம் இவைகளால் உருவாக்கப் பெற்ற எட்டுக் கால்கள் (தூண்கள்) தோரண அமைப்புடைய நான்கு முகப்புகள் ஆகியவற்றால் அலங்கரிப்பர். தேர்க் கூரையின் நீண்ட விளிம்புகளில் வண்ணத் துணிகளால் தயாரிக்கப்பெற்ற தொம்பைகளைத் தொங்கவிடுவர்.

மூங்கில், பிரம்பு, வைக்கோல், நெட்டி, காகிதம் போன்றவற்றால் தயாரிக்கப்பெற்ற பாயும், குதிரைகள் நான்கினையும், நீண்ட பாம்புயாளம் ஒன்றினையும், தேரின் முன் பகுதியில் மேற் தளத்தையொட்டி பாயும் நிலையில் கட்டுவர். பின்னர் இக்குதிரைகளை இயக்கும் சாரதியாக அமர்ந்த கோலத்தில் பிரமனின் உருவம் ஒன்றினை மூங்கில், நெட்டி, காதிதம் ஆகியவற்றால் தயாரித்து தேரின் முகப்பில் பொருத்துவர். தெய்வ திருமேனி இடம் பெறும் மேடைக்கு இருபுறமும் நெட்டி, காகிதம் இவைகளால் உருவாக்கப் பெற்ற பிரம்மாண்டமான துவார பாலகர் உருவங்கள் இரண்டினை பொருத்துவர்.

தேரை இழுக்க மிக நீண்டகயிறு வடங்கள் தேரின் அச்சுப் பகுதியோடு இணைக்கப் பெறும். இவை பெரும்பாலும் ஆறு அல்லது நான்கு வடங்களாக இருக்கும். நான்கு குதிரைகள் நான்கு வேதங்களாகவும், ஆறு வடங்கள் ஆறு அங்கங்களாகவும், தேரின் மேற்பகுதியிலுள்ள சட்டங்கள் கயிற்று நாண்கள் ஆகியவற்றின் வேலைப்பாடுகள் அறுபத்து நான்கு கலைகள், தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்ற அடிப்படையில் அதே எண்ணிக்கையில் அமைப்பது தேர்க் கொத்தர்கள் மேற்கொள்ளும் மரபாகும். மரத்தால். செய்யப் பெற்ற முக்கோண வடிவுடைய முட்டுக் கட்டைகள், நெம்பு கோல் அடிப்படையில் தேர்க்கால்களை நெம்பக் கூடிய உலுக்கு மரங்கள், தேர் எளிதில் திரும்பக் கூடிய சாரடிக் கட்டைகள் ஆகியவை தேரை இயக்க உபயோகிக்கும் முக்கியப் பொருள்களாகும்.

## ரதா ரோஹணம்

உயர்ந்த திருத் தேரேற்று கூடங்களுக்கு (மண்டபங்கள்) படிகள் வழியாக ஈசனின் திருமேனியை தூக்கிச் சென்று அங்கிருந்து தேரின் தளத்திலுள்ள மைய பீட மேடைக்கு கொண்டு சென்று, அலங்கரித்து ஈசனை அங்கு எழுந்தருளச் செய்வர். முறையான வழிபாடுகள் அங்கு நிகழ்வுறும். மங்கள வாத்தியங்கள் அத்தளத்திலேயே இசைக்கப் பெறும். தமிழும் ஆரியமும் பாடப்பெறும்.

சிவாலயங்களில் பஞ்ச மூர்த்திகளின் தேர்கள் என ஐந்து தேர்கள் பவனி வருவது மரபு. தேர் விழாக்களின் போது விநாயகர், முருகன், அம்மன், சண்டிகேசுவரர் ஆகியோரது தேர்களை பரமேசனின் தேர் நாளுக்கு முன்னதாகவே பவனி வரச் செய்து பின்பே பெரிய தேர் இழுக்கப்படும்.

வீதிகளில் தேர் பவனிவருவதை சிற்ப நூல்களும், ஆகமங்களும், 'ரதா ரோஹணம்' என்று கூறும். இது ஈசனின் பஞ்ச கிருத்தியங்களில் சம்ஹார கிருத்தியத்தை குறிக்கும் நிகழ்ச்சி ஆகும்.

விண்ணதிர அதிர் வேட்டுக்கள் முழங்க ஆயிரமாயிரம் அடியவர்கள் வடம் பிடித்திழுக்க தாரை, தப்பட்டை, கொம்பு, எக்காளங்கள் பேரொலி எழுப்ப பின் சக்கரங்கள் இரண்டிலும் உலுக்கு மரம் போட்டு உலுக்க தேர் அதிர்ந்து குலுங்கி உருண்டோடத் துவங்கும். வேகத்தைக் கட்டுப்படுத்த முட்டுக் கட்டைகளைத் தேர்காலின் விளிம்புகளில் கொடுப்பார்.

எட்டு அல்லது பத்து கால்கள் (சக்கரங்கள்) உள்ளமையால் வீதிகளில் தேர் திரும்புவது எளிதன்று. எனவே அதற்கெனவே தேர்க் கால்களில் பிரத்தியேக அமைப்பாக ஓரங்கள் மழுக்கப்பட்டிருக்கும். தேர் வலப்புறம் திரும்ப வேண்டுமாயின் இடப்புறம் மட்டுமே பின் கால்களில் உலுக்கு மரம் 'போடப்படும் வலப்புறம் கால்களில் மட்டுமே முட்டுக் கட்டைகளை கொடுப்பர். வீதியில் தேர்க் கால்கள் பதியாமல் இருக்க எண்ணெய் தடவப் பெற்ற சாரடிக் கட்டைகளைப் பரப்பி அதன் மேல் கால்கள் உருளும்படிச் செய்வர். அதிர் வேட்டுக்களும், தாரைதப்பட்டை, கொம்பு,எக்காளங்கள் எழுப்பும் ஓசையும் ஒரு உத்வேகமாக அமைய ஒருக்காலில் மட்டும் போடப் பெறும். உலுக்குமர இயக்கம் ஒரு பக்க கால்களில் போடப்பெறும். முட்டுக்கட்டைகள், எண்ணெய் தடவிய சாரடிக் கட்டைகள் மேல் வழுக்கிய நிலையில் கால்கள் உருள முன்புறம் பாயும் நிலையில் உள்ள தேர்க் குதிரைகளின் இருபுற அசைவுகள் ஒரு பக்கமாக செல்லுங்கால் அவற்றின் எடை முழுவதும் தேரை அப்பக்கமாக இழுக்க தேர் குலுங்கி குலுங்கி வலது புறமாகவே திரும்பும். திரும்பும் குதிரைகள் மறுவினாடியே பழைய நிலைக்கு வந்து விடும். இவ்வாறு திருப்பங்களில் திரும்பியும், தெருக்களில் ஓடியும் ரதா ரோஹணம் நிகழ்வுறும்.

தேரினை சீராக வடிவமைத்த தச்சர்கள், கொல்லர்கள், குதிரைகள் செய்யும் ஸ்தபதிகள் தேர்க் கூரை அமைக்கும் கொத்தர்கள் ஆகியவர்களது கூட்டு முயற்சியும், அவர்கள் கணித ஆற்றலோடு படைக்கும் ஒவ்வொரு அங்கங்களின் வடிவமைப்பு, எடை, இயக்கங்கள் போன்றவையே ரதா ரோஹணத்திற்கு இன்றியமையாதவையாக அமைகின்றன. பல மாதங்கள் இவர்கள் திட்டமிட்டு உழைக்கும் உழைப்பே தேர் பவனியை சிறப்புறச் செய்யும்.

இவர்களது ஆற்றல் பூதாகாரமான தேரை விட பன்மடங்கு பெரியது. என்பதில் கடுகளவும் ஐயமில்லை. திருவாரூரில் டிராக்டர்களும், புல்டோசர்களும், ஜாக்கிகளும் துணை நிற்காமல், 1926க்கு முன்பு தற்போதைய தேரை விட பெரிய தேரை இயக்கிய நம் தச்சர்கள், கொல்லர்கள், ஸ்தபதிகள், கொத்தர்களின் திறமையை மீண்டும் நாம் சிந்திக்க வேண்டும். நம் மவர்களின் அற்புத ஆற்றலை நாம் இமயமென நினைப்போம். இக்கலை அழியாமல் அவர்கள் வாழ்வு மங்காமல் காப்பது நமது கடமை.

# ஆரூர் தேரும் அணிநெடு வீதியும்

''நீருருஞ் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணாய் நிலாத்திங்கள்
துண்டத்தாய் நின்னைத் தேடி ஒருரு மொழியாமே
யொற்றித் தெங்கும் உலகமெலாந் திரிதந்து நின்னைக் காண்பான்
தேருரும் நெடுவீதி பற்றி நின்று திருமாலும் நான்முகனுந்
தேர்ந்துங் காணாது ஆரூரா ஆரூரா என்கின்றார்கள்
அமரர்கள் தம் பெருமானே ஆரூராயே''

என்று பாடும் நாவுக்கரசு பெருமானார்.

''போழொத்த வெண்மதியஞ்சூடிப் பொலிந்திலங்கு
வேழத்துரி போர்த்தான் வெள் வளையாள் தான் வெருவ
ஊழித் தீயன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்ட தாருரே''

என்று போற்றிப் பரவுகிறார். ஆழித் தேர் வித்தகனை ஆரூரில் கண்ட அப்பர் பெருமானார், ''பாரூர் பரிப்பத்தம், பங்குனி உத்திரம் பாற்படுத்தான் ஆரூர் நறுமலர் நாதன்''—என்றும்.

''முத்துவிதான மணிபொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்''—என்றும்
''வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர் மாமணிகள் ஒளிதோன்றச்
சாதிகளாய பவள முத்துத் தாமங்கள்
ஆதி ஆருர் ஆதிரை நாளால் அது வண்ணம்

என்றும் கூறி, அப்பெருமானார் தேரூரும் திருவாரூர் நெடுவீதிபற்றியும் அன்று நிகழ்ந்த பங்குனி உத்திரப்பெருவிழா, மார்கழி ஆதிரை விழா போன்றவற்றில் அவர் கண்ட காட்சிகளையும் நம்முன் கொணருகிறார். ஆரூர் வீதியில் அழகுத் தேர் பவனி வருகின்றது. அதில் வீதிவிடங்கனாம் தியாகப்பெருமான் பவனி வருகின்றார். முத்துக் கோர்க்கப்பட்ட விதானங்கள் ஈசனுக்கு முன்பு பிடித்துக் கொண்டு, நவமணிகள் பதிக்கப் பெற்ற பொன்னாலாகிய கவரியை வீசிக்கொண்டு பக்தர்கள் செல்ல பாவையர்கள் ஆடிக்கொண்டும் செல்கின்றனர். முன்னே ஈசனுக்கும், திக்பாலர்களுக்கும் பலி எடுத்துச் செல்லப்படுகின்றது. அதன் பின்னே கபால மாலை அணிந்த பாசுபதர்களும், மாவிரதிகளும் செல்ல ஆதிரை விழாவில ஆரூர் இறைவன் பவனி வருகிறான்.

ஆரூர் வீதிகள் முழுவதும் வெண் கொடிகளும், முத்து விதானங்களும் கட்டப்பட்டுள்ளன. அவைகள் சோதியாய் ஒளி விடுகின்றன. அவற்றோடு முத்து பவளம் கோர்க்கப்பட்ட மாலைகளும் இணைந்து ஒளி வீசுகின்றன. இத்தகைய ஒளிவிடும் நெடுவீதியில் ஆரூர் ஈசனின் பவனி நிகழ்கின்றது. இதனைக் கண்ணுற்ற அப்பர் அடிகள் "மாயப் போர் வல்லானை, மாலைதாழ் மார்பானை, ஆடுந்தீக் கூத்ததனை, ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே" என்று கூறி மயங்கி நாடிக் காண மாட்டாத தழலாய நம்பனை திருவாரூர் அம்மானை, ஆரூர் வீதியில் பாடுவார் பணிவார், பல்லாண்டு இசை கூறும் பக்தர்கள் ஆகியோர் சித்தத்துள் புகுந்து தேடிக் கண்டு கொண்டேன்" -என்று கூறுகின்றார்.

இவ்வாறு அப்பர் பெருமானார் அடியெடுத்து நடந்து அற்புதங்களைக் கண்ட தேரூரும் திருவீதியல்லவா..! திருவாரூர் திருவிதி!

"தேரூரார் மாவூரார் திங்களூரார் திகழ்புன்சடைமுடிமேல் திங்கள் சூடிக், காரூரா நின்ற கழனிச் சாயற் கண்ணார்ந்த மாடங் கலந்து தோன்றும், ஒரூரா வுலகெலா மொப்பக் கூடி உமையாள் மணவாளா என்று வாழ்த்தி ஆரூரா ஆரூரா என்கின்றார்கள் அமரர்கள் தம் பெருமானே எங்குற்றாயே" — என்று நாவுக்கரசர் ஆரூரனைத் தேடித் திரிந்த திருவீதியல்லவா ஆரூர் திருவிதி.......!

பாம்பு ஒரு தேரையைக் கவ்விப் பிடித்தது. அவ்வாறு பிடிபட்ட தேரையின் வாயில் அது அப்போது கவ்விய சிறுவண்டு உயிரோடு இருந்தது....! அந்த வண்டோ சற்று முன்னர் தான் ஒரு பூவிலிருந்து தேனை உண்டது. அந்தத் தேன் வாயில் அப்படியே உள்ளது. அது தனக்கு ஏற்பட்டுள்ள இத்தனை ஆபத்துக்களைக் கூட மறந்து தேன் சுவையிலேயே மயங்கி நிற்பது போல் துன்பம் நிறைந்தது மனித வாழ்வு. அது நோய் கொள் முன் ஆரூர் தொழுது உய்யலாம். என்ற அற்புதத் திருவாக்கை நற்றமிழ் வல்ல ஞானக் குழந்தை பாடியவாறே நடந்த திருவீதியல்லவா ஆரூர் திருவீதி.....!

தம்பிரான் தோழர் எனும் சுந்தரர்க்காக தன் பொன்னார் திருவடிகள் நோக பரவையாரிடம் தூது சென்ற பரமனார் நடந்த திருவீதியல்லவா ஆரூர் திருவீதி...!

சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரில் சங்கிலியாரோடு இருந்த காலத்தில் இளவேனிற் பருவம் வந்தது. திருவாரூரில் அப்போது நடைபெறும் வசந்த விழாவை நினைத்துப் பார்த்தார். இதனை சேக்கிழார் பெருமான் ஏயர் கோன் கலிக் காமநாயனார் புராணத்தில்.

"பொங்கு தமிழ்ப் பொதிய மலைப் பிறந்து பூஞ்சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்ச்சாரலிடை வளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர் அணிவீதி அழகரவர்

மங்கல நாள் வசந்தம் எதிர் கொண்டருளும் வகை நினைந்தார்''
வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங்கப் பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த ஓலக்கம் அதனிடையே
பண்ணமரும் மொழிப் பரவையார் பாடல் ஆடல்தனைக்
கண்ணுறமுன் கண்டு கேட்டார் போலக் கருதினார்''

இவ்வாறு ஆரூர் வீதியில் பவனி வரும் வீதிவிடங்கனையும், அந்த வசந்த விழாவினையும், அங்கு பாடியும் ஆடியும் மகிழும் பரவைநங்கை யாரையும் மனதுள் நினைத்து வருந்தி,

''ஏழிசையாய் இசைப் பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக் குடனாகி
மாழை ஒண் கண் பரவையைத் தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே''

என்று பாடும் நிலையில், சுந்தரர் கண்ட அந்த வசந்த விழா நிகழ்வுற்ற வீதியல்லவா ஆரூர் திருவீதி.....!

''கோவலன் மதுரை மூதூரில் கொலையுண்டான். செய்தி அறிந்த கண்ணகி பாண்டியன் முன் சென்றாள்

''நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடியோ''—என்று

பாண்டியன் வினா எழுப்ப, ''தேரா மன்னா.......! என்று விளித்து ''வாயிற் கடை மணி நடுநா நடுங்க ஆவின் கடை மணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன் அரும் பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன் பெரும் பெயர் புகார் என்பதி''.... என்று தன்னாட்டில் திருவாரூரில் நிகழ்ந்த நிகழ்ச்சியை, தன் சோழ நாட்டுப் பெருமையை பெருமிதமாகக் கூறுகிறாள். மன்னனின் கொற்ற வாயிலில் தூங்கிய மணியின் நடு நாக்கு நடுங்கி ஒலிக்க, அங்கு நீதி கேட்டுத் தன் கன்றை இழந்து நிற்கும் பசுவின் கண்ணிலிருந்து வழியும் நீரானது தன்னுடைய இதயத்தை தீயெனச் சுட, தன் ஒரே புதல்வனை தேர்காலில் இட்டு மாய்த்து நீதி வழங்கினானே மனு நீதிச்சோழன் அவன் வாழ்ந்த சோழநாடு என் நாடு என்று கூறினாள். கண்ணகி பேசும் பெருமை மிகு நிகழ்ச்சியாய் நீதிக்காக மன்னவனின் தேரூர்ந்த திருவீதியல்லவா ஆரூர் திருவீதி.....!

''தேராரும் நெடுவீதித் திருவாரூர்''

எனப் பேசும் சேக்கிழார் சுவாமிகள் "மங்குல் தோய் மாட வீதி" என்றும்

"பரசுவந் தியர் முன் சூதர் மாகதர் ஒருபால் பங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாடவீதி"

என்றும் ஆரூர் திருவீதியின் பெருமைகளைப் போற்றி பரவுகிறார். இது மட்டுமா...?

உடம்பெல்லாம் தொண்ணூற்றாறு விழுப்புண் பெற்ற விஜயாலயன், காவிரிக்கு இருகரையும் கவினுறு கோயில்கள் எடுத்த் ஆதித்தச் சோழன், மதுரையும் ஈழமும் வென்ற கோப்பரகேசரி எனும் பட்டம் புனைந்த பராந்தக சோழன், சிவஞானச் செம்மல் கண்டராதித்தர், அரியொப்ப அரிஞ்சயன், ஆரூர் அரநெறியை கற்றளியாக்கிய செம்பியன் மாதேவியார், அவர் திருவயிறு வாய்த்த உத்தம சோழன், சிவபாத சேகரனாம் இராஜராஜன், கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திரன், அவன் பெற்ற முத்துக்கள், கலிங்கம் கொண்டு சுங்கம் தவிர்த்த முதற் குலோத்துங்கன், கல்தேர் செய்த விக்கிரமன், திருத்தொண்டர் மாக்கதைகேட்டு ஆரூர் உய்ந்த அனபாயன், கல்லில் கலைக் கோயில் கண்ட இரண்டாம் இராஜராஜன், அவனுக்கு பின்னவனாம் இரண்டாம் இராஜதிராஜன், கீழைக் கோபுரம் எடுத்த மூன்றாம் குலோத்துங்கன் அவன் வழித் தோன்றல்களும் சோழர் தம் தேவியர்களும் தேரில் பவனி வந்து தியாகனைப் போற்றிய திருவீதியல்லவா திருவாரூர் திருவீதி....!

கலிங்கம் வென்ற கருணாகரத் தொண்டைமான், அமைச்சர் அம்மையப்பன் பல்லவராஜர், ஆகியோர் அடியெடுத்து நடந்த திருவீதி....! பதினென் புராணம் வல்ல ஈஸ்வரசிவர், மற்றும் பஞ்சவர் எனும் பாண்டியர் பலர் நடந்த திருவீதி...! கிருஷ்ணதேவராயரும் அச்சுதராயரும் வலம் வந்த திருவீதி...! செவ்வப்பன் அச்சுதன் ரகுநாதன் விஜயராகவன் என்ற நாய்க்கர்கள் திருவுலாவந்த திருவீதி....! சாஹஜியிலிருந்து சரபோஜி மன்னன் வரை வலம் வந்த தீருவீதி யல்லவா திருவாரூர் திருவீதி.

அடிமுடி நெடிய திருவீதி செந்தாமரை நாறிய திருவீதி (திருவடிப் போது நாறிய திருவீதி) பொன்பரப்பிய திருவீதி, புகழாபரணத் திருவீதி என்றெல்லாம் பெயர்கள் பெற்ற ஆரூர் வீதிகளுக்குரிய பெருமை இந்த புவனத்தில் வேறு எந்தவீதிக்கு உண்டு?

இங்கு பவனி வரும் ஆரூரன் திருத்தேருக்குரிய பெருமை இப்புவியில் வேறு எதற்கு உண்டு?

# ஆரூரில் ஆழித்தேர் விழா

''ஆழித் தேர் வித்தகனை யான் கண்டதாருரே'' எனவும், ''தேர் ஊரும் நெடுவீதி பற்றி நின்று, திருமாலும் நான் முகனும், தேர்ந்தும் காணாது, ஆரூரா! ஆரூரா என்கிறார்கள்—அமரர்கள் தம் பெருமானே! ஆரூராயே'' என்றும் திருநாவுக்கரசு பெருமானார் போற்றும் தொன்மைப் பெருமை வாய்ந்த ஆரூர் திருத்தேருக்கு இன்றும் அழைக்கப் பெறும் சிறப்புப் பெயர் ''ஆழித்தேர்'' என்பதேயாகும். பவனி வீதிவிடங்களின் திருவிழாக்களான பங்குனித் திரு நாளையும், மார்கழி ஆதிரை நாளையும் அப்பர் பெருமான் கண்டுகளித்ததை தம் ஆரூர் பதிகத்தில் ''ஆரூர் அகத்து அடக்கிப் பார் ஊர் பரப்பத் தம் பங்குனி உத்தரம் பார் படுத்தான்'' என்றும் '' இந்திரன் ஆதிவானவர், சித்தர் எடுத்து ஏத்தும் அந்திரன் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்!'' என்றும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு மிகத் தொன்மைப் பெருமைவாய்ந்த இவ்விழாக்களில் பங்குனி உத்திரப் பெருவிழா பங்குனி ரதோஸ்தவ விழா என்ற பெயரால் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. தஞ்சாவூர் அரண்மனை சரஸ்வதி மகாலில் உள்ள மாராத்திய மன்னர் காலத்து மோடி ஆவணம் ஒன்றில் கி.பி. 1843ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆரூர் விழா பற்றிய குறிப்புகள் உள்ளன. இதில் ''திருவாரூர் ஸ்ரீதியாகராஜ சுவாமி பங்குனி ரதோஸ்தவம் மாசி மாதம் 8-ந் தேதி முதல் சித்திரை இரண்டாம் தேதி வரையிலும் ஐம்பத்து ஐந்து நாள் உத்சவ விவரங்கள்'' - என்ற பட்டியல் உள்ளது. (309/75/255/13-1843 எ.டி.)

இதே போன்று தேவாசிரிய மண்டபத்து விதானத்தில் கி.பி. 1700 ஆண்டுகளில் எழுதப்பெற்ற ஓவியத் தொகுப்பில் பங்குனித் திருநாள் காட்சிகள் துவஜாரோகணம் எனும் கொடியேற்று நாளிலிருந்து அனைத்து விழாக்களும், வண்ணப்படைப்பாக, தமிழில் எழுதப்பெற்ற காட்சி விளங்களுடன் உள்ளன. ஆரூர் கல்வெட்டுக்களிலும் பங்குனித்திருநாள் பற்றியக் குறிப்புகள் உள்ளன. இரண்டாம் பிரகாரம் மேற்குப் பகுதியில் உள்ள இரண்டாம் குலோத்துங்கனின் 7ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (கி.பி. 1140-ல்) ''திருப்பங்குனி உத்திரத் திருநாளைக்கு திருக்கொடி ஏற்றுக்குத் திருமுளை சார்த்த எழுந்தருளும் திருநாள் ஒன்றும், திருநாளில் எழுந்தருளும் திருநாள் பத்தும்.....'' என்றும் கல்லெழுத்துக்கள் தொடர்கின்றன. சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணமும் அதில் திருநகரச் சிறப்பாக ஆரூர் நகர்ச்சிறப்புகள் பற்றியும் எழுதிய காலத்தில் தான் இக்கல்வெட்டும் எழுதப்பெற்றது.

இச் செய்திகளை எல்லாம் தொகுத்து நோக்கும் போது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் ஆளுகையின் போதும், பின்னர் சோழப்

பேரரசர்கள் காலத்திலும், விஜயநகர அரசர்கள் காலத்திலும், பின்னாளில் தஞ்சை மராத்தியர்கள் காலத்திலும் தொடர்ந்து ஆரூரில் பங்குனிப் பெருவிழா நிகழ்ந்தமையை அறிகிறோம். இப்பெரு விழாவின் முக்கிய அங்கம் வசந்தோற்சவத்தில் ரதாரோஹணம் என்னும் ஆழித்தேர் பவனி வரும் திருநாளேயாகும்.

ஹஸ்த நட்சத்திரத்தில் துவஜாரோஹணம் எனும் கொடியேற்றி பூசத்தில் தேருக்குச் சென்று, ஆயில்ய நாளில் தேரோட்டம் நிகழ்த்தி உத்திரத்தில் தீர்த்தம் அருளி, உத்திராடத்தில் விழாவைப் பூர்த்தி செய்வது மரபாகும். இது முப்பத்தி ஆறு நாள் திருவிழாவாகும். இதுதவிர விழா தொடக்கத்திற்கு முன்பு பூர்வாங்கம் ஒரு நாளும், ஐயனார் திருவிழா ஐந்து நாளும், பூர்வாங்கம் ஒரு நாளும், பிடாரி திருவிழா பத்து நாளும், பூர்வாங்கம் இரண்டு நாட்களும், கொண்டாடி பங்குனிப் பெருவிழா முப்பத்தாறு நாட்களும் சேர்த்து ஐம்பத்து ஐந்து நாட்கள் ரதோஸ்தவம் நடத்தினர்.

இப்பெருவிழாவை அப்பர் சுவாமிகள் முன்னின்று நிகழ்த்துவதாக ஒருமரபு போற்றப்பெறுகின்றது. ஞான சம்பந்தப் பெருமானார் தைப் பூசத்திருவிழாவைப் முன்னின்று நடத்தியதாகவும், அவர் பங்குனி ரதத்திருநாளுக்கு பந்தக்கால் முகூர்த்தம் செய்துவிட்டு திருத்தலயாத்திரை மேற்கொண்டதாகவும், பின்னர் அப்பர் சுவாமிகள் வந்து கொடியேற்றி பங்குனித் திருநாள் எடுப்பதாகவும் வழிவழி மரபாக இத்தலத்தினர் போற்றுகின்றனர். எனவே ஆரூரில் தைப் பூச விழாவை சம்பந்தர் விழாவென்றும், பங்குனித் தேர்விழாவை அப்பர் விழாவென்றும் குறிப்பர். தைப்பூச விழாவின் போது சம்பந்தர் திருமேனி எழுந்தருளபெற்று, விக்னேஸ்வரர் ஸ்தம்பத்தினை (பந்தக்கால்) சண்டிகேசர் சன்னதியிலும், பிரபாஸ்தம்பத்தை ஆயிரங்கால் மண்டபத்திலும், ரதஸ்தம்பத்தை தேரடியிலும் நாட்டப் பெறுகின்றது. இது ரதோஸ்தவத்தின் முன்னோடி நிகழ்ச்சியாகும்.

துவாஜாரோகணம் எனும் கொடியேற்று நாளுக்கு முதல்நாள் அப்பர் சுவாமிகள் திருமேனி உலாவரும். அப்போது தியாகப்பெருமான் முன்னர் சுவாமிக்கு திருஓடு அளிக்கப்பெறும் இது ரதாரோஹணப் பெருவிழாவிற்கு அப்பர் சுவாமிகள் ஆரூருக்கு எழுந்தருளும் நிகழ்ச்சியாகும். மறுநாள் கொடி ஏற்றம் நிகழும். அன்று ரிஷப உருவமும், மங்கலச் சின்னங்களும், திரிசூலம் வரையப் பெற்ற கொடியை உரியவழிபாடுகளுக்குப் பின்னர் கொடி மரத்தில் ஏற்றப்பெறும்.

இதற்கு முன்னர் தமிழ் மொழிப் பண்டாரம் என அழைக்கப்படும் ஒருவரும், பெரிய பிள்ளை என அழைக்கப்படும் கோயில் கணக்கரும், கோயில் சிப்பந்திகளுடனும், தியாகப் பெருமானை பூஜிக்கும் நயினாருடனும் தியாகப் பெருமான் முன் சென்று ஸ்ரீமுகம் எனும் திருமுகத்தை படிக்கத் தொடங்குவர்.

இது திருவிழா பற்றிய இறைவனுடைய ஸ்ரீமுகமாக கருதி நயினாரோடு கோயில் பெரிய கணக்கர் படிப்பார். இத்திருமுகம் பின்வருமாறு எழுதப்பெற்றிருக்கும். இதில் ஆண்டு தோறும் அவ்வவ் ஆண்டுகளின் பெயரும், விழாத் தேதிகளும் குறிப்பிடப்பெறும்.

ஸ்ரீமுகம்

சுபமஸ்து:

யக்ஞகத்ரய நிர்மான த்ரான நிர்வான காரணம்
ததிதம் சாசனம் சம்போக பூர்வாரூர் வாசினஹ
நம்மனுக்கு வன்தொண்டரான ஆலால சுந்தரர்க்கும்
நமக்கும் ஸ்ரீ விபவ நாம சம்வத்சரம் மாசி மாதம்
பன்னிரெண்டாம் தேதி மகத் துவஜாரோஹணம்
செய்து பங்குனி மாதம் ஐந்தாம் தேதி அடிய முடிய
நெடிய திருவீதியில் திரு ஆழித் திருத்தேரில்
திருஉலா செய்து அருளுகிற படியால் ஸ்தானம்
மகேஸ்வர பரிச்சின்னங்களை கூட்டிக் கொண்டு வரவும்
தாமும் வரவும் சுபமஸ்த்து

இது இறைவனே தம்முடைய ஆழிந்தேர் விழாவிற்கு அடியார்களை அழைக்கும் திருமுகமாக போற்றப்படுகின்றது.

பின்னர் இறைவனின் திருமுகப்படி கோயில் பொறுப்பாளரான சண்டிகேசர் இவ்வாழித்தேர் விழா பற்றி உலக மக்களுக்கும், தேவாதி தேவர்களுக்கும் அறிவித்து அவர்களை விழாவுக்கு வருமாறு அழைக்க வேண்டும். எனவே ஈசனின் திருமுகம் போன்றே சண்டிகேசரியின் திருமுகம் ஒன்றும் அவர் சன்னதியில் படிக்கப்பெறும். இதனையும் கோயில் பெரியகணக்கு என்பவர் சண்டிகேசர் முன் படிப்பார் அத்திருமுகமாவது,

சுபமஸ்து

ஸ்ரீதியாகராஜா சிவாக்ஞையாலே பரிபாலனம்
ஆதி சண்டிகேஸ்ரவரர் அரன் அருளால் இப்பூதலத்தில்
தேவாலங்களில் உள்ள தேவர்கள் வரவும், தாமும் வரவும்
ஸ்ரீவிபவ நாம சம்வத்சரம் மாசி மாதம் 12ஆம் தேதி
பெருமாள் தியாகராஜருக்கு மகத்துவஜாரோஹணம் பண்ணி
பங்குனிமாதம் ஐந்தாம் தேதி அடிய முடிய நெடிய திருவீதியில்
திரு ஆழித்தேரில் திருஉலாச் செய்து அருளுகிறபடியால் ஸ்தான
மாகேஸ்வர பரிச்சின்னங்களைக் கூட்டிக் கொண்டு
வரவும்-தாமும் வரவும். சுபமஸ்து

இவ்வாறு எழுதப்பெற்ற திருமுகத்தை கணக்கர் படித்த பின்பு தமிழ்ப் பண்டாரம் இதனை நாட்டிலுள்ள தேவாலங்களுக்கு எடுத்துக் சென்று அத்திருக்கோயில்களில் இறைவன் முன்பும், மாகேஸ்வரர்கள் முன்பும் படிப்பார். இது மிகத் தொன்மைக்காலமாகப் போற்றப் பெறுகின்ற மரபு. மேலும் தியாகராஜரின் ஸ்ரீமுகத்தில் குறிப்பிடப்பெறும் "யக்ஞகத்ரய நிர்மான த்ரான நிர்வான காரணம் தநிதம் சாசனம் சம்போக பூர்வாரூர் வாசினஹ" என்ற சுலோகம் இத்திருக்கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டொன்றில் (தி. க. எண் 44) அப்படியே குறிக்கப்பெற்றுள்ளது நோக்குதர்க்குரியதாகும்.

ஆரூர் ஆழித்தேர் விழாவுக்கு பூதலத்தில் உள்ளவர்கள்மட்டுமின்றி எல்லா தெய்வங்களும், தேவர்களும் முனிவர்களும் எழுந்தருள் வதாகவே ஐதீகம். எனவேதான் துவஜாரோகண நாளன்று தியாகப் பெருமான் திருமண்டபத்தில் அன்னப்பாவாடை விரிக்கப்பெறுகின்றது. இறைவனுக்கு அமுது நிவேதனம் செய்த பின்பு, அவர் முன்றிலில் சிறப்பாக தயாரிக்கப் பெற்ற அன்னத்தை, தரையில் பரப்ப பெற்றுள்ள தென்னங் கமுதுகளின் மேல் விரிக்கப்பெற்றுள்ள நீண்ட வாழை இலைகளில் பரப்பி நீண்ட பாவாடையாகச் செய்து அதற்கு வழிபாடு நடத்தப்பெறும். இப்பாவாடை அமுது விழாவிற்கென வந்துள்ள தேவர்களுக்கும் கணங்களுக்கும் அர்ப்பணம் செய்யப்பெறும், நிகழ்ச்சியாகும். இப்பாவாடைப் பணியை அம்மையப்பன் (அம்மையப்ப நல்லூர் என கல்வெட்டுக்கள் கூறும் ஊர்) எனும் ஊரினைச் சேர்ந்த அறவுளம் கொண்ட தியாகனின் அடியவர் ஒருவர் ஆண்டுதோறும் செய்து வருகின்றார்.

இவ்வாறு தியாகப் பெருமானின் திருமுகத்தாலும், சண்டிகேசரின் திருமுகத்தாலும் மாகேசுவரர்களும், தேவாதிதேவர்களும் எழுந்தருள திருவாரூர் ஆழித் தேர் விழா தொடங்குகின்றது. துவஜா ரோகணத் திருநாளன்று ராஜநாராயணன் திருமண்டபத்தில் திருஓடும், கௌணியும் (கௌபீனம்) அடியவர்களுக்கு வழங்கும் திருவிழாவும் நடைபெறுகின்றது. ஈசனின் திருமுகத்தாலும், சண்டிசேகரின் அழைப்பாலும் மாகேஸ்வரர்கள் ஆரூர் ஆலயத்தில் கூடியுள்ளார்கள். அப்பர் பெருமானார் முன்னின்று இவ்விழாவை நிகழ்த்துகின்றார். எனவே இங்கு வருகை புரிந்துள்ள அடியார்களுக்கு புதிய கௌணியும் (கோவணம்) புதிய திருஓடும் அளிப்பது தலத்தார் கடமை. எனவே புதிய திரு ஓடுகளும், கோவணத்துணிகளும் சிவனடியார்களுக்கு வழங்கப்பெறும். இம்மரபும் இன்றுவரை ஆரூர் திருக்கோயிலில் போற்றப்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவைகளெல்லாம் முடிந்த பின்பு, யாகசாலை பூஜைகள் தொடர்ந்து நிகழ்வுறும். உரிய காலங்களில் அந்தந்த திருநாளுக்குரிய யாகங்கள் முறையாக நிகழும். முதல்நாள் கணபதி பூஜையும் வாஸ்த்து சாந்தியும் மறுநாள்

மிருத்சங்கிரஹணமும் அங்குரார்ப்பணமும் நிகழ்ந்து, அதற்கு மறுநாள் துவஜாரோகணமும் நடைபெறுகின்றது. இதற்கு மறுநாள் தொடங்கி முதல் ஏழு நாள் வினாயகர் திருநாளும், சுப்ரமணியர் திருநாளும் இணைந்தே நிகழும். இதனை அடுத்து பக்தர்களின் திருநாளாகிய மூவர் முதலியர் திருவிழா அல்லது பக்தோற்சவம் என்று அழைக்கப்படும் திருவிழா மூன்று நாட்கள் நிகழும். இதில் அதிகாரநந்தி, சண்டிகேசர் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் திருமேனிகள் திருவுலா எழுந்தருளும்.

இதனை அடுத்து ஒருநாள் காலபைரவர் திருவிழா நிகழ்வுறும். அதன் மறுநாள் காட்சி கொடுத்த நாயனார் திருவிழாவும், மறுநாள் சந்திரசேகரர் பட்டம் ஏற்கும் திருவிழாவும் நடைபெறும். ஆரூர் தலத்தில் ஈசன் தியாகராஜாவாக இருப்பதால் இவர் சிம்மாசனத்திலன்றி வாகனங்களில் எழுந்தருளமாட்டார். எனவே இவருக்குரிய திருநாட்களில் திருவீதியில் எழுந்தருள இவருக்கு இவரது பட்டம் ஏற்ற சந்திரசேகரர் திருமேனியே வீதிவலம் வரும். இப்பட்டம் ஏற்கும் திருநாளே சந்திரசேகரர் பட்டோற்சவமாக நிகழ்கின்றது.

சந்திரசேகரர் பட்டம் கட்டி கொண்டு வீதிவலம் வரும் விழாவை முசுகுந்தன் திருவிழா என்றும் ஆரூர் ஓவியங்களில் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்விழாவை முசுகுந்த சக்கரவர்த்தி முன்னின்று நிகழ்த்துவதாக கருதப் பெறுகின்றது. இவ்விழாவில் அஸ்திர தேவருக்கு முக்கியத்துவம் உண்டு. அவருக்கு சிறப்பு வழிபாடுகள் உண்டு. இவ்வாறு சந்திரசேகரர் பட்டம் ஏற்று கோயிலினுள் உலா வரும்போது ஒவ்வொரு திக்கிலும் திக்பிரயோக மந்திரங்களும், திக்பலிகளும் அளிப்பர். ஈசான திசையில் சந்திரசேகரர் வந்த பின்பு அவர்முன்னர் இத்தலத்து முட்டுக்காரர் தலையில் பரிவட்டம் கட்டிக் கொண்டு சுத்தமத்தளத்தை தலைமேல் வைத்துக்கொண்டு மத்தளத்தை முழக்குவார். இதற்கு "பூத நிருத்தம்" என்று பெயர். இவ்வாறு ஒலிக்கப் பெறும் சுத்த மத்தள ஓசைக் கேற்றவாறு இவ்விழாவிற்கென வந்துள்ள பூத கணங்களெல்லாம் விண்ணில் ஈசன் முன்பு நிருத்த மாடி மகிழும். இவ்வாறு பூதநிருத்தமாடிய பின்பு சந்திரசேகரர் வீதிகளில் உலா வருவார்.

பிறகு மறு நாள் முதல் மூன்று நாட்கள் சந்திரசேகரரின் கேடக உற்சவம் நிகழும். அதன் மறுநாள் வன்மீகநாதருக்கு சகஸ்ர கலசாபிஷேகம் எனும் ஆயிரம் கலசங்களால் செய்யப்பெறும் திருமஞ்சன விழா நடைபெறும்.

இதன் மறுநாள் தியாகராஜசுவாமியின் வசந்த உற்சவம் தொடங்குகின்றது. முதல் நாள் எட்டுத் திசைகளிலும் துவஜாரோகனம் நிகழும். இதனை அஷ்டக் கொடி விழா என அழைப்பர். தியாகப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் நிகழ்வுற்ற பின்பு அஷ்டக் கொடிகளும் ஏற்றப்பெறும். மறுநாள் இந்திர விமான உற்சவம் நடைபெறும். அன்று

சந்திரசேகரர் இந்திர விமானத்தில் எழுந்தருளி வீதி உலா வருவார். இதனை அடுத்து பூதவாகன உற்சவம் ஒருநாளும், வெள்ளியானை உற்சவம் ஒரு நாளும், வெள்ளி ரிஷப வாகன உற்சவம் ஒரு நாளும், நடைபெறும். மறுநாள் ஆயில்ய நட்சத்திரத்தில் தியாகப் பெருமான் தேருக்கு எழுந்தருளி மகாரதாரோகணம் நடைபெறும். இப்பெருவிழா "ஆழித்தேர் திருவிழா" என அழைப்பர். நான்கு வீதிகளிலும் உலாப்போந்த ஈசனுக்கு மறுநாள் பிராயசித்தாபிஷேகம் நடைபெறும். அன்று பங்குனி உத்திரத் திருநாளாக இருப்பதால் சந்திரசேகரர் தீர்த்தம் அருளுவார். அன்று இரவு நடைபெறும் மகா அபிஷேகம் மிக குறிப்படத் தக்கதாகும். மறுநாள் காலை பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாத முனிவருக்கும் தியாகராஜா பாத தரிசனம் காட்டுவார். இவ்விழா ஆரூரில் நிகழும் மிக முக்கிய நிகழ்ச்சி ஆகும். உத்திராட நாளன்று விழா முடிவுறும்.

இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளையும் அம்சங்களையும் கொண்டு நிகழும் ஆரூர் ஆழித் தேர் விழா தமிழக கோயில்களில் நிகழும் விழாக்களில் மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புகள் வாய்ந்த ஒன்று.

# ஓவியத்தில் ஆரூர் திருவிழா

கி.பி. 1684 முதல் 1712 வரை சோழ நாட்டை ஆட்சி புரிந்தவர் தஞ்சை மராத்திய அரசர் சாஹஜி என்பவராவார். இவர் எழுதிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் தியாகேச முத்திரையையே வைத்தவர். இப்பாடல்கள் தியாகேச பதங்கள் என்ற பெயரில் சுவடிகளாகத் தஞ்சை அரண்மனை நூலகத்திலுள்ளன. இம்மன்னரின் காலத்தில் ஆரூரில் வாழ்ந்தவர் ஓவியர் சிங்காதனம் என்பவர். இவர் இவ்வூரில் இம் மன்னரின் பிரதிநிதியாக வாழ்ந்த சாமந்தனாரின் "வாசல் பிரதானி" என்ற பதவி வகித்தார். ஆரூர் திருக்கோயிலிலுள்ள தேவாசிரிய மண்டபத்து உட்புறவிதானத்தில் (கூரையில்) மிக நீண்ட தொகுப்பு ஓவியக் காட்சியை தமிழில் எழுதப்பெற்ற விளக்கங்களோடு தீட்டியுள்ளார். இதில் முசுகுந்த புராணம் முழுவதும் உள்ளது. அதைத் தொடர்ந்து கி.பி.1700 ஆண்டு காலங்களில் திருவாரூரில் நிகழ்ந்த பங்குனித் திருவிழாவையும், வசந்த விழாவையும் முழுமையாக காட்சி விளக்கங்களுடன் தீட்டியுள்ளார். இக்காட்சி தொகுப்பு முழுவதும் நம்மை சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு அழைத்துச் சென்று விழா நிகழ்ச்சிகள் அனைத்தையும் காட்டுகின்றது. அக்காட்சித் தொகுப்பைக் காண்போம்.

தேவாசிரிய மண்டபத்தின் வடகிழக்கில் துவங்கும் இவ்வோவிய காட்சியில் குறிப்பிடத்தக்க அம்சமாக தியாகராஜ சுவாமி திருவாரூர் கோயிலினுள் எழுந்தருளுவதும்; இம்மண்டபத்தில் இப்புராண ஓவியத்தை வரைந்த ஓவியரான "சித்திரவேலை சிங்காதனத்தின்" உருவப்படமும் உள்ளது. இதற்கு முன்பு உள்ள காட்சி ஒன்றில் சிங்காதனத்தின் பெயர் எழுதப்பட்டிருந்தாலும் அவரது உருவம் ஓவியமாக முதன் முதலில் இடம் பெற்றுள்ளது இப்பகுதியில்தான்.

இக்காட்சி திருவிழா துவக்கம் ஆவதை குறிப்பிடும் வண்ணம் அமைந்துள்ளது. தியாகராச சுவாமியை பல்லக்கில் வைத்து தூக்கி வருகிறார்கள். தேவர்கள் பூமாரி பொழிகின்றனர் சூரியன் பிறைச்சந்திரன் போன்றவை வானத்தில் உள்ளன. கோயிலின் முன்பு கொடிக்கம்பம் ஒன்று உள்ளது. அதில் "கொடிக்கம்பம்" என்று எழுதப்பட்டுள்ளது. குருக்கள் (சிவாச்சாரியார்) ஒருவர் ரிஷபக் கொடி ஒன்றை ஏற்றுகிறார். இதனை அடுத்துள்ள ஓவியம் ஒன்று "துவஜா ரோகணம்" என்று குறிப்பிடுகிறது. முசுகுந்தனும் மற்ற மன்னர்களும் கூப்பிய கரங்களுடன் பவனி வரும் தியாகராச சுவாமிக்கு முன்பு வருகின்றனர். பண்டாரம் ஒருவருடைய தலையில் பரிவட்டம் கட்டப்படுகிறது. அருகே "தம்பிரான் பரிவட்டம் கட்டிக் கொள்கிறது" என்று எழுதப்பட்டுள்ளது. கொடிக்கம்பத்தின் அருகில் ஒருவன் தலையில் நிவேதனம் உள்ள தட்டை சுமந்து வருகிறான். தாரை, கொம்பு, மத்தளம் போன்றவை முழங்கப்படுகிறது. வான மண்டலத்திலிருந்து தேவர்கள் தியாகராசரை வணங்கி நிற்கின்றனர். கோவில் முழுவதும் விழாக் கோலமாக உள்ளது.

சண்டிகேசுவரர் கோயில் ஒன்றுள்ளது. அதில் ''சண்டிகேசுவரர் சன்னதி'' என்று எழுதப்பட்டுள்ளது. சண்டிகேசுவரர் சிலைஒன்று அலங்கரிக்கப்பட்டு பவனியாக சுமந்து வருகின்றனர். முசுகுந்தன் கைகட்டிக்கொண்டு நிற்கிறான் அருகே பண்டாரம், மன்னர்கள் மற்ற மக்கள் அனைவரும் வணங்கி நிற்கின்றனர். அழகிய குடைகளும் தோரணங்களும், தீவட்டிகளும் பிடிக்கப்பட்டு ஊர்வலம் புறப்படுகிறது.

ஐயனார் கோயில் ஒன்று உள்ளது. அதில் ஐயனார் பூரணி, புஷ்கலை என்ற இரு தேவியர்களுடன் அமர்ந்துள்ளார். அதன் அருகே காளி தேவியின் கோயில் ஒன்றுள்ளது. அதில் தேவி எட்டு கரங்களுடன், தரையில் அரக்கன் ஒருவனை மிதித்து சூலத்தால் குத்தும் கோலத்தில் அமர்ந்துள்ளாள். கையில் மணி, கேடயம், திரிசூலம், உடுக்கு, குத்துவாள், நாகம் போன்றவை உள்ளது. கோயிலின் முன்பு பலிபீடமும் கொடிக்கம்பமும் உள்ளது. இக் காட்சியின் கீழே முசுகுந்தனும் மற்ற அடியவர்களும் நிற்கும் கோலம் உள்ளது.

இவை திருவிழாக்கள் நடக்கும்போது எல்லை தெய்வங்களான ஐய்யன், பிடாரி போன்றவைகளுக்கு பூஜை செய்யப்படுவதை குறிப்பிடும் வண்ணம் விழா தொடங்கும் காட்சியினூடே படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சுப்பிமணிய சுவாமியின் திருமேனி வள்ளி தெய்வானையுடன் படிசட்டத்தில் அலங்கரிக்கப்பட்டு வீதி வலம் வருவதற்கு எடுத்து வரப்படுகிறது. அருகே வினாயகர் உருவச் சிலையும் எடுத்துவருகிறார்கள். வண்ணகுடைகள், தீவட்டிகள், போன்றவை அடியவர்களால் சுமந்து வரப்படுகிறது. இக்காட்சியின் கீழ் ''தியாகராச சுவாமியார் திருவிழாவுக்காக விக்குனேஸ்வரர் சுப்பிரமணிய சுவாமியும், சண்டேசுவரரும் வீதிபிரதட்சனம் வருகிறது. இவ்வடம், துசாரோகண முதல் ஏழுநாள் பிள்ளையார் திருவிழா – தியாகராசரே துணை என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு இறை உருவங்கள் பவனியாக எடுத்து வரும்போது வீதியில் பெண் ஒருத்தி நாட்டியம் ஆடுகிறாள். முதியவர் ஒருவர் தாளம் இடுகிறார். தவில், நாதஸ்வரம் போன்றவை இசைக்கப்படுகிறது. எக்காளம் ஊதப்படுகிறது. பறை (தப்பு) அடிக்கப்படுகிறது. இவ்வகை நாட்டியக்காட்சிகளுக்கு முன்பாக ஒருவன் தரையில் வாணம் ஒன்றை கொளுத்துகிறான். அதிலிருந்து வண்ண வண்ணமாக தீப்பொறிகள் கிளம்பி பீச்சிட்டு கொட்டுகிறது. அடுத்து ஒருவன் நீள குச்சிகளில் உள்ள வாணத்தை கொளுத்துகிறான். அவை பீறிட்டு வானத்தில் சென்று வெடிக்கின்றன. ஒருவன் நீண்ட கம்பை பிடித்துள்ளான். அதன் உச்சியில் சக்கர வாணம் ஒன்று அழகிய தீப்பொறிகளுடன் சுழல்கிறது. இவ்வாறு வண்ண வண்ண வாணங்களும் வெடிகளும் விண்ணதிர முழங்குவதுடன் எங்கும் ஒளிமயமாக உள்ளது.

நடுவே அலங்கரிக்கப்பட்ட படி சட்டத்தில் பைரவருடைய திருமேனி உள்ளது. இதனை அடியவர்கள் சுமந்து வருகின்றனர். அவருக்கு வலது புறம்

சுப்பிரமணிய சுவாமி தேவிகளுடனும், வினாயகப் பெருமானும் படி சட்டங்களில் அலங்கரிக்கப்பட்டு எடுத்துவருகின்றனர். இடது புறம் முறையே மாணிக்கவாசகர், சம்பந்த மூர்த்தி, சுந்தரர், அப்பர், நத்திகேசுவர் (அதிகார நந்தி) சண்டேஸவரர் இவர்களுடைய திருமேனிகளும் படிசட்டங்களில் சுமந்து வரப்படுகிறது. இத்திருமேனிகளுக்கு கீழே மாணிக்கவாசகர், சம்மந்த மூர்த்தி, சுந்தரர், அப்பர், நந்திகேசுவர், சண்டிகேஸ்வரர் என்று தனித்தனியே எழுதப்பட்டுள்ளது. பலவகையான குடைகள், தீவட்டிகள், மற்ற விழாவிற்கான பரிச் சின்னங்கள் எல்லாம் சுமந்து வரப்படுகின்றன.

விழாக்கோலமாக உள்ள இக்காட்சியின் கீழே "முதலி மூவர்" திருவிழா, "பைரவர் திருவிழா" என்றும் எழுதப்பட்டுள்ளது. முதலிய மூவர் என்று இங்கு குறிப்பிடுவது சைவ சமயத்தின் மூவர் முதலிகள் எனக்குறிப்பிடப்படும். தேவார ஆசிரியர்களான அப்பர், ஞானசம்மந்தர், சுந்தர் இவர்களைக் குறிப்பதாகும்.

இக்காட்சியினை அடுத்து மேற்கு பகுதியில் உள்ள அரங்கத்தில் வடதிசையில் இருந்து இப்புராண காட்சி தொடர்கிறது.

நடுவே சப்பரம் போன்று அலங்கரிக்கப்பட்டு பல்லக்கில் ரிஷப வாகனரும் அம்மனும் உள்ளனர். வலது புறம் தேவியருடன் முருகன், வினாயகப் பெருமான் இவர்கள் அலங்கரிக்கப்பட்டு எடுத்துவரப் படுகின்றனர். இடது புறம் முறையே மணிவாசகர், அதிகார நந்தி, சம்பந்தர், சுந்தரர், அப்பர், சண்டிகேஸ்வரர் திருவுருவங்களும் சுமந்து வரப்படுகிறது. வழக்கமான விழாவிற்கான எல்லா அம்சங்களும் உள்ளது. இக்காட்சியின் கீழ் "தேவேந்திரன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தொன்னாயிரம் ரிஷிகளுக்கும், முதலிய மூவருக்கும், முசுகுந்தன் முதலாகிய அன்பத்தாறு தேசத்து ராஜாக்களுக்கும் ... பரிகலத்துக்கும் இன் நிலத்தில் சணங்களுக்கும் காட்சி கொடுத்து இவ்விடம் – காட்சி கொடுத்தவர் திருவிழா" என்று எழுதப்பட்டுள்ளது.

சந்திர சேகரரும் அம்மனும் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து தூக்கி வருகின்றனர். இடது புறம் சண்டிகேஸ்வரரும் பவனி வருகிறார். ரிஷபக் கொடி, பலவகையான குடைகள், தீவட்டிகள் முதலியன் தூக்கி வருகின்றனர். குருக்கள் ஒருவர் ஒரு கையால் மணி அடித்துக் கொண்டு தீபாராதனை காண்பிக்கிறார். மேடை ஒன்றில் திரிசூலம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதற்கு கீழ் "அஸ்திரதேவர்" என்று எழுதப்பட்டுள்ளது. மிக நீண்டுள்ள இக்காட்சியின் ஒருபுறம் "சந்திரகேசுர சுவாமியாருக்கு அனேகம் சாத்துடனே முசுகுந்தன் திருவிழா நடக்கிறது. இவ்விடம் இதற்கு தெற்கு வசந்தன், சித்திரவேலை சிங்காதனம் நித்தம் சதா சேவை" என்றும், அடுத்து தியாகராசரே துணை துஜாரோகணம் முதல் நாள் பூரட்டாதி நட்சத்திரத்திலே சந்திரசேகர பட்டம் கட்டிக்கொண்டு வீதி பிரதட்சணம் பன்னி வருகிறது. இவ்விடம் – இதற்கு "தெற்கு வசந்தன்" என்றும் எழுதப்பட்டுள்ளது.

அஸ்திர தேவருக்கு முன்பு ஒரு பெண் கையை நீட்டிக் கொண்டு நடனம் ஆடுகிறாள். ஆடும் இப்பெண்ணிற்கு கீழே "கைகாட்டு முறைக்காரி" என்று எழுதப்பட்டுள்ளது. இதனை அடுத்து தலையில் சுத்த மத்தளம் ஒன்றை ஒருவர் சுமந்து வர அருகே ஒருவர் துண்டு போன்ற துணியை பிடித்து வருகிறார். இதற்கு கீழே "பூதனிருதம்" என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக வினாயகரையும், முருகப்பெருமானையும் சுமந்து வருகின்றனர். வித விதமான வாணவேடிக்கைகள் நடைபெறுகிறது. இரண்டு பெண்கள் நாட்டியம் ஆடுகின்றனர். பூதநிருத்தம் என்பது ஆரூரின் தனிச்சிறப்புகளுள் ஒன்று.

இந்நாட்டிய நங்கைகளுக்கு கீழே"நடை நாடக சாலை நடனம் பன்னுகிறது இவ்விடம். இதற்கு தெற்கு வசந்தன்" என்று விளக்கம் எழுதப்பட்டுள்ளது. இவர்களுக்கு முன் நட்டுவக்காரன் ஒருவன் கையில் தாளத்துடன் நட்டுவாங்கம் சொல்கிறான். அவனுக்கு முன்பு முட்டுக்காரன் தாளமிடுகிறான். இவர்களுக்கு பின்னால் புல்லாங்குழல், மகுடி இவைகள்: இசைக்கப்படுகிறது. இக்காட்சிக்கு கீழ் 'நட்டுவாமுட்டுக்காரர்' என்று எழுதப்பட்டுள்ளது.

வீதியில் நடைபெறும் இத்தனை காட்சிகளுக்கும் முன்பாக யானை ஒன்று அலங்கரிக்கப்பட்டு முன்செல்கிறது. யானை மேல் அழகிய அம்பாரி ஒன்று உள்ளது. ஒருவன் அங்குசத்தால் யானையை ஒட்ட மற்றொருவன் ரிஷபக்கொடி ஒன்றை யானை மிதிருந்த வண்ணமே பிடித்துள்ளான். யானையின் துதிக்கையில் சாமரம் ஒன்று உள்ளது. யானையின் அருகில் கொம்பு, தாரை, எக்காளம், பறை முதலியன இசைக்கப்படுகிறது. அருகிலேயே நாதஸ்வரமும், தவிலும், வாசிக்கப்படுகின்றன. இவ்வெழிலுறு காட்சியின் கீழே "மோளவாத்தியக்காரர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரசேகரர் அம்மன் முதலிய திருமேனிகளை பல்லக்கில் வைத்து தூக்கி வருகிறார்கள். எதிரே ஒரு மண்டபம் உள்ளது. இதில் இரு சிவாச்சாரியார்கள் நின்று கொண்டு வீதியில் வரும் சுவாமிக்கு அடுக்கு தீபம் காட்டுகின்றனர். அவருக்கு எதிரே உள்ள மேடையில் இரண்டு விளக்குகளும், பூஜை சாமான்களும் உள்ளன. இதற்கு கீழே "மானேந்தியா பிள்ளை அவர்கள் மண்டபத்துக்கு சந்திரசேகர சுவாமியார் எழுந்தருளி திருக்கண்சாத்து கண்டருளுகிறது இவ்விடம் – இதற்கு தெற்கு சாமந்தனார் முகப்பு - தியாகராசரே துணை, தேவி சகாயம்" என்று காட்சி விளக்கம் தரப்பட்டுள்ளது.

சந்திரசேகரர், அம்மன் திருமேனிகளை வீதிவலமாக அலங்காரமாக எடுத்து வருகின்றனர். எதிரே ஒரு மண்டபம் உள்ளது. மண்டபக் கூரை முக்கோண வடிவில் உள்ளது. இம்மண்டபத்தில் இருந்து இருவர் தீபாரதனை காட்டுகின்றனர். மண்டபத்திற்கு கீழ் வீதியில் மூவர் நின்று வணங்குகின்றனர். ஒருவர் நீளமஸ்லின் அங்கியும், தலையில் அழகிய கலைப்பாகையும் அணிந்துள்ளார். இவருக்கு பின் தாடியுடன் ஒருவரும்,

கையில் குத்துவாள், ஒன்றினை ஏந்திய ஒருவரும் உள்ளனர். இவர்களது பெயர்களாக முறையே 1. ராயசாமந்தனார் 2. ராயசாமந்தனார் வாசல் பிரதானி சித்திர வேலை சிங்காதனம் 3. சே பெருமாள்னாயனார்.... என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் காணப்படும் இராயசாமந்தனார் என்பவர் திருவாரூர் பகுதியின் குறுநில மன்னராகவோ அல்லது அரசுப் பிரதிநிதியாகவோ பதவி வகித்திருக்கவேண்டும். அடுத்து இவ்வெழில் ஓவியங்களை எல்லாம் தீட்டிய சிங்காதனத்தின் ஓவியம் மிகத் தெளிவாகவும், புதுமை மணம் குன்றாமலும் உள்ளது.

சந்திரசேகரர் அம்மன் திருமேனிகளை பவனியாக எடுத்து வருகின்றனர். எதிரே ஒரு கோயில் முக மண்டபத்துடன் உள்ளது. அதனுள் சுந்தர மூர்த்தி பரவை நாச்சியார் உருவங்கள் உள்ளன. முக மண்டபத்தில் இரு சிவாச்சாரியர்கள் நின்று கொண்டிருக்கின்றனர்.

சந்திரசேகர சுவாமியை ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். பெரிய மடம் ஒன்று உள்ளது. அதனுள் நடுவே துருவாச முனிவர் மற்றும் ஏழு முனிவர்களுடைய உருவங்களும் உள்ளன. அம் மண்டபத்தில் முகப்பில் சிவாச்சாரியார்கள் இருவர் தீபாராதனை காட்டுகின்றனர். இம்மண்டபத்திற்கு வெளியே மூவர் நின்று கொண்டு இருக்கின்றனர். இவர்கள் பெயர்களாக முறையே 1. துருவாச மகரிஷியான பெரிய மடத்து பண்டாரம், 2. பெரிய மடந்தியாக ராசய்யன் 3. கணக்கு பெருமாநயினாப் பிள்ளை அவர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. மடத்திற்கு பின்புறம் 4. தென்னை மரங்களும், அவற்றில் குரங்குகள், ஓநாய், அணில், கிளி, போன்றவை காணப்படுகிறது.

கோயில் ஒன்று காட்டப்பட்டு கதவு பூட்டப்பட்டுள்ளது. "இதில் கோயில் கர்ப்பகிரகம்" "கதவு" என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது. சாமந்தனார் கதவு திறக்கிறது இவ்விடம்" என்ற விளக்கக் குறிப்பும் கதவின் கீழ் உள்ளது. கதவின் ஒருபுறம் நீள மஸ்லின் அங்கி அணிந்த ஒருவர் மார்பில் உடை வாளை அணைத்துக் கொண்டு இரண்டு கையையும் கூப்பிக் கொண்டு நிற்கிறார். இவருக்கு பின்னே கை கூப்பிய ஒருவர் நிற்கிறார். இவர்கள் இருவருக்கும் கீழே "சாமனந்தனா" "சிங்காதனம்" என்ற பெயர்கள் எழுதப்பட்டுள்ளது. கதவின் எதிர் திசையில் ஒருவன் கதவின் தாழ்களை திறக்கிறான். அவனது ஆடையில் "வாளவன்" என்று எழுதப்பட்டுள்ளது. கதவை திறக்கும் இவனுக்குப் பின்னே இருவர் ருத்திராட்சமாலை அணிந்து பாடிக் கொண்டு இருக்கின்றனர். இவர்களுக்கு கீழே "ஓதுவார்" என்று எழுதப்பட்டுள்ளது.

தியாகராச சுவாமியை அழகிய பல்லக்கில் வைத்து தூக்கி வர அருகே இரண்டு அம்மன், சண்டிகேஸ்வரர் போன்ற திருமேனிகளையும் சுமந்து வருகின்றனர். எதிரே வளைவு பல்லாக்கு ஒன்றில் ரிஷபவாகன திருமேனியும் எடுத்து வருகின்றனர். வானத்தில் இருந்து தேவர்கள் எல்லாம்

பூமாரி பொழிகின்றனர். கின்னரர்கள், தும்புரு போன்றவர்கள் யாழ் வாசிக்கின்றனர். தேவர்களில் "அக்கினி", "பீமன்", "ராசானியன்", போன்றவர்களுடைய பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. கீழே அடியவர்களின் கூட்டம் மகிழ்ச்சி ஆராவாரத்தில் நெருங்கி காணப்படுகிறது. அடியவர்களின் இடையே "சிங்காதனம்", "சேப்பெருமாள்" "பெத்தபசிவன்", "உதயமூர்த்தி குருக்கள்", போன்றவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளது ஊர்வலத்திற்கு முன்பு பலவகையான வாணவேடிக்கைகள் நடைபெறுகின்றது. ஓர் மரம் போன்ற வாணம் எரிந்து வண்ண சுடர்முத்துக்கள் உதிர்கின்றன. நீளக் கோல் ஒன்றில் சக்கர வாணம் சுழல்கிறது. வாணில் வண்ண வாணங்கள் செல்கின்றன. தரையில் ஓர் வட்டத்தில் சக்கர வாணம் சுழல்கிறது. அதன் நடுவில் "னில சக்கர வானம்" என்று எழுதப்பட்டுள்ளது. தியாகராசர் பவனி வரும் இவ்வெழில் காட்சியை வானத்தில் உள்ள தேவ மகளிரும் கீழே பூலோக மகளிரும் கைகூப்பிய வண்ணம் கண்டு களிக்கினறனர்.

மண்டபம் ஒன்றில் தியாகராச சுவாமி ரத்தின சிங்காதனத்தில் அமர்ந்துள்ளார். அருகே இரண்டு அம்மன்கள் தனியாக உள்ளனர். சிவாச்சாரியார் இருவர் தீபம் காட்டுகின்றனர். திருவிளக்குகள் எரிகின்றன. முசுகுந்தனும், மன்னன் ஒருவனும் வணங்குகின்றனர். தீபங்கள் எரிகின்றன. மலர் மாலைகள் அணி செய்கின்றன. மண்டபத்திற்கு மேலே கொடிகளும், குடைகளும் உள்ளன. இம் மண்டபம் தேவாசிரியமண்டபம் போன்றே உள்ளது. இக்காட்சியில் தியாகராச சுவாமி, அம்மன் திருமேனிகள் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு முகங்கள் மட்டுமே வெளித்தெரிகின்றது. இதே காட்சியில் மறு பகுதி வண்ணங்கள் பூர்த்தி அடையாமல், கோடுகள் மட்டும் தான் காணப்படுகின்றது.

தியாகராஜரின் வசந்த விழா தொடக்கம் ஓவியமாக தீட்டப்பட்டிருந்தும் இது முற்றுப் பெறாமல் போய் விட்டது. இக்காட்சி முழுவதும் தீட்டப்பெற்றிருந்தால் ஆரூர் தேர்விழா காட்சி இப் பகுதியில் இடம் பெற்றிருந்திருக்கும். அக்காட்சி எழுதப்பெறாமல் போனது நமக்கு ஒரு இழப்புத்தான்.

முசுகுந்த புராண காட்சியில் ஓவியர் சிங்காதனம் பல அற்புதமான தேர்களை ஓவியமாக வரைந்துள்ளார். அவற்றுள் தியாகப் பெருமான் மற்ற ஆறுவிடங்கர்களோடு ஆரூருக்கு தேரில் எழுந்தருளும் காட்சி மிகச் சிறப்புடைய ஒன்றாகும்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்பெருவிழா எப்படி நிகழ்ந்தது என்பதற்கு இவ்வோவியக்கூடம் சிறந்த காட்சிச் சான்றாக நிற்கின்றது. இவ்வோவியக் கூடத்தை பேணிக் காப்பதும், பிறருக்கு காட்டுவதும், தியாகப் பெருமானுக்கு நாம் செய்யும் தொண்டுகளுள் முக்கியமானதொன்றாகும்.

# மகனைக் கடிந்த மணிநெடுந்தேர்

இளங்கோ அடிகள் சிலம்பிலும், விக்கிரம சோழன் ஆரூர் கல்வெட்டிலும், சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்திலும், தேரூர்ந்த சோழபுராணம், தேரூர்ந்த சோழபுராண வசனம் போன்ற பிற்காலச் சுவடி நூல்களும், முத்துக் கவிராயரின் தியாகராஜர் குறவஞ்சி, மனு நீதி சோழமகாராஜா நாடகம், போன்றவையும், இலங்கைநாட்டு மகாவம்சம், அருட்பெரும் ஜோதி இராமலிங்கனாரின் மனு நெறிகண்ட வாசகம் போன்ற நூல்கள் வாயிலாக தேரூர்ந்த சோழனின் கதையை கூறுகின்றனர். அனைத்து இலக்கியங்களிலும் சோழ குமாரனின் தேர்பற்றியும், மனுவேந்தனின் தேர் பற்றியும் விரிவான செய்திகள் கூறப்பெற்றுள்ளன. சேக்கிழார் பெருமானார் கூறும் போது மன்னவனின் மைந்தன் சென்ற தேர்பற்றி அவனது அமைச்சனின் வாயிலாக விவரிக்கின்றார்.

"வளவ ! நின்புதல்வன் ஆங்கோர் மணி நெடுந்தேர்மேல் ஏறி
அளவில் தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆண்கன்று தேர்கால் இடை புகுந்து இறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து இளைத்தது இத்தன்மை என்றான்"

– என்று கூறுகின்றார்.

சேக்கிழாரின் வரிகளை நோக்கும்போது மன்னவனின் மைந்தன் சென்ற தேர் மணிநெடுந்தேராக ஒலிக்கக்கூடிய பல மணிகள் கட்டப்பெற்ற மிகப் பெரிய தேராக இருந்தது என்பதும் அறிய முடிகிறது. "அம்புனிற்றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச் செம்பொனின் தேர்க்கால் மீது விகையினால் செல்லப்பட்டே" – என்று கூறுவதால் அவ்வரசிளங்குமரன் சென்ற தேரின் கால்கள் செம்பொன்னால் அலங்கரிக்கப் பெற்று ஒளிவீசியமையை அறிகிறோம். எனவே தேர்க்கால்கள் பொற்றகடுகளால் அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது பொன்னொளி வீசும் வண்ணப் பொலிவோடு திகழ்ந்திருக்க வேண்டும் என்பதையும் அறிய இயலுகிறது.

"பொங்கிய தானை சூழத் தேர்மிசை பொலிந்து போந்தான்" - என்றும், "அளவில் தேர்த்தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்" – என்றும் கூறுவதிலிருந்து மன்னர்கள் தேரில் செல்லும் போது தனி ஒரு தேரில் செல்லாமல் தானை சூழ, மற்றவர்களின் தேர்களும் உடன்வர பவனி வந்தனர் என்பதை அறிகிறோம்.

இவ்வாறு பல பெருமைகளுடன் பேசப்பெறும் தேரூர்ந்த சோழனின் கதையை விக்கிரம சோழன், சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தை

இயற்றுவதற்கு முன்பே ஆரூர் திருக்கோயிலில் கல்வெட்டாகப் பொறித்தான். அதில் மனுவேந்தனின் மைந்தன் சென்ற தேர் பற்றியும், மனு ஊர்ந்த தேர் பற்றியும் குறிப்பிட்டுள்ளான். இக் கதையை ஆரூரில் கல்வெட்டாகப் பொறித்த இம்மன்னவன் கல்லால் தேர் செய்து இக்கவினுரு காவியம் முழுவதையும் சிற்ப காட்சிகளாகவும் வடித்தான்.

## கல்தேர் கூறும் காவியம்:

ஆரூர் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அணி செய்வது தேவாசிரியம் எனும் திரு மண்டபமாகும். இதனை ஒட்டி கீழைத் திருச் சுவரில் வட கிழக்காக ஓர் கோபுரவாயில் உள்ளது. இந்த வாயிலையொட்டி வெளிப்புறம் திரு வீதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கல் தேர் உள்ளது. இது மனுவின் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் அடங்கிய ஓர் கலைக் கூடமாகும். இங்கு ஓர் மண்டபம் தேரினைப் போன்று வடிக்கப்பட்டுள்ளது.

இம் மண்டபத்தை ஆறு தூண்கள் அணி செய்கின்றன. நான்கு தேராழிகளும் இரண்டு குதிரைகளும் பூட்டிய வண்ணம் இம் மண்டபத்தின் உபபீடம் அழகிய சிற்பங்களால் அமைக்கப் பட்டிருந்தது. தற்போது குதிரைகள் சுதையாக உள்ளது மனுவின் மைந்தனான ப்ரியவிருத்தன் தரையில் கிடப்பதாக வடிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கல் தேருக்கு சற்று அருகில் ஓர் சிறிய மண்டபம் போன்ற பகுதி நான்கு தூண்களால் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஓர் மணியும் கீழே துயருற்ற பசுவும் உயிர் நீத்த கன்றும் கவினுறு சிற்பமாக காட்சி நல்குகிறது. கன்றின் வயிற்றில் தேர் சக்கரம் ஏறிய சுவடு உள்ளது. இச்சிற்பங்கள் விக்கிரம சோழன் காலத்து சிற்பமாக இருக்கலாம், என யூகிக்க வழி உள்ளது. இச்சிற்பங்கள் மட்டுமின்றி கல்தேரின் மத்தியில் உள்ள மண்டபத்தின் உட்புறம் மூன்று கற்கள், அழகுமிகு சிற்பங்களுடன் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளது. இதன் மத்தியில் அழகிய பீடம் ஒன்றின்மேல் ஒய்யாரமாக சிவபெருமான் கால் மேல் காலை வைத்த வண்ணம் அமர்ந்துள்ளார். மேற் கரங்கள் இரண்டிலும் மானும் மழுவும் உள்ளன. மற்ற இரு கரங்களும் வரதமும், அருள்பாலிக்கும் கோலத்தில் உள்ளன. முதுகின் பின்படுத்துள்ள நந்தியின் தலைமேல் வலது கரம் வைக்கப்பட்டுள்ளது. அருகமர்ந்த உமையவளின் வலது கரம் சிவபிரானின் தொடை மேல் வைக்கப்பட்டுள்ளது.

நடுவமர்ந்த அம்மையப்பருக்கு வலதுபுறம் ஓர் பசுவும் கன்றும் நிற்கின்றன. இடது புறம் மனு மன்னன் எதையோ சுட்டிக் காண்பிப்பதாகவும், அவனருகே அஞ்சலி ஹஸ்தர்களாய் மனுவின் புதல்வன் பிரியவிருத்தனும், அமைச்சன் உபயகுலாமலனும் உள்ளனர். கல்தேரின் தூண்களில் ஒன்றில் முடிந்த கொண்டையும் மீசையும் தாடியும் பெற்ற மன்னன் ஒருவனும் அருகே

மற்றொருவனும் வணங்கும் கோலத்தில் உள்ளனர். இவை முறையே விக்கிரம சோழனும் உபயகுலாமவன் வம்சத்தினனாகிய சந்திர சேகரன் ஆதி விடங்கனான மாபலி வானாதிராயனாக இருக்கலாம் என சிற்ப அமைதியால் உணரலாம். எழில் மிகு இக்கல்தேரும், மற்றைய சிற்பங்களும் சோழர்கால கலை அமைப்பாக மிளிர்வதால் விக்கிரம சோழன் காலத்தில் வடிக்கப்பட்டவையாக இருக்கலாம் என உய்த்துணர முடிகிறது. கல்தேர் பல முறை திருப்பணிகளுக்கு இலக்காகி உள்ளது என்பதை கட்டுமான மாறுபாடுகளால் நன்கறியலாம்.

மிகப்பிற்கால கோயிலான தேவகன்மீச்சரம் என்ற கோயிலின் கருவறையின் வெளிப்புறம் மிகச்சிறிய சிற்பமாக தேரும். அதன் மேல் பசு ஒன்றும், தேர்காலில் அரசகுமரனும் வடிக்கப்பட்டுள்ளது புதுமையாகும்.

# கடாரம் கொண்டவனின் கவினுரு தேர்

பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன் என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும் மா மன்னன் ராஜேந்திரசோழன் முதல் இராஜ ராஜசோழனுக்கும் வானவன் மாதேவி எனும் திரிபுவன மாதேவிக்கும் மகவாய்ப் பிறந்தவன். இவன் மார்கழித்திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன் என்பதை திரு ஆரூர் கல்வெட்டு கூறுகின்றது. இந்திய நாட்டின் பெரும் பகுதியையும், கீழ்திசை நாடுகள் பலவற்றையும் வென்றவன்.

"கங்கா நதியும் கடாரமும் கைக் கொண்டு
சிங்காதனத்திருத்த செம்பியர் கோன்" – என்று

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் பாடும் பெருமை பெற்றவன். கங்கை கொண்ட சோழீச்சரம் என்ற பெருங் கோயிலை எடுத்தவன். பங்களாதேஷ் என்று இன்று நாம் அழைக்கும் வங்காள தேசம் வரையும் மலேசியா, சுமத்ரா போன்ற கீழ்திசை நாடுகளிலெல்லாம் புலிக் கொடியை பறக்கச் செய்த இம் மாமன்னன், தன் அன்புக் காதலி அனுக்கியர் பரவைநங்கை எனும் நல்லாளொடு ஆரூர் வீதியில் தேரில் பவனி வந்தான். அவ்வம்மையாருக்கு உடனிருக்கைக் கொடுத்து தேரில் பவனி வந்ததின் நினைவாக ஒரு குத்துவிளக்கும் ஆரூர் கோயிலில் வைத்தான். இத்தனையும் ஆரூர் கோயிலிலேயே கல்லிலும் பொறித்தான் ... !

இதனைக் கூறும் கல்வெட்டு ஆரூர தியாகராஜர் திருக்கோயில் கருவறையின் வடபுற அதிஷ்டானத்தில் பத்மம், குமுதம், கண்டம் ஆகிய பகுதிகளிலும், மேற்கு மற்றும் தென்புற அதிஷ்டானங்களிலும் தொடர்ந்து, இறுதிப்பகுதி பிற்காலத்தில் கட்டப்பட்டுள்ள முன் மண்டபத்தினால் மறைக்கப்பட்டுவிட்டது. இக்கல்வெட்டின் முற்பகுதி மாமன்னன் இராஜேந்திரன் பெற்ற வெற்றிகளை பட்டியலிடுகிறது.

ஈழநாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், மகாராட்டிரம், மத்திய பிரதேசம், ஒரிஸ்சா, வங்காள தேசம் வரையும், வென்ற நாடுகளின் பெயர்களும், கிழக்கு மற்றும் மேலைக் கடலில் வென்ற தீவுகளின் பெயர்களும் உள்ளன. அடுத்து கீழ்திசை நாடுகளான ஸ்ரீ விஜயம் (சுமத்ரா) பண்ணை, மலையூர், மாயிருடிங்கம் (மலேசியா), இலங்கா தேசம், பப்பாளம், தக்கோலம், தாமலிங்கம், இலாமுரி தேசம், நக்கவாரம் போன்ற நாடுகளை வென்று அவன் "கடாரம் கொண்ட" பெருமையைப் பேசுகிறது.

இதனைத் தொடர்ந்து இவ்வெற்றிகளையெல்லாம் குவித்த இராஜேந்திர சோழரின் அனுக்கியார் பரவைநங்கையார் சத்திரிய சிகாமணி

வள நாட்டிலுள்ள திருவாரூர் கூற்றத்து திருவாரூரில் வீதி விடங்கதேவரின் (தியாகராஜரின்) கோயில் செங்கற்கட்டுமானமாய் இருந்ததை கருங்கற் கோயிலாகப் புதுப்பித்து, இம்மாமன்னவனின் 18-வது ஆட்சியாண்டில் (கி.பி.1030) 38லிருந்து 199 வது நாள் வரை 20643 கழஞ்சு எடையுள்ள பொன்னால் அக்கர்பகிருஹம் முழுவதையும் தகடு போர்த்தி அலங்கரிக்கச் செய்தாள் என்றும், 42000 பலம் எடையுள்ள பொற்த் தகடுகளைக் கொண்டு கதவுகள் மண்டபத்தூண்கள் மற்றும் விதானங்களை அலங்கரிக்கச் செய்தாள் என்றும் கூறுகிறது. அந்த கல்வெட்டு வரிகளை அப்படியே நாமும் படிப்போமே ... !

"தொடு கடற் காவற் கரடு முரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி
வன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்க்கு
யாண்டு இருபதாவது உடையார் ஸ்ரீ ராஜேந்திர
சோழ தேவர் அனுக்கியார் பரவை நங்கையார்
க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் உடையார் வீதிவிடங்க தேவர் திருக்கற்றளி
எடுப்பித்து உடையார் வீதி விடங்க தேவர் அனுக்கியார் பரவை
நங்கையார் யாண்டு 18வது நாள் 38 முதல் நாள் 199 வரை
உடையார் வீதி விடங்க தேவர் கோவிலில் குடத்திலும், பத்மத்திலும்,
கம்பிலும், சிகரத்திலும், வாய் மடையிலும் நாலுநாசியிலும்,
உள்குட்டத்திலும் ஆக பந்தயம் கழஞ்சோடு ஆயிரத்து நானூற்று
ஒன்றினாலும் முக்கழஞ்சோடு ஆயிரத்து நானூற்று
முப்பத்தெட்டினாலும்
இரு கழஞ்சொடு இரண்டாயிரத்து ஒரு நூற்று ஒருபத்தெட்டினாலும்
தகடு நூற்றம்பத்தெட்டினாலும் சீரிணி நாற்றொடுபத்தினாலும்
குடிஞைக் கல்லால் மேய்ந்த பொன் இருபதினாயிரத்து அறுநூற்று
நாற்பத்து முக்கழஞ்சே ஏழு மஞ்சாடியும் வீதி விடங்க தேவர்
கோயிலும், இக்கோயில் முன்பின் மண்டபத்து சூழ்ந்த
கொடுங்கையிலும்,
சோபான கூடத்திலும், கதவிலும், மேய்ந்த பொன் நிறை
நாற்பத்து ஈராயிரத்து ....... " – என்று கூறுகிறது.

இவ்வாறு தியாகப் பெருமானுக்கு கற்கோயில் எடுத்து, அதன் கருவறை முன்பண்டபம் ஆகிய பகுதிகளைப் பொற்தகடுகளால் போர்த்தி அழகு பார்த்த அந்த அம்மையார் தியாகப் பெருமானுக்கு இரண்டு பொன்னால் செய்யப் பெற்ற சாமரங்களை அளித்தார்கள். ஒன்று தொண்ணூறு கழஞ்சு எடையுள்ளது. பிறிதொன்றில் தங்கத்தால்

செய்யப்பெற்ற சாமரப்பகுதியில் கட்டப்பட்ட பச்சைக் கற்கள், மற்றும் படிகச் சாதிக்கற்களைப் பற்றி கூறுகிறது. இதனை கல்வெட்டு,

"யாண்டு 17வது நாள் நூற்றன்பதினால் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் அனுச்கியார் பரவை நங்கையார் வைத்த பொன்னின் கைச்சாமரை ஒன்று இது அங்கு நிலைப்படி குடிஞைக்கல்லால் பொன் நாற்பத்து ஐம்பதின் கழஞ்சு இரண்டு மஞ்சாடியும் இவரே நாளது கொடுத்து பொன்னின் கைச்சாமரை ஒன்று. இதில் கடையில் தடவிக்கட்டின பச்சைப் பொத்திக் கல்லு எட்டும் தடவிக்கட்டினபடி ஜாதிக்கல்லு பதின் எட்டு. இத்திருக்கைகழலில் கட்டின பச்சைப் பொன்போனகக் கல்லு பத்தும் படிகை இருபதும் இதன் மேல்நிலை கழலில் கட்டின பச்சை பொத்திக் கல்லு எட்டும் படிகசாதிக்கல்லு ... பச்சைபொத்திக் கல்லு பத்தும் படிக ஜாதிக்கல்லு இருபது இதன் மேலால் கட்டின பச்சை பொத்திக்கல்லு எட்டும் இதன் மேலால் பலகையில் கட்டின பச்சை பொத்திக் கல்லுபடிகக் கட்டின பச்சை பொத்திக் கல்லு எட்டும் இதன் மேலால் பலகையில் கட்டின பச்சை பொத்திக் கல்லு படிகக்கல்லு ஆறும் படிக சாதிக்கல்லு முப்பத்திரண்டும் உட்பட பொன்னின் கைச் சாமரை ஒன்று" .... என்று கூறுகின்றது.

இதனை அடுத்து அனுச்கியார் பரவைநங்கையார் தியாகப் பெருமானை திருவாராதனை செய்யும் பணிமாரிடம் கொடுத்து அளித்த பலவகையான ஆபரணங்களின் பட்டியல் உள்ளது. இவற்றில் வயிரம், மாணிக்கம், முத்து, மரகதம் ஆகியவை இழைக்கப்பெற்ற பொன், வெள்ளி, ஆபரணங்கள் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்து அளிக்கப்பெற்ற குத்து விளக்குகளின் நீண்ட பட்டியல் உள்ளது. இதில் 15579 பலம் எடையுள்ள 28 குத்துவிளக்குகளும் அடங்கும். இவற்றோடு பொன்னால் செய்யப்பெற்ற பூஜைபாத்திரங்களின் பட்டியலும் எடைகளும் உள்ளன. இவ்வாறு எண்ணிலா ஆபரணங்களையும், நவமணிகளையும், பொற்பாத்திரங்களையும் நிலக்கொடையும் நல்கிய அனுக்கியர் பரவை நங்கையாரும், மாமன்னன் இராஜேந்திர சோழனும், அம்மன்னனின் இருபதாம் ஆட்சியாண்டில் (கி.பி.1032ல்) திருவாரூர் வீதியில் தேரில் எழுந்தருளி வலம் வந்து கோயிலுக்குட் புகுந்து தியாகப் பெருமானைப் பணிந்து வணங்கிநின்றனர். இவ்வாறு அவர்கள் தேரிலிருந்து இறங்கி கோயிலுக்குட்புகுந்த வாயிலில் இந்நிகழ்ச்சியின் நினைவாக மூவாயிரம் பலம் எடையில் குத்து விளக்கொன்று மன்னனது ஆணையால் வைக்கப் பெற்றது. பின்னர் இருவரும் நின்று ஈசனை வழிபட்ட இடத்தில் நிற்குமிடம் தெரிய குத்துவிளக்கொன்று வைக்கப்பெற்றது. பின்னர் அனுச்கியர் பரவை நங்கையார்

1. பச்சைபாவை உமைநங்கை
2. பாவை சரியா முலை நங்கை என்ற



ஆரூர் கல்வெட்டு:-

"உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவரும் அணுக்கியார் பரவை நங்கை யாரும் தேர் மேலெழுந்தருள புகுந்திக்கிநிலுடன். ........"

பெயர்கள் இடப்பெற்ற இரண்டு பாவை விளக்குகளை வீதிவிடங்கன் முன் வைக்க அளித்த தோடு, அப்பாவைகளுக்கு பொன்னணிகளையும் அளித்த செய்திகளை இக்கல்வெட்டே கூறுகின்றது.

தேரேறி பவனி வந்த அந்த நிகழ்ச்சியைக் கல்வெட்டு எப்படி கூறுகிறது என்று பார்ப்போமே....!.

" யாண்டு இருபதாவது நாள் ... ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அனுக்கியார் பரவை நங்கையாரும் தேர் மேலெழுந்தருளி புகுந்திக்கினிலுடன் வைத்த விளக்கொன்றினால் நிறை மூவாயிரத்து..." என்றும், "ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அனுக்கியார் பரவை நங்கையாரும் நிற்குமிடந்தெரியும் குத்துவிளக்கொன்றும்" வீதிவிடங்கதேவர் கோயிலுள்..." என்றும் கூறுகின்றது.

எத்தனையோ ஆயிரம் ஆயிரம் கல்வெட்டுக்களைப் பொறித்துச் சென்றுள்ள நம் சோழப் பேரரசர்கள் எந்த ஒரு கல்வெட்டிலும் தான் தன் தேவியோடு தேரேறி வலம் வந்ததாக கூறிக்கொள்ளவில்லை. பட்டத்தரசியோ அல்லது உரிமை மனைவியோ அல்லாத ஒரு சாதாரண அனுக்கியாருக்கு தன்னோடு உடனிருக்கை கொடுத்து தேரேறி திருவாரூர் வீதியில் வலம் வந்து தியாகனை வணங்கி, அதன் நினைவாக விளக்குகளும் வைத்து, கல்லிலும் பொறித்து வரலாறு படைத்த இந்த நிகழ்ச்சி இந்திய வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

இம்மாமன்னன் மற்றும் அவனது அன்புக்குரிய பரவை நங்கையார் மறைவிற்குப் பின்பு அவர்கள் இருவரையும் படிமமாகச்செய்து ஆரூர் திருக்கோயிலில் வழிபட்ட, ராஜேந்திர சோழனின் மைந்தர்களான முதலாம் இராஜாதிராஜன் மற்றும் இரண்டாம் ராஜேந்திரனின் கல்வெட்டுச் செய்திகளை நோக்கும் போது அவர்கள் இருவரையும் படிமமாக பின்னாளில் சோழகுலத்தோன்றல்கள் தெய்வமாக வழிபட்ட பண்பையும் அறிய முடிகிறது.

# எரிந்த தேரும் எழுந்த தேரும்

மிகத் தொன்மைக் காலத்திலிருந்து ஆரூரில் ஆழித்தேர் விழா நடைபெற்றபோதும், நமக்குக் கிடைத்துள்ள அண்மைக்கால ஆவணங்கள் அடிப்படையில் நோக்கும்போது கி.பி.1748-ல் நிகழ்ந்த தேர்விழாபற்றிய குறிப்பு கிடைத்துள்ளது. தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள சரஸ்வதிமகால் நூலகத்தில் தற்போது பாதுகாக்கப் பெற்று வரும் மோடி (மராத்தியமொழி) ஆவணங்களுள் ஒன்றில் இக்குறிப்பு உள்ளது. கி.பி.1765-ல் தஞ்சையை ஆட்சிபுரிந்தவர் மராத்திய மன்னர் இரண்டாம் துளஜா என்ற மன்னராவார். இவர் அவ்வாண்டு திருவாரூர் தேர் விழாவிற்கு வந்துள்ளார். இதற்கென அவருக்காக செலவு செய்யப்பட்டவகையில் 1041 1/2 சக்கரங்களும் 2 1/4 வீசம் பணமும் செலவு செய்யப் பெற்றதாம். இது பற்றி பிறிதோர் ஆவணம் குறிப்பிடுகிறது.

இவ்வாவணத்தில் "மஹால் மாத வாரி செலவு - ராஜேஸ்ரீ மகாராஜ் சாஹேப் திருவாரூர் தேர் உத்ஸவத்திற்கு பங்குனி மாதத்தில் வந்த வகையில் செலவு ஜாபிதா பிரகாரம் சௌவல் மாதம் 1041 1/2 சக்கரங்களும் 2 1/2 வீசம் பணமும்" - என்று குறிக்கப் பெற்றுள்ளது.

கி.பி.1748 முதல் கிடைக்கும் ஆவணங்கள் வாயிலாக தொடர்ந்து 18,19ஆம் நூற்றாண்டுகளில் ஆரூர் தேர் விழா நடைபெற்ற செய்திகளை அறிய முடிகிறது. பின்னர் 20ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் தொடர்ந்து தேர் விழா நடைபெற்றது. இவ்வாறு ஆண்டுதோறும் உலாவரும் தேர் 1926ஆம் ஆண்டு தீ விபத்துக்குள்ளாகி முற்றிலுமாக அழிந்தது. விழாவின்போது தீ விபத்து ஏற்பட்டபோதும் தியாகப்பெருமானின் திருமேனி முத்துக்கொத்தனார் என்பவரால் காப்பாற்றப் பெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

அவ்வாண்டு ஆழித்தேர் உலா வந்தது. அத்தேர் தற்போதைய ஆரூர் தேரைவிட மிகப் பெரியதாகும். அத்தேரைப் பார்த்த இன்றைய முதியவர்கள் பலர் ஆரூரில் வாழ்கின்றனர். அத்தேருக்கு பத்து சக்கரங்கள் உண்டு. கீழ ராஜ வீதியிலிருந்து புறப்பட்ட தேர், தெற்கு ராஜ வீதி யடைந்து பின்னர் மேல ராஜ வீதியில் உலா வந்தது. கமலாலய குளத்தின் வடகிழக்கு மூலையில், மாற்றுரைத்த வினாயகர் கோயில் கடந்து சென்றபோது அதிர் வேட்டுகள் போடும்போது எழுந்த தீப்பொறியால் தேர் கூரையில் தீ பிடித்து அக்னிதேவனின் அரவணைப்புக்கு உள்ளாகியதாக பார்த்த முதியவர்கள் சிலர் கூறுகின்றனர்.

சிலரது கூற்று மாறுபட்டுள்ளது. அப்பகுதியில் இருந்த பலகாரக் கடையில் இருந்த வாணலி (எண்ணைசட்டி) தீப்பிடித்ததாகவும்,

1926 ஆம் ஆண்டு எரிந்த தேர்.



தெற்கு வீதியில் எடுக்கப்பெற்ற ஒளிப்படம்.

கொழுந்துவிட்ட அத்தீ தேர்த் தொம்பையில் பிடித்து தேர்க் கூரையைத் தழுவிய பின்னரே தீயின் உக்கிரம் பெருகியதாக கூறுகிறார்கள். எது எப்படியோ, ஆனால் தேரைத் தழுவிய தீ வரலாற்றுச் சிறப்புடைய அத்தேரை முற்றிலுமாக சாம்பல் படுத்திய தோடு, அதில் இருந்த இரும்புப் பகுதிகளைக் கூட உருகி ஓடுமளவுக்கு செய்ததாம். முழுமையாக இரண்டு நாட்கள் தீ கொழுந்து விட்டதாம். அன்று முத்துக் கொத்தனார் என்ற தேரின் தலைமைக் கொத்தனாரால் எரியும் தீ நாக்குகளுக்கு இடையே இருந்து, கீழே தள்ளி காப்பாற்றப்பெற்ற ஆரூர் செம்பொற் சோதியாம் தியாகராஜரை, உடன் மக்கள் அவசரம் அவசரமாக மேற்குக் கோபுரவாயில் வழியே கோயிலுக்குள் எடுத்துக் கொண்டு ஓடி அவர் திருக்கோயிலில் வைத்தனராம். இத்திருக்கோயில் வரலாற்றிலேயே அன்று ஒருநாள்தான் தியாகராஜர் மேற்கு கோபுரவாயில் வழியே உள்ளே சென்றாராம்.

இந்நிகழ்ச்சி நிகழ்ந்து இரண்டாண்டு கழித்து 22-3-1928ல் தியாகராஜப் பெருமான் தொண்டர்கள் ஒன்றுகூடி புதியதேர் செய்வதற்காக பொருளுதவி வேண்டி பத்திரிகை ஒன்றை வெளியிட்டு நிதி பெற்றனர்.

"திரு ஆரூர் திருத் தேர்"
நூதன பிரதிஷ்டா கைங்கரிய பத்திரிகை
திருவாரூர் - 22-3-28

என்ற முகப்புடன் எட்டு பக்கங்கள் கொண்ட திருத்தேர் திருப்பணி விண்ணப்பம் திருவாரூர் புராண வரலாற்றுப் பெருமைகள், முக்கிய ஆரூர் தேவாரப் பாடல்கள், 1926ல் எரிந்த தேர் முன்பு உலா வந்தபோது தெற்கு வீதியில் எடுக்கப்பெற்ற அரிய புகைப்படம், மற்றும் சைவ சமய குரவர் நால்வர் ஓவியங்களோடு வெளிவந்தது, அப்பத்திரிகை.

இதில் "திருவாரூரின் கண்ணுள்ள பிரதமத் திருத்தேர் கலிகாலத்தின் கொடுமையால் சென்ற இரண்டாண்டுகட்கு முன்பு தீவாய்ப்பட்டமை அன்பர்கள் அறிந்ததேயாம்" - என்று குறிக்கப்பெற்றுள்ளது. கலிகாலத்தின் கொடுமை என்று மட்டுமே குறிக்கப்பெற்றுள்ளதால் தீ விபத்திற்கான சரியான காரணம் என்ன என்று அறுதியிட்டு கூறஇயலவில்லை.

1928ஆம் ஆண்டு புதிய தேர் உருவாக்கும் திருப்பணி துவங்கி 1930ல் முடிந்து புதிய தேர் 2-3-1930ல் ஓடியது. இதுவே தற்போதைய ஆரூர் ஆழித்தேராகும். இதுவும் பத்து சக்கரங்களோடு உருவாக்கப் பெற்றது. திருவாரூர் தேருக்குரிய தனித்த சிறப்பு வடிவமைப்பிலேயே இத்தேரும் உருவாக்கப் பெற்றது. புதிய தேரின் கூரை அமைப்பும் பழைய தேரை ஒத்தே மீண்டும் வடித்தனர். இன்றும் அதே முறை தான் பின்பற்றப் பெறுகின்றது.

சாதாரணமாக தமிழகத்திலுள்ள எல்லா தேர்களும், எண்பட்டை அறுகோணம், அல்லது வட்ட வடிவமைப்பில் இருக்கும். ஆனால் திருஆரூர் திருத்தேரின் வடிவமைப்பும் கூரைக்கட்டுமானமும் தனித்தன்மை வாய்ந்தது. தேரின் பீடம் பக்கத்திற்கு ஐந்து பட்டை வடிவாக மொத்தம் 20 பட்டை அமைப்புடையதாக இருக்கும். இதே போன்று தேர்க் கூரையும் சிகரம் வரை 20 பட்டைகள் கொண்டு விரிந்த அடிப்பகுதிகொண்டு திகழும். சிகரமும் மிக எழிலுடையதாகும்.

சாதாரணமாக தமிழக தேர்கள் எல்லாம் திராவிட அல்லது ஆந்திர பாணி அமைப்பில்தான் இருக்கும். ஆரூர் தேரின் கூரையமைப்பு "வேசரம்" எனும் அமைப்பை ஒத்து 20 பட்டைகள் அமைப்பு இருந்தும், கூரை அகலக் குறைவாக இல்லாமல், அடிப்பகுதி மிக அகண்டு காணப்படுகிறது. இது வேசரம் என்ற அமைப்பில் திராவிட அமைப்பின் நுணுக்கங்கள் பல கொண்டு திகழும் தனிச் சிறப்புடைய வடிவமைப்பாகும்.

இவ்வாறு தனித் தன்மையுடன் திகழும் ஆரூர் ஆழித்தேர் 1930ஆம் ஆண்டு மீண்டும் ஓடியது என்பதற்கான கல்வெட்டுப் பொறிப்பு தேரேற்றுக்கூடமான தேர்நிலை மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது. தமிழ் சுக்கில் வருடம் மாசி மாதம் 19ஆம் நாள் 2-3-1930ல் புதிய தேரின் பிரதிஷ்டை பற்றிய செய்தியாக உள்ளது.

1930லிருந்து 1948 வரை ஓடிய ஆரூர் தேர் பின்னர் யாது காரணத்தாலோ நிலையிலேயே நின்று விட்டது. 1970 ஆம் ஆண்டு தமிழக முதல்வராயிருந்த கலைஞர் திருமிகு மு.கருணாநிதி அவர்களின் முயற்சியாலும், கோவிலின் தக்காராய் திகழ்ந்த வடபாதிமங்கலம் திரு.வி.எஸ். தியாகராஜ முதலியார் மற்றும் ஆரூர் பெருமக்களின் ஆர்வம் மிக்க எழுச்சி யாலும் மீண்டும் தேர் ஓடியது.

இம்முறை தேர்க்கால்கள் பழுதுபட்டு இருந்தமையாலும், மக்கள் ஒன்றுகூடி தேர் இழுக்கும் மனோபாவம் குன்றியமையாலும், தேர்க்கால்கள் அமைப்பில் புதிய மாற்றங்கள் செய்யப்பெற்றது. திருச்சிராப்பள்ளி பாரத மிகுமின் நிறுவனத்தினர் பத்துக்கால்கள் (தேர்ச்சக்கரங்கள்) பழுதுபட்டமை யால் இதனை மாற்றி இரண்டு பெரிய இரும்பு அச்சுகளில் மிக நவீன அமைப்புகளுடன் நான்கு கால்களால் ஓடும் புதிய அமைப்பினை பழைய தேரில் அமைத்தனர். இதுவே இன்றுள்ள தேரின் அமைப்பாகும். புதிய அமைப்புடன் சில ஆண்டுகள் ஓடிய தேர் பின்னர் பல ஆண்டுகள் ஓடவில்லை. ஆரூரன் திருவருளால் மீண்டும் இவ்வாண்டு (1989) ஓடும் பேறுபெற்றோம்.

# ஆவணங்களில் ஆரூர் தேர்

ஆரூர் தேர் பற்றிய மூவர் தேவாரங்கள், பெரிய புராணம் கல்வெட்டுக்கள் போன்றவற்றில் குறிப்புகள் இருந்தபோதும் பதினெட்டு, பத்தொன்பதுமற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பெற்ற பல ஆவணங்களில் இது பற்றிய குறிப்புகள் உள்ளன.

தஞ்சாவூரை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் தங்கள் அரசு நிகழ்வுகளையும், கணக்குகளையும் காகிதங்களில் மோடி என்ற மராத்தி மொழி லிபியில் எழுதி தஞ்சை அரண்மனையில் கட்டுக் கட்டுகளாய் வைத்திருந்தனர். இவ்வகை ஆவணங்கள் ஏறத்தாழ 1748-ஆம் ஆண்டு முதல் கிடைக்கின்றன. இவ்வாறு தஞ்சையில் இருந்த ஆயிரக் கணக்கான மோடி மூட்டைகளை ஆங்கிலேயர் ஆட்சியின் போது மூன்று பிரிவுகளாக பிரித்து மிக முக்கிய ஆவணங்களை 'ஏ' ரெக்காட்ஸ் என்று கூறி சென்னை ஆவண காப்பகத்திற்கு அனுப்பினர். நிலங்கள் பற்றிய குறிப்புகள் உள்ள ஆவணங்களை 'பி' ரெக்காட்ஸ் என்று கூறி, அவற்றை தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாதுகாத்தனர். பிற ஆவணங்கள் உபயோகம் அற்றவை என்று கூறி அவற்றை எரித்து விட உத்திரவிட்டனர்.

இவ்வாறு உபயோகம் அற்றவை எனக் கூறிய மூட்டைகள் ஆயிரம் ஆகும். ஒவ்வொரு மூட்டையிலும் பல ஆயிரக்கணக்கான காகிதங்கள் குறிப்புகளுடன் இருந்தன. தஞ்சையில் இருந்த மன்னர் ராஜாராம் சாஹேப் இவற்றை எரிக்க கூடாது, இவை யாவும் முக்கியமான ஆவணங்கள் என்று கூறி அன்றைய ஆட்சியாளர்களுடன் போராடி அவற்றைக் காப்பாற்ற வழி வகுத்தார். இவ்வாறு தீக்கு இரையாகாமல் காப்பாற்றப்பட்ட ஆயிரம் மோடி ஆவண மூட்டைகளும் தற்போது தஞ்சாவூர் அரண்மனை "சரஸ்வதி மஹால்" நூலகத்தில் மோடி பிரிவில் பாதுகாக்கப்பெறுகின்றது. இவ்வாறு உள்ள ஆயிரம் மூட்டைகளில் சுமார் நூறு மூட்டைகளில் உள்ள சில ஆவணங்களை மட்டும் தமிழில் மொழி பெயர்த்தனர். தற்போது தஞ்சையில் மோடிலிபி படிக்கத் தெரிந்தவர்கள் பத்துப்பேர் கிடைப்பதே அரிது.

இவ்வாறு மொழி பெயர்க்கப்பெற்ற சில நூறு ஆவணங்களில் ஆரூர் கோயில் பற்றியும், ஆரூர் தேர் பற்றியும் பல ஆவணங்கள் கிடைத்தன. இதே போன்று தஞ்சாவூர் தேர்பற்றியும் பல குறிப்புகள் உள்ளன. தஞ்சாவூர் பெரியகோவில் தேர்த் திருவிழாவின் போது அத்தேரை இழுக்க திருவையாறு தாலூக்காவில் இருந்து 1900 ஆட்களும், பாபநாசம் தாலூக்காவில் இருந்து 2800, கும்பகோணம் தாலுக்காவில் இருந்து 3494, மாயவரம் தாலூக்காவில் இருந்து 3480, திருவாரூர் தாலூக்காவில் இருந்து 2920, மன்னார்குடி

தாலுக்காவில் இருந்து 4200, கீவளூர் தாலுக்காவில் இருந்து 4500 நன்னிலம் தாலுக்காவில் இருந்து 3200, ஆக மொத்தம் 26, 494 ஆட்கள், கி.பி.1818-ஆம் ஆண்டு சித்திரை மாதம் 2ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை தேர்த்திருநாளுக்கு தேர் இழுக்க வரவேண்டும் என்று, சரபோஜி மன்னரின் உத்திரவைக் குறிப்பிடுகின்றது. இதுபோன்ற ஆரூர் பற்றிய பல செய்திகள் இவ்வாவணங்களில் உள்ளன. மொழி பெயர்க்கப்பெற்ற சில ஆவணங்களிலேயே இத்தனை தகவல்கள் கிடைக்கும் போது தஞ்சை நூலகத்தில் உள்ள ஆயிரம் முட்டைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலக மோடி ஆவணங்கள், சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ள மோடி ஆவணங்கள் ஆகிய அனைத்தும் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்றால் ஆரூர் கோயில், தேர் போன்றவை பற்றி இரு நூறு ஆண்டுக்கால முழு வரலாறும் வெளிவருவதோடு, சோழ மண்டல வரலாறும் வெளிவரும்.

## மொழி பெயர்க்கப்பெற்ற ஆவணங்களின் குறிப்புகள்

1. ஆண்டு கி. பி. 1748
திருவாரூர் தியாகராஜர் தேருக்கு ஆட்கள்
திருவையார் 4500 பேர்கள், ஸ்வாமிமலை 140, கணபதி அக்ரகாரம் 200ஆக மொத்தம் 4,840.

*மூன்று ஆவணங்கள் –முட்டை 112,*
*ஏடு எண்:47*

2. ஆண்டு கி. பி. 1749
திருவாரூர் ஸ்ரீ தியாகராஜரின் தேருக்கு ஆட்கள்.
திருவையாறு சுபா சென்ற வருடப்பிரகாரம் 4,840 வட்டலாரி நிலக் கணக்கு ஸ்ரோத்திரிய விவரம் -

*முட்டை 112 - ஏடு எண் : 48*

3. ஆண்டு கி. பி. 1765
மஹால் மாதவாரி செலவு ஜமா குறிப்புகள்.
பிரயாண செலவு ராஜ ஸ்ரீ மகாராஜ் சாஹேப் (இரண்டாம் துளஜா மன்னர்) திருராரூர் தேர் உத்சவத்திற்கு பங்குனி மாதத்தில் வந்த வகையில் செலவு ஜாபிதா பிரகாரம் மாதம் சௌவல் 1041 1/2 சங்கரங்களும் 2 1/4 வீசம் பணமும்.

*முட்டை 121 ஏடு எண் : 71*

4. ஆண்டு கி. பி. 1776
திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் தேர் உத்சவத்திற்கு சாமான்கள் வருவது குறித்து சாமான்கள் விவரமும் மேற்கண்ட சாமான்கள்

வலங்கைமான் பத்து வாங்கியவிடத்து மாமல்வேதாருக்கு தாக்கீது ஆகிவந்து அடையவும் - உத்தரவு விவரம்

*மூட்டை 113, ஏடு எண் : 33*

5. ஆண்டு கி. பி. 1777

1. திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேருக்கு சுபா திருவையார் ஆட்கள் விவரம்.

2. திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் தேருக்கு மேற்கு பக்கத்தில் முதல் நாடாவிற்கு சென்ற வருட பிரகாரம் ஆட்கள் 4686 இதில் வஜா கும்பகோணம் சுபா பிரவேசம் ஆட்கள் முதலிய விவரம்.

*- மூட்டை 112, ஏடு எண் : 63*

6. ஆண்டு கி. பி. 1776

ராஜ ஸ்ரீ அமர சிங் ராஜா திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் தேர் திருவிழாவிற்காக தேரை பார்ப்பதற்காக நாகபட்டிணத்திலிருந்து மிஸ்தர் டூரியன் துரை வருகிறார். அவருக்கு திருவாரூரில் காஸா உலுப்பை 20 கொடுக்க உத்தரவாகியிருக்கிறது.

*மூட்டை 5, ஏடு 26.*

7. ஆண்டு கி. பி. 1777

ரயத்து வகையறா கொரநாடு மஹால் தேதி 9 ரம்ஜான் தாலுகா திருநாகேஸ்வரம் வட்டத்தின் ஆட்கள் திருவாரூர் தேரின் மொயின் பிரகாரம் அனுப்பாமல் கம்மியாக அனுப்பியவிடத்து தாலுகா குணம்பி வெங்கடாஜலப் பிள்ளை இடமிருந்து தண்டனை குற்றத்திற்காக வாங்கியது ஒரு சக்கரமும் 2 பணமும்

*- மூட்டை 113, ஏடு எண். 13.*

8. ஆண்டு கி. பி. 1789

ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் தேருக்கு சென்ற வருட பிரகாரம் ஊர்வாரி ஆட்கள் 4799க்கு கணக்கு விபரம் சுபா திருவையாறு சுபா மாயவரம் வகையில் ஆட்கள் கணக்கு விபரம் (37 ஏடுகளில் விரிவான கணக்குகள்)

*- மூட்டை 112, கட்டு எண் 65/1.*

9. ஆண்டு கி. பி. 1793

திருவாரூர் ஸ்ரீ தியாக ராஜ சுவாமியின் தேருக்கு ஆட்கள் விபரம் திருவையாறு சுபா 4500, சுவாமிமலை 140, கணபதி அக்ரகாரம் 200, ஆகமொத்தம் 4,840

*- மூட்டை 112, ஏடு கட்டு 65/2.*

10. ஆண்டு தி. பி. 1797
திருவாரூர் ஸ்ரீ தியாகராஜரின் தேருக்கு ஆட்கள் திருவையாறு சுபா சென்ற வருட பிரகாரம் ஆட்கள் 4840 ஊர்வாரி கணக்கு, நிலபரப்பு மொத்த நிலம் கணக்கு.

*- மூட்டை 112, ஏடு எண் 56.*

11. ஆண்டு கி. பி. 1843
திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ பங்குனி ரதோஉத்சவம் மாசி மாதம் 8-ஆம் தேதி முதல் சித்திரை 2-ஆம் தேதி வரையில் 55 நாட்கள் உற்சவ விவரங்கள்.

*மூட்டை 309, ஏடு கட்டு எண் 75/255 - 13.*

இவ்வாறு இதுகாறும் மொழி பெயர்க்கப்பெற்ற மோடி ஆவணங்களிலிருந்து இச்செய்திகளை அறிய முடிகிறது.

## இராஜ கன்யா பரிணயம்

தியாக பெருமானிடம் அதிக ஈடுபாடு கொண்டவர் தஞ்சையை ஆண்ட மராத்தி மன்னர் சாஹஜி என்பவர். இவரது அவைக்களப் புலவராய் திகழ்ந்த திரையம்பகர் என்பவர் எழுதிய "ராஜகன்யா பரிணயம்" எனும் சுவடியில் சாஹஜி மன்னர் ஆரூர் தியாக ராஜரின் தேர் திருவிழாவைக் காண ராஜ வீதியில் பல்லக்கில் அமர்ந்து பவனி வருவதாகவும், அப்போது காஷ்மீர நாட்டு அரசகுமாரி மாளிகை ஒன்றிலிருந்து ஆரூர் வீதியில் வரும் மன்னரின் அழகில் மயங்கி மையல் கொள்வதாகவும், அவள் நிலை உணர்ந்த பெற்றோர் மன்னருக்கு ஆரூரான அருளால் திருமணம் முடிப்பதாகவும் இவ்விலக்கியத்தில் கூறப்படுகிறது. ஆரூர் தேர் விழா பற்றி இந்த மராத்திய இலக்கியம் சிறப்பாக பேசுகின்றது.

## தேர்பத்திரிக்கை

1926ஆம் ஆண்டு எரிந்த தேர் பற்றிய செய்திகளையும், அன்று மக்கள் புதிய தேர் செய்வதற்கு எடுத்த முயற்சிகள் பற்றியும் விவரிக்கும் "திருவாரூர் திருத்தேர் திருப்பணி விண்ணப்பம்" என்ற 1928ஆம் ஆண்டு பத்திரிகை ஒன்று தற்போது ஆரூர் திருக்கோயிலில் உள்ளது. இதுவும் ஆரூர் தேர் வரலாறு பற்றிய முக்கியமான ஆவணமாகும். இதன் நகல் பின் இணைப்பில் உள்ளது. திருத்தேர் ஏற்று கூடமாகிய தேர் நிலை மண்டபத்திலுள்ள 1930 ஆம் ஆண்டு கல்வெட்டும் புதிய தேரோட்டம் பற்றிய முக்கிய ஆவணமாகும்.

# பாராட்டுக்குரிய தேர்க் கலைஞர்கள்

தேரின் அடிப்பீடம் மரத்தால் தச்சர்களால் செய்யப்பெற்ற போதும் தேரின் தூண்கள், மேற்கூரை அமைப்பு அனைத்தும் தேர்க் கொத்தனார் களாலேயே அமைக்கப்பெறுகின்றது. இவர்களது பணிக்கு தேர்க் குதிரைகள் செய்யும் ஸ்தபதிகள் தேர்ச்சீலை, தொம்பை செய்யும் வண்ணத்தார்கள், துணி தைப்பவர்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாக அமையும். இப்பணிகளுக்கு எல்லாம் தேரின் தலைக் கொத்தனாரின் திறமைதான் முக்கியமானதாகும். இவர் தேர் எழுந்தருள உருவாக்கம் கொடுப்பதோடு, தேரின் இயக்கத்தையும் (வீதியில் உலா வருவது) செம்மையுறச் செய்ய காரணமாக இருப்பவர்.

## முத்துக் கொத்தனார்:-

1920-ல் (ஆயிரத்து தொளாயிரத்து இருபதுகளில்) ஆரூர் தேரின் தலைமைக் கொத்தனார் ஆக இருந்தவர் திரு. முத்துக் கொத்தனார் என்பவர் ஆவார். இவர் மிக தேர்ந்த கலைஞர் என்பதை அவரது பணியைக் கண்ட முதியவர்கள் கூறுகிறார்கள். 1926-ல் தேர்ப் பணிகளை மிகச் சிறப்பாக கவனித்த தலைமைக் கொத்தனார் ஆன திரு.முத்து அவர்கள் தேரின் இயக்கத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தபோதுதான் அந்த தீ விபத்து நடந்தது. தேரின் கூரைகள் மிக வேகமாக அக்கினித்தேவனின் அரவணைப்புக்கு உள்ளானது. தீ பரவிய வேகத்தின் அனைவரும் தப்பி ஓடினர். தியாகனின் திருத்தொண்டே உயரியது என்ற நோக்கம் உடைய நயினார் பிரம்ம ராயர், விழுப்பறையர், முட்டுக்காரர், பாரி நாதஸ்வர கலைஞர், கொடுகொட்டி இசைப்பவர் ஆகியவர்கள் எப்படியும் தியாகராஜப் பெருமானின் திருமேனியைக் காப்பாற்ற அவசரம் அவசரமாக முயன்று பல்வேறு முயற்சிகள் செய்தும் தீயின் வெப்பத்தால் இயலாமல் கீழே குதித்து செய்வது அறியாது தவித்துக் கொண்டு இருந்த போது, முத்துக் கொத்தனார் தம் உயிரை துச்சம் என நினைத்து, வெந்தழலின் வேகத்திற்கு இடையை தியாகப்பெருமானின் திருமேனியைப் பீடத்தோடு அசுர வேகத்தில் தள்ளிக் கொண்டு தேரின் விளிம்பிற்கு கொண்டு வந்தாராம். பிறகு மாலைக் கயிற்றால் ஈசனின் திரு மேனியை பிணைத்து அங்கிருந்தபடியே பலம் கொண்ட மட்டும் உதைத்து தள்ளினாராம். தியாகப் பெருமானின் திரு மேனி தரையில் தொப்பென்று விழுந்த உடன், மக்கள் ஒன்று கூடி தியாகராஜரை மேற்கு கோபுர வாயில் வழியாக கோயிலினுள் கொண்டு சென்றார்களாம். அன்று முத்துக் கொத்தனார் அத்திருமேனியைக் காப்பாற்றவில்லை யென்றால் .... ! நமக்கு அந்த ஈசன் கிடைத்திருப்பாரா? இனியாவது

சொல்லுங்கள் ஆரூர் கோயில் உள்ளளவும், தியாகனின் திருமேனி பவனி வரும் நாள் எல்லாம் நாம் முத்துக் கொத்தனாரை மறக்கலாமா?.

அவரது திறமைகள் அவரது சீடரான திரு.கோவிந்தசாமி கொத்தனார் வழியாக தொடர்ந்தது. தற்போது கோவிந்தசாமி கொத்தனாரின் சீடர்களான திரு.சண்முகக் கொத்தனார், திரு.வடிவேல் கொத்தனார் ஆகியவர்களது குழுவினர் இப்பெரும் பணியை புரிந்து வருகிறார்கள். திரு .ஆர்.சண்முகம் கொத்தனார் தலைமைக் கொத்தனார் ஆக திகழ இவ்வரிய கலை அடுத்தத்தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இவர்களுக்கு ஆக்கம் தந்து இக்கலையைப் போற்றுவோமா?.

## ஸ்தபதி கனகசபை கண்டியர்:

தற்போது ஆரூர் தேருக்கு குதிரைகள் தேர்யாளம், பக்கத்தட்டிகள் மற்ற அலங்கார முகப்புகள் ஆகியவற்றை தலைமுறை தலைமுறையாக செய்து வரும் குடும்பத்தில் வந்தவர் திரு.எஸ்.கனக சபை கண்டியர் என்ற 85 வயது முதியவர் ஆவார். இவர் தன் தந்தையாரிடமிருந்து தொழில் கற்றவர். நெட்டி, வைக்கோல், மூங்கில் சிம்புகள், காகிதம், வண்ணங்கள் கொண்டு மிக அற்புதமானதும், பிரம்மாண்டமானதும் ஆன தேர் பொம்மைகளையும், குதிரைகளையும் செய்கிறார். அவற்றின் எடை, அமைப்பு, தேரில் இடம் பெறச் செய்வது ஆகியவை அனைத்தும் மிகத் துல்லியமான கணக்கீடுகளோடு அமைக்கப்பெறுபவை ஆகும். இவை சரியாக இருந்தால் தான் தேரின் இயக்கம் சீராக அமையும். இவரது ஆற்றலையும், மரபு வழி நுணுக்கங்களையும் இவரது மகனார் மற்றும் பேரர்களுக்கும் கற்றுத் தந்துள்ளார். இப்பெரியவரின் பணிகளும், திறமையும் நாம் தலைவணங்கி போற்றும் தகுதிப்பாடுடையது என்பதில் மாறுபட்ட கருத்தே இருக்க முடியாது.

இவர்கள் தவிர தேர்ச்சீலைக் கலைஞர்கள், தொம்பை தயாரிப்பு கலைஞர்கள், . வடம் செய்பவர்கள், முட்டுக்கட்டை, சாரடிக் கட்டை போன்றவை தயாரிக்கும் தச்சர்கள் போன்ற பல கலைஞர்களின் பணிகளை நாம் தலை வணங்கி போற்ற வேண்டும். இத்தனை கலைஞர்களையும் வழி வழியாக, நூற்றாண்டு நூற்றாண்டுகளாக வழி நடத்தும் ஆரூர் எம்மான் தியாகேசனின் திருவருளுக்கு ஈடு இவ்வுலகில் வேறு எதுவும் உண்டோ?

பின் இணைப்பு - 1

## கடாரம் கொண்ட இராஜேந்திர சோழன் தேர்மேற்சென்ற ஆரூர் கல்வெட்டு.

*இடம்:- தியாகராஜ சுவாமி கருவரை வடபுற அதிஷ்டானத்தில் பத்மம், குமுதம், கண்டம் ஆகிய பகுதிகளைல் தொடங்கி மேற்கு மற்றும் தென்புறம் அதிஷ்டானங்களில் உள்ளது.*

காலம்:- 20 ஆம் ஆட்சியாண்டு (கி.பி 1032)

## கல்வெட்டு (TEXT)

*திருமன்னி வளர விருநில மடந்தையும் போர்ச்சயப்*
*பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந் தன்பெருந் தேவியராகி*
*யின்புற நெடிதிய லூழியுளிடைதுறை நாடும் தொடர்வன வேலிப்*
*படர் வன வாசியும் சுள்ளி ச் சூழ் மதிற் கொள்ளிப் பாக்கை*
*-யும் கண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்*
*பொருகட லிழத்தரசர் தமுடியும் ஆங்கவர்*
*தேவியரோங் கெழின் முடியும் முன்னவர் பக்கற்*
*றென்னவர் வைத்த சுந்தரமுடியு மிந்திரனாரமும்*
*தெண்டிரை யீழ மண்டல முழுவதும் எறிபடைக்*
*கேரளன் முறைமயிற் சூடும் குலதனமாகிய பலர்புகழ்*
*முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்*
*தொல்பெருங் காவற் பல் பழந் தீவும் செருவிற்*
*சினலி யிருபத் தொருகால் அரசுகளை கட்ட பரசுராமன்*
*மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி இருத்திய*

செம் பொற்றிடுத்தகு முடியும் பயங்கொடு
பழிமிக முயங்கியில் முதுகிட் டொளித்த
சயசிங்கனளப்பரும் புகழொடு பீடிய லிரட்டபாடி
யேழரை யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரமவீரர் சக்கரக் கோட்ட மு முதிர்பட வல்லை
மதுரை மண்டலமும் காமிடை வளை இய நாமணைக்
கோணமும் வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும் அயவில்வண்
கீர்த்தி யாதி நக ரகவையிற் சந்திரன் றொல்குலத்
திந்திர ரதனை விளை யமர் களத்துக் கிளையொடுங்
பிடித்துப் பல தனத்தொடு நிறைகுல தனக் குவையும்
சிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேருநற் கோசலநாடும் தன்ம பாலனை
வெம்முனை யழித்து வண்டுறை சோலைத் தண்ட
புத்தியும் இரணசூரனை முரணறத் தாக்சித்
திக்கணை கீர்த்தி தக்கணலாடமும் கோவிந்த
சந்தன் மாவிழித் தோடத் தங்காத சாரல்
வங்காள தேசமும் தொடுகழற் சங்கு கொட்டல்
மகிபாலனை வெஞ்சமர் வளாகத் தஞ்சு வித்தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில்
நெடுங்கடலுத்தர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத்நெறி
புனற் கங்கையும் அலைகடல் நடுவுட் பலகலஞ்
செலுத்திச் சங்கிராம விசையோத்துங்க வர்மனாகிய
கடாரத் தரசனை வாகையும் பொருகடல் கும்பக்கரி
-யொடு மகப்படுத்துரிமையிற் பிறக்கிய பெருநிதிப்
பிறக்கமும்
ஆர்த்தவனகநகர்ப் போர்த் தொழில் வாசலில்
விச்சாதிரத்
தோரணமு மொய்த்தொளிர் புனை மணிப் புதவமுங்
கனமணிக் கதவமும் நிறைசீர் விசயமுந் துறைநீர்ப்
பண்ணையும் வண்மலை யூரெயிற்றொன்மலையூரும்
ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமும் கலங்கா
வல்வினை இலங்கா சோகமும் காப்புறு நிறைபுனல்
மாப்பப் பாளமும் காவலம் புரிசை மேவி லிம்
பங்கமும் விளைப் பந்தூருடை வளைப்பந்தூரும்
கலைத்தக்கோர் புகழ் தலைத் தக்கோலமும்
தீதமர் பல்வினை மாதமாலிங்கமும் காலாமுதிர்
கடுந்திறல் விலாமுரி தேசமும் தேன்க்கவார்

பொழில் மானக்கவாரமும் தொடுகடற் காவற்
கரடுமுரட் கடாரமும் மாப்பொரு தண்டாற்
கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு
இருபதாவது உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்
அனுக்கியார்
பரவை நங்கையார் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு
திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார்
வீதி விடங்கதேவர் திருக்கற்றளி எடுப்பித்து
உடையார் வீதி விடங்க தேவர்
அனுக்கியார் பரவை நங்கையார் யாண்டு
௰அ (18) -வது நாள் ௩௰அ (38) முதல்
நாள் ௱௯௰௯ (199) வரை உடையார்
வீதி விடங்க தேவர் கோயிலில் குடத்திலும்
பத்மத்திலும் கம்பிலும் சிகரத்திலும் வாய்
மடையிலும் நாலு நாசியிலும் உள் குட்டத்தி
லும் ஆக பந்தயம் கழஞ்சோடு ஆயிரத்து
நானூற்று ஒன்றினலும் முக்கழஞ்சோடு
ஆயிரத்து நானூற்று முப்பத்தெட்டினலும்
இரு கழஞ்சோடு இரண்டாயிரத்து ஒரு
நூற்று ஒரு பத்தெட்டினலும் தகடு
நூற்றம்பத்தெட்டினலும் சீரிணி நூற்
றெருபத்தினலும் குடிஞைக் கல்லால்
மேய்ந்த பொன் இருபதினயிரத்து அறுநூற்று
நாற்பத்து முக்கழஞ்சே ஏழு மஞ்சாடியும்
வீதி விடங்க தேவர் கோயிலும் இக்
கோயில் முன்பில் மண்டபத்து சூழ்ந்த
கொடுங்கையிலும் சோபான கூடத்திலும்
கதவிலும் மேய்ந்த பொன் நிறை நாற்பத்து
ஈராயிரத்து ......... அருமொழி கூத்தனை
யோகமாராயன் உடையார் வீதி விடங்க
தேவர்க்கு சாத்தி அருளக் கொடுத்த
முத்தின் வடம் ஒன்று இதனல் முத்து
பதின் ஐஞ்சும் இராஜவர்க்கம் இரண்டு
பவழம் இரண்டும் தாளியம்பம் இரண்டும்
கோத்த அனுமடல் . . . . இராஜராஜன்
காசு நிறை கல்லால் நிறை முக்கழஞ்சே மூன்று

யாண்டுமே (17) வது நாள் நூற்றெண்பதினல்
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர் அனுக்
கியார் பரவை நங்கையார் வைத்த பொன்னின்
கைச்சாமரை ஒன்று இது அலகு நிலைப்படி
குடிஞைக்கல்லால் பொன் நாற்பத்து ஐம்பதின்
கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் இவரே
நாளது கொடுத்து பொன்னின் கைச் சாமரை
ஒன்று இதில் கடையில் காலில் கட்டின
பச்சைப் பொத்திக் கல்லு எட்டும் தடவிக் கட்டின
படிக ஜாதிக்கல்லு பதின்எட்டு இத்திருக்கை
கழலில் கட்டின பச்சை பொன் போளகக்
கல்லு பத்தும் படிகை இருபதும் இதன்மேல்
நிலை கழலில் கட்டின பச்சை பொத்திக்கல்லு
பத்தும் படிக சாதிக் கல்லு...பச்சை
பொத்திக்கல்லு பத்தும் படிக ஜாதிக்கல்லு இருபது
இதன் மேலால் பலகையில் கட்டின பச்சை
பொத்திக்கல்லு பதின் ஆறும் படிகசாதிக்
கல்லு எட்டும் இதன் மேலால் கட்டின
பச்சை பொத்திக்கல்லு எட்டும் இதன் மேலால்
பலகையில் கட்டின பச்சை பொத்திக்கல்லு
படிகக் கட்டின பச்சை பொத்திக்கல்லு
எட்டும் இதன் மேலால் பலகையில் கட்டின
பச்சை பொத்திக் கல்லு படிகக் கல்லு ஆறும்
படிக சாதிக்கல்லு முப்பத்து இரண்டும்
உட்பட பொன்னின் கைச் சாமரை ஒன்று இது
வாங்கி நிறை எடுத்தமையில் தில்லை இழநிள
உடையார் வீதிவிடங்க தேவரை திருவாராதனை செய்யுட
பத்துடையான் தாமோதிரன் அருமொழியும் எடுத்த
பாதம் ஆசாரியெனும் உடையார்க்கு பணிமார்
கொடுத்து நாளது மேற்படியார் கொடுத்த பொன்னின்
கைச் சாமரை ஒன்று இது அலகு நிலைபடி குடிஞைக்
கல்லால் பொன் நாற்பத்தொன்பதின் கழஞ்சே இரண்டு
மஞ்சாடியும் ஆறுமா இது உடையார் வீதிவிடங்க
தேவர் பணிமார் மேற்படியார் வசம் கொடுத்து
மேற்படியார் கொடுத்த பொன்னின் நாண் ஒன்றும்
இதில் கோத்த மாணிக்கம் ஒன்றும் நடுவு தடவிக்
கட்டின மாணிக்கம் ஒன்றும் வயிரம் கொ(ளு)வும்

கொக்குவாய் உட்பட... ..மேற்படியார் கொடுத்த
ஒற்றைச் சங்கு ஒன்று இதில் கட்டின பொன் உட்பட
இராஜராஜன் காசு நிறை முன்னூற்று முப்பது
கழஞ்சரை இது உடையார் வீதிவிடங்க தேவர்
திருவாராதனை செய்யும் மேற்படியார் வசம்
கொடுத்து யாண்டு பதினாராவது நாள் எண்பத்தெட்
-டினால் உடையார் வீதிவிடங்கதேவரை திருவாரா
தினை செய்யும் மேற்படியார் வசம் கொடுத்து
யாண்டு இருபதினால் யாண்டு பதினாராவது
நாள் எண்பத்து எட்டினால் இரசனைக் குறையும்
தண்டாக... .. .. ..தினையில் கண்ட
... ... ..வெள்ளை ஒன்று விளாசு பட்டிகை யாக
தைத்த பொன்னின் தகடு ஆறினாலும் மேற்படி
கல்லால் எடுக்க வந்த நிறை ஆறு கழஞ்சே முக்கால்
மூன்று மஞ்சாடியும் மேற்படியார் குடுத்த பூ தோய்த்த
பரிச் சட்டத்தில் முக மிரண்டிலும் விளிமபிரண்டிலும்
விளாசு பட்டிகையாக தைத்த பொன்னின் தகடு மேற்படி
கல்லால் நிறை பதினேழு கழஞ்சே காலே குன்றியும்
உடையார் வீதிவிடங்கதே வரை திருவாராதினை செய்யும்
மேற்படியார்கள் வசம் கொடுத்து மேற்படியார் கொடுத்த
படி

மக்கலம் ஒன்றும் இதில் தடவிக் கட்டின பச்சைக் கல்லும்
ஒன்றும் பட்ட எண்பத்தாறும் தந்தக்கையும்
இதனில் கட்டின செம்பும் செம்பின் மேல் பூசின
பொன்னும் உட்பட படிமக் கல் மூன்றினால் நிறை
முப்பதின் பலம் உடையார் வீதி விடங்க தேவர்......
... ... ... ஒன்றினால் நானூற்றம்பதின்
நாளது மேற்படியார் வரக் காட்டின முகுழ
அலகும் பொன்கட்டின திரு தட்டினால்
ஒரணையும்
மேற்படியார் வரக் கட்டின செம்பின் மேல் பொன்
சுருக்கின இது உடையார் வீதி விடங்க தேவரை
திருவாராதினை செய்யும் மேற்படியார் வசம்
யாண்டு இருபதாவது நாள் இருநூற்று முப்பத்தெட்டினால்
இத்தேவர்க்கு ஸ்ரீ காரியம் செய்கின்ற வாள்கொளி
புத்தூருடையான் முன்பு பண்டாரப் பொத்தகத்து
ஆன முதலில்லாமையில் முதல் எடுத்து

மேற்படியார் வரக் காட்டின திரு அபிஷேகம் ஒன்று இதில்
சிகாமணி ஆக கட்டின மாணிக்கம் ஒன்றுட்பட
மாணிக்கம் நூற்றிருபந் தொன்றும் . . . . . . ஐநூற்று
ஒருபத்தைந்தும் மாதகம் நாற்பத்தொன்றும் கோத்த
முத்து நாற்பத்து மூன்றும் வரையில் கட்டின இப்பி
ஒன்றும் முத்துகோத்த நூலுட்பட இராஜராஜன்
காசு நிறைகல்லால் எடுத்துவந்த நூற்றெழுபத்து காலும்
மேற்படியார் வரக் காட்டின வீரப்பட்ட மொன்றினால்
மாணிக்கம் முப்பத்தாறும் வயிரம் நூற்று இருபதும்
முத்து நாற்பத்நாறும் முத்து கோத்த. . . . . . நானூற்று
ஐந்தும் முத்து முப்பத்தி நாலும் முத்து கோத்த
நூலுமுட்பட
மேற்படி கல்லால் இருபத்தைஞ் கழஞ்சே ஆறு மஞ்சாடியும்
மேற்படி பாகு வளையம் ஒன்றும் மாணிக்கம் பதினாலும்
மரகதம் ஒன்றும் வயிரம் தொன்னூற்று எழுபத்து
முப்பத்து மூன்றும் முத்து கோத்த நூலுமுட்பட மேற்படி
கல்லால் நிறை இருபத்து முக் கழஞ்சே எண்பது
திருக்கை வளையல் ஒன்றினால் . . . . . . இரண்டினால்
மாணிக்கம் நாலும் வயிரம் இருநூற்று
நாற்பத்தொன்பதும் மோள நீள . . . . . . இரண்டினாலும்
உட்பட மேற்படி யார் . . . . . . மேற்படி கல்லால்
நிறை இருபத்தறு கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மேற்படி
ஒன்றின் கண்டம் இரண்டினில் மாணிக்கம் பதினெட்டும்
வயிரம் இருநூற்று ஐம்பத்து இரண்டும்
ஆன இரண்டு முட்பட கல்லால் நிறை இருபத்து
முக் கழஞ்சே முக்காலே மஞ்சாடிம் மேற்படியும்
நிறை காசு நிறை கல்லால் மாணிக்கம் இருபத்தி நாலும்
வயிரம் இருநூற்று நாற்பத்தி ஆறும். . . . . . . . .
ஆணி இரண்டுமுட்பட மேற்படி கல்லால் நிறை
இருபத்து நாற்கழஞ்சரையே நாலு மஞ்சாடி
கல்லால் நிறை முப்பத்தைஞ் கழஞ் சரையே
இரண்டு மஞ்சாடியும் குன்றியும். . . . . . . .திருவடிக்காரை
ஒன்றினால். . . . . . . . மாணிக்கம் இரண்டும் வயிரம்
இருநூற்று எண்ணூற்று நாலும் பொன்னில் வெள்ளி ஆன
இரண்டுமுட்பட கல்லால் நிறை முப்பத்து நாள்
கழஞ்சே யாண்டு பதினாரு நாள் எண்பத்து
எட்டினால் மேற்படியார் வரக் காட்டின உத்மா கிரகத்துக்கு
நாம் முன்னர் வைத்த பிராமணர்க்கு வெண்கலத்

தளிகை ஒன்றினுல் நிறை முப்பதின் கலமும் மேற்படி
பாதலொன்றினுல் நிறை இருபத்தொன்றின் பலம் மேற்படி
பாதலொன்றினுல் நிறை முப்பத்து முப்பலமும் ஆக இரு
நிறை
தொன்னூற்றுருபத்திரண்டு பதினைந்தாவது நாள் நூற்று
இருபத்தினுவில் மேற்படியார் வரக் காட்டின எண் சான்
நிலத்து விளக்கு ஒன்றின் நிறை இரண்டாயிரத்து நூற்று
முப்பதின் பலம் மேற்படி எண் சான் நாலுவிரல்
நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை மூவாரயித்து
...பலமும் மேற்படி ஒண்பது சான் நீளத்து விளக்கு
ஒன்றினுல் நிறை இரண்டாயிரத்து நூற்று
ஏழுனுல் பலம் மேற்படி ஒண்பது சான் நீளத்து விளக்கு
ஒன்றினுல் நிறை இரண்டாயிரத்து நானூற்று ஐம்பது
பலமும் மேற்படி ஒண்பது சான் நீளத்து விளக்கு
ஒன்றினுல் நிறை இரண்டாயிரத்து நானூற்று ஐம்பது
பலமும் ஆகவிளக்கு ஆறினுல் நிறை
பதினுன்காயிரத்து தொன்னூறு பலமும் கால்கோல்
நீளத்து விளக்கு ஒன்றுன் நிறை ஆயிரத்து எழுநூற்று
முப்பது பலமும் மேற்படி இரண்டரை அரைக்கால்
கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை ஆயிரத்து
நானூற்று 34 பலமும் மேற்படி முக்காலே
அரைக்கால் கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல்
..நிறை ஐ நூற்று ஐம்பது பலமும் ஒன்றரைகோல்
நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை ஐ நூற்று நாற்பதின்
பலமும் மேற்படி முக்கால் கோல் நீளத்து
விளக்கு ஒன்றினுல் நிறை 750 பலமும் இரண்டே
முக்கால் கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை
ஆயிரத்து... ... ...பலமும் முக்கால் கோல் நீளத்து
மேற்படி விளக்கு ஒன்றினுல் நிறை நூற்று இருபத்தெட்டு
பலமும் ஒன்றே முக்கால் கோல் நீளத்து பித்தளை
விளக் கொன்றின் நிறை அறுநூற்று அறுபதின் பலமும்
ஒன்றே முக்கால் கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல்
நிரை நூற்று முப்பது பலமும் ஒன்றே முக்கால் கோல்
நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை... ..பலமும் இரண்டு
... .. ...ஒன்றரைகோல் நீளத்து பத்து பித்தளை
விளக்கு ஒன்றினுல் நிறை ஐநூற்று இருபத்தைந்து
பலமும் ஒன்றரை கோல் நீளத்து விளக்கொன்றினுல்
நிறை நானூற்று ஐம்பதின் பலமும் இருகோல் நீளத்து

விளக்கு ஒன்றினால் நிறை ஆயிரத்து எழுநூற்று ஐம்பது
பலமும் இருகோல் நீளத்து விளக்கு ஒன்றினால் நிறை
... ... பலமும் அரைக்கால் கோல் நீளத்து
விளக்கு ஒன்றினால் நிறை எண்ணூற்று ஐம்பதின் பலமும்
ஆக விளக்கு இருபத்திரண்டும் யாண்டு இருபதாவது
நாள்... ...யார்க்கு ஸ்ரீராஜேந்திர சோழ
தேவரும் அனுக்கியார் பரவை நங்கையாரும்
தேர்மேலெழுந்தருளி புகுதிக்கி நிலுட
வைத்த விளக்கொன்றினால் நிறை மூவாயிரத்து... ...
... ... ..நாள் நூற்று முப்பதினால் மேற்படியார்
வரக்காட்டின உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார்
கோயிலில் உள்ளாளே குத்துவிளக்கு இரண்டும்
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவரும்
அனுக்கியார் பரவைநங்கை யாரும் நிற்குமிடந்
தெரியும் குத்துவிளக்கு ஒன்றும் வீதிவிடங்க
தேவர் கோயிளல்...குத்திவிளக்கு மூன்றும்
பாவை விளக்கு இரண்டும் கொடிவிளக்கு பன்னிரண்
-டு நெய்தாங்கி உள்ளிட்டு ஒரு பதின் மூன்றும்
பள்ளித் தொங்கல் ஆக விளக்கொன்றும் ஆக விளக்காறும்
உடையார் வீதிவிடங்க தேவர் கோயிலில் சூழ எரியும்
விளக்கு நாலும் யாண்டு பதினாராவது முன்
பண்டார பொத்தகத்து இசைனக்குரை
-யுடையான் சோதினையில் கண்ட விளக்கு
பெருந்தரம் அருமொழி......வந்த நிறை
ஆயிரத்து முன்னூற்றுப் பலமும் மேற்படியார்
கொடுத்த விளக்கொன்று இது அலகு நிலைப்படி
இருநூற்றென் பத்தொன்பதின் பலவென்று இ..
எடுக்க வந்த நிறை ஆயிரத்து இருநூற்றையம்பதின்
பலம் யாண்டு இருபது நாள் நூற்று மூன்றினால்
அனுக்கியார் பரவை நங்கையார்க்கு வந்த ஆ..
..ச்சட்டதி.........ன ரி நுழை..
தூக்கத்தில் முத்து ஒண்பதும் இதனில் திருப்பூ
பதினொான்றும் தடவிக் கட்டின கல்லொன்றும்
வட்டப்பூ ஒன்றினுள் முத்திருபத்து மூன்றும்
தடவிக் கட்டின கல் ஒன்றும் காப்பு பதினொன்றும்
மயிலொன்றினில் முத்தேழும் பச்சை பொத்திக்
கல்லு நாலும் தடவிக் கட்டின நூலும்

நிருப்பூ.....கல்லு......தடவிக் கட்டின
......குட்டப்பூ ஒன்றினால் முத்திருபத்தெட்டும்
செய்த தாலியினால் முத்து இருபத்தினாலும் குடப்பூ
ஒன்றினில் முத்து இருபத்தெட்டு தடவிக்கட்டின
கல்லு மூன்றும் தருப்புதினாலும் கெழுந்தொன்றினில்
முத்து இருபத்தேழும் இதில் தடவிக்கட்டின கல்லு
ஒண்பதும்... ..தாலி ஒன்றினில் கள்ளிப்பூ
பன்னிரண்டும் வட்டக்கண் பன்னிரண்டும் மாழ்
பொன் ஒன்றும் தாலி யொன்றினில் மாணிக்கம்
ஒன்றும் தடவிக்கட்டன கல்லு ஒன்றும்
வயிரம் ஆறும் கொக்குவாய்யொன்றும் உள்ளிட்ட
மாணிக்கத் தாலி... ...முக்காலும் . ...ஒன்றினில்
நிறை...நூற்றெட்டும் மாணிக்கம் மூன்றும்
வயிரம் ஒண்பதும் கொளுவுங் கொக்குவாயும்
கோத்த தாலுமுட்பட நிறை ஐங்கழஞ்சே முக்காலே
மஞ்சாடியும் திரமக் கூட்டுக்கும்... ... ...
இக்கட்டை முத்து வாள் இரண்டினால் முத்துநாலும்
இதில் கோத்த நூபலுடநிறை கழஞ்சே மூன்று மஞ்சாடியு
குன்றியும் முத்துங் முத்திரண்டினில் தடவிக் கட்டின
கல்லு இரண்டும் தருப்பு ஆறு இது.. ...மஞ்சாடியும்
குன்றியு முத்தினுட முத்திரண்டின் தடவிக் கட்டின
கல்லு இரண்டும் தருப்பு ஆறும் நிறை கழஞ்சே
எழுமஞ்சாடியும் குன்றியும் கெம்பு மோதிரம்
இரண்டினில் தடவிக்கட்டின கல்லு இரண்டும்
தருப்பு பதினாரும் இதனில் பொன்னுமுட்பட
நிறை கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும்
பச்சை பாவை உமை நங்கைக்கு மேற்படியார்
வரக்காட்டின இரட்டை மணி ஒன்றினால்
முத்து நாலும் பொன்னுமுட்பட நிறை காலும்
கம்பி ஒன்றினால் ஓரனையினால் நிறை மூன்று
மஞ்சாடியும் ஒன்றைத்தாலி மணி ஒன்றினால் நிறை
காலே கழஞ்சே மூன்று மஞ்சாடியும் முத்து வடம்
ஒன்றினால் முத்து நாலும் கோத்த நூலு முட்பட
நிறை மூன்று மஞ்சாடி பச்சை பாவை உமை
நங்கைக்கு கையில் பரிசில் சிந்தாமணி
ஆறினால் பொன் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும்
இடையில் முத்துவடம் ஆறினால் ....உட்பட

நிறைகாலே மஞ்சாடியும் காலில் பரிசில் சிந்தாமணி
ஆறினல் பொன் கழஞ்சே ஏழு மஞ்சாடி......
கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் குன்றியும்
காலில் மையிலா ,,,,,, மஞ்சாடியும்
இரண்டு.,,....,.. விளாப்பட் டிகை தைத்த சிவப்பு
சிலையும் பொன்னுமுட்பட நிறை கழஞ்சரையும்
அரையில் கட்டின முடக்கில் தைத்த முத்தின் பட்டிகை
ஒன்றினல் முத்து நூற்று ஐம்பத்து ......... நாலும்
கொளுவுங் கொக்குவாயும் உட்பட நிறை
கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் இதில்
தவலினலினல் முத்து தொன்னூற்று மூன்றும்
பலகை ஒன்றும் கொக்கு வாய்முட்பட
நிறை கழஞ்சும் இந்த பாவை சரியா முலை நங்
கைக்கு பொன்னின் இட்ட வாளில் பொன்
காலே குன்றியும் கம்பி இரண்டினல் பொன்
காலும் இசாடியுங் குன்றியுங் முத்து கோர்த்த
மணியும் தாலியும் மொன்றினல்......நிறை
கழஞ்சே மஞ்சாடியுங் குன்றியுங் முத்துவடம்
ஒன்றினல் முத்து இருபத்திரண்டும்
கோத்துநூலுமுட்பட நிறை மூன்று மஞ்சாடியும்
கையில் வடமும் சரியுமே முன்கை
......ஞல் பொன் முக் கழஞ்சே
காலும் கிளியின் க......த்திலேறின காரை
ஒன்றினல் பொன் மஞ்சாடியும் மட்டப்பரிசு
பன்னி......கட்டின முத்தின் கள்ளிப் பூ
ஒன்றினில் முத்து தொன்னூற் றஞ்சு...
கொளுவும் கோத்த......

(முன் மண்டபக்கட்டுமானத்தில் உள்ள பிற்கால இணைப்பு களால் கல்வெட்டின் பிற்பகுதி மூடப்பட்டுள்ளது.

## திருவாரூர் கல்வெட்டு எண்-77

இடம் :- முதல் பிரகாரம் – தியாகராச சுவாமி கருவறை முன் மண்டபம் வடபுறச்சுவர்.

மன்னன் :- இரண்டாம் இராஜேந்திர சோழன்

காலம் :– 9-ஆம் ஆட்சியாண்டு—கி. பி. 1061 – 61

பின் இணைப்பு -2

உ

சர்வம் சிவமயம் ஜெகத்.

# திரு ஆரூர்

# திருத்தேர்

## நூதன பிரதிஷ்டா கைங்கரிய

# பத்திரிகை.

சித்தந் தெளிவீர்காள்
அத்தனாரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தியாகுமே.

திருவாரூர். 22—3—28

உ

கணபதி துணை.

ஸ்ரீ வீதிவிடங்கத் தியாகராஜ பரப்பிரம்மணே நம:

# திருவாரூர் திருத்தேர் திருப்பணி விண்ணப்பம்.

---

திருச்சிற்றம்பலம்.

தேவாரம்.

போழொத்த வெண்மதியஞ் சூடிப் பொலிந்திலங்கு
வேழத்துரி போர்த்தான் வெள்வளையா டான்வெருவ
ஊழித்தீ யன்னானை யோங்கொளிமாப் பூண்டதோ
ராழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே.

சோழவள நாட்டில் காவிரி நதியின் தென்பாலுள்ளதும், விராட் புருஷனுடைய மூலாதார ஸ்தலமெனவும், பூமிதேவியின் ஹ்ருதய கமல ஸ்தலமெனவும், பஞ்சபூத ஸ்தலங்களுள் பிருதிவிஸ்தலமெனவும், தேவர்கள் கறையான் வடிவு கொண்டியற்றிய புற்றை இடமாகக் கொண்டு பரமசிவன் சிவலிங்கப் பெருமானாகத் தோற்றினமையின் வன்மீகபுரமெனவும், தன்பாற் பிறந்தவர்களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க

முத்திதரும் ஸ்தலமெனவும், ஆதிபராசத்தி தவஞ்செய் தமையின் பராசத்தி ஸ்தலமெனவும், திருமகள் வழி பட்டுப் பேறுபெற்றமையாற் கமலாலயமெனவும், வீதி விடங்கராகிய ஸ்ரீதியாகராஜப் பெருமான் எழுந்தருளி யிருத்தலின் வீதிவிடங்கமெனவும், தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங்களாதலின் ஸ்பரிசதோஷ முதலியன இல்லாத பெருமை வாய்ந்ததெனவும், எல் லாப் பாவங்களிலும் மிகக் கொடிய பாவமாகிய நன்றி கொன்ற பாவத்தையும் தீர்க்கும் மகிமை வாய்ந்ததென வும், ஸ்ரீகாசிக்கும், தில்லைக்கும், மேலானதெனவும், ஸப்தவிடங்க ஸ்தலங்களுள் முதலாவதெனவும், பாராட்டப்பெற்று விளங்கும் நிறைசெல்வத் திருவா ரூரை அறியாதவர் யாவர்?

அஜபாரஹஸ்யம், ஆடகேச்வரமஹாத்மியம், கம லாலய மஹாத்மியம், நாகர கண்டம், தியாகராஜ லீலை, சமத்காரபுர மஹாத்மியம், தியாகராஜ மஹாத்மியம், தேவயாகபுர மஹாத்மியம், தேவாஸ்ரய மஹாத்மியம், முசுகுந்தபுர மஹாத்மியம், ராமகயா மஹாத்மியம், ஸ்ரீபுர மஹாத்மியம், ஸ்கந்தபுர மஹாத்மியம், க்ஷேத் திரவர மஹாத்மிய மென்னும் வடமொழி நூல்களை யும், அவற்றுள் கமலாலய மஹாத்மிய முதலிய மூன் றன் மொழி பெயர்ப்பாக முறையே உள்ள கமலாலய மான்மிய முதலிய மூன்று தமிழ்ப் புராணங்களையும், திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருப் பதிகம் ஐந்தையும், திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருப்பதிகம்இருபத்தொன்றையும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருப்பதிகம் எட்டையும், திருவாசக முதலிய திருமுறைகளிலுள்ள அருமைப் பாடல்கள் பலவற்றையும், சேரமான் பெருமான்

நாயனூர் அருளிச்செய்த மும்மணிக்கோவை முதலிய அருமைப் பிரபந்தங்கள் பலவற்றையும், மிக இனியன வாய் வடமொழியிலும் தென்மொழி முதலியவற்றிலும் பற்பல பெரியோர்களாற் செய்யப்பெற்றுள்ள ஸ்தோத் திரங்களையும் இனிய கீர்த்தனங்களையும், மிகப்பலவாகிய தனிப்பாடல்களையும் பெற்று விளங்குவதும் இந்த ஸ்தலமே.

கழற்சிங்க நாயனூர், செருத்துணை நாயனூர், சோமாசிமாற நாயனூர், தண்டியடிகள் நாயனூர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடிகள், விறன்மிண்ட நாயனூர் என்பவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற க்ஷேத்திரமும், சோழவரசர்கள் முடி கவித்தற்குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன்றுக இருந்ததன்றி அவர்களுடைய இராசதானியாக வுள்ளதும், சங்கர சேவகனென்னும் சோழராசனது வேண்டுகோளின்படி ஸ்ரீதியாகேசர் அரசவடிவங்கொண்டருளிப் பல வருடம் அரசாட்சி செய்ததும், மனுநீதிச் சோழர் ஒரு பசுவின் குறையைத் தீர்த்தற் பொருட்டுத் தம் செல்வப் புதல்வன்மீது தேரைச் செலுத்தித் திருவருளை வெளிப்படுத்தியதும், ஸ்ரீதியாகேசர் பாதஞ்சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பால் தூது சென்ற பெருமை வாய்ந்ததும், ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனூர் திருத்தொண்டத்தொகையை அருளிச் செய்தற்கும் தெய்வத் திருமுறைகளை வெளிப்படுத்திய ஸ்ரீ அபயகுலசேகர மகாராஜா முதலியோர் அரசாட்சி செய்தற்கும் இடமாயிருந்ததும் இந்த க்ஷேத்திரமே.

கலிசெலா நகரம், சக்திபுரம், சமத்காரபுரம், தேவாஸ்ரயம், முசுகுந்தபுரம், மூலாதார நகரம், ஸ்ரீநகரம் என்பன முதலிய காரணப்பெயர்கள் வாய்ந்ததும், அஜு

பத்து நாலு புண்ணிய கட்டங்களாற் சூழப்பெற்று, ஒரு யாகம் நடந்தபொழுது மக ரிஷிகளால் பிரதிஷ்டிக்கப்பெற்ற நடுவ நாயனாரென்னும் மூர்த்தி பரிவாரங்களுடனே எழுந்தருளி யிருக்கும் திருக்கோயிலைத் தன்னிடையே கொண்டு விளங்குவதான தேவ தீர்த்தம், உருத்திரகோடி, கயை, சங்க தீர்த்தம், சர்வ தீர்த்தம், சூரிய புட்கரணி, வாயு தீர்த்தம், விசுவாமித்திர தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களாற் சூழப்பெற்றதும், அகத்தியர், அசன், அரிச்சந்திரன், இடையனொருவன், இந்திரன், இராமன், கருணாகரத் தொண்டைமான், குலிசராஜன், கேமசருமன், கோகரணர், கோடி முனிவர், சங்க முனிவர், சண்டதருமன், சமத்காரவரசன், சனகாதியர் நால்வர், சித்தரொருவர், சித்தீசனென்னுமரசன், தசரதர், தசார்ணவ தேசத்தரசன், திரிசங்கு, திருடனொருவன், திருமகள், திருமால், துருவாசர், நளன், பசுவொன்று, பட்டினசாமி யென்னும் ஒரு வணிகன், பதஞ்சலி, பிரமர், மனுநீதிச் சோழர், மன்மதன், முசுகுந்த சக்கரவர்த்தி, மூன்றரைகோடி புண்ணிய தீர்த்தங்கள், மேனகை, வாணாசுரன், விசுவாமித்திரர் முதலியவர்கள் வழிபட்டுப் பேறு பெற்றுய்ந்ததும், அடிமுடி தேடிய திருவீதி, செந்தாமரை நாறிய திருவீதி, பொன் பரப்பிய திருவீதி, புகழாபரணத் திருவீதி முதலிய வீதிகளாற் சூழப்பெற்றதும், கோயில், குளம், செங்கழுநீரோடை என்பனவற்றுள் ஒவ்வொன்றையும் ஐயைந்து வேலிகளாகக் கொண்டதும், பூங்கோயிலென்று பாராட்டப்பெற்ற திருமூலட்டான விசேடமுடையதும், தரிசனத்திற்கு வரும் தேவர்கள் முதலியோர் சமயம் பார்த்துக்கொண்டு தங்கி யிருத்தற்கு இடமாக இருப்பதுபற்றித் தேவாஸ்ரயமென்று சிறப்புப்பெயர்வாய்ந்த

ஆயிர்க்கால் மண்டபத்தை யுடையதும், 'முத்து விதானம்' என்னும் திருப்பதிகத்தால் திருநாவுக்கரசு நாயனார் மிகப் பாராட்டியருளிய மார்கழித் திருவாதிரைத் திருநாள் திருவிழாச் சிறப்பு வாய்ந்ததும், திருவந்திக் காப்பு விசேடமுடையதும், திருவாரநெறி, பரவையுண் மண்டளியென்னும் தேவாரம் பெற்ற இரண்டு ஸ்தலங்களையுடையதும் இதுவே.

இத்யாதி பெருமை வாய்ந்த இந்த மஹா க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீ அஜபா நடனத் தியாகராஜமூர்த்திக்கு ஸ்ரீ முசுகுந்த சக்கரவர்த்தியால் வைவஸ்வத மன்வந்தரத்திற் செய்விக்கப் பெற்றதும், அக்காலந்தொடங்கி இன்று வரையில் சோழராஜாக்கள் முதலியவர்களால் பரிபாலனஞ்செய்யப் பெற்று வந்ததும், "ஆழித்தேர் வித்தகனை யான்கண்டதாரூரே" எனவும் "தேரூரும் நெடுவீதி" எனவும் அப்பர் சுவாமிகளால் தேவாரத்திற் சிறப்பித்து பாடப் பெற்றதும், "தேராரும் நெடுவீதி" எனப் பெரிய புராணத்துள். சேக்கிழார் சுவாமிகளால் பாராட்டப் பெற்றதுமாகிய திருவாரூரின் கண்ணுள்ள பிரதமத் திருத்தேர் கலி காலத்தின் கொடுமையால் சென்ற இரண்டாண்டுகட்கு முன்பு தீவாய்ப் பட்டமை அன்பர்கள் அறிந்ததேயாம்.

அத்திருத்தேரை விதிப்படிப் புதுப்பிக்க எண்ணிச் சில மெய்யன்பர்களின் பொருளுதவியைக் கொண்டு வேலை ஆரம்பித்துச் சில பல வேலைகள் நடந்து வருகின்றதும் அன்பர்கள் அறிந்ததொன்றும்.

இனி அவ்வேலை முற்றுப்பெற இன்னும் பல்லாயிரக்கணக்கான பொருள் வேண்டியிருக்கிறபடியால் பல துளி பெருவெள்ளம் என்றபடி இதனைக் கண்ணு

றும் மெய்யன்பர்கள் தங்கள் தங்களால் இயன்ற பொரு ளுதவி புரிந்து எல்லாம் வல்ல நமதிறைவனுகிய ஸ்ரீ வீதிவிடங்கத் தியாகராஜப் பெருமானின் இரதத் திருப்பணியை முற்றுப் பெறச் செய்து அப்பெருமா னின் இரதாரோகண திருவுலாக் காட்சியைக் கண்டா னந்தங்கொண்டு இம்மை மறுமைப் பயன்களை யடைய வேண்டுகின்றோம்.

திருக்கோவையாரில்
"முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியும்" என்று நமது மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந் தருளி யிருப்பதினுலேயே எதற்கும் பொருள் இன்றி யமையாத தென்பது புலனுகின்றது.

திருப்பணிசெய் வார்க்குச் சிவனையுன்னிச் செம்பொன்
 விருப்புடனீ வார்பெறுக வீடு
உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
 செய்வார் பெறுக சிவம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அறன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்.

ஸ்ரீ தியாகராஜப்பெருமான் திருத்தொண்டர்கள்.

திருவாரூர்,
22—3—28.